தமிழ்நயம் '92

Published By,

ROYAL COLLEGE TAMIL LITERARY ASSOCIATION

With Best Compliments

from

VIDYA SILPA

Manufacturers and Suppliers of :

Scientific Equipment and Apparatus.

Mini Hydro Electric Systems

Solar Electric Power Units for T. V. Operations

Home Lighting and Water Pumping

Office & Factory :
19, Meetotamulla Road, Wellampitiya.
Telephone : 572207
Show Room :
' Benville Court ', 1041, Maradana Road, Colombo - 8.
Telephone : 685000
Cable : VIDUSIP Wellampitiya. Telex : 21494 GLOBAL CE

COVER DESIGN BY : THAVACHELVAM SITPARAN & A. C. RIYAS MOHAMED

The Loyalty Pledge

" I pledge with all my heart
that, wherever I may be,
I shall always remember with
love and loyalty my alma
mater, Royal College that
taught, guided and moulded
me to be what I am.

I also pledge that now
and in the future, both in
word and deed, I shall keep
her fame inviolate
and strive to repay the
immeasurable debt I owe
to the school that nurtured
me to man's estate "

சமர்ப்பணம்

புகழ்தரும் றோயல் மாணவர் படைப்பு
தமிழ்நயம் என்னும் நாமம் படைத்து
கலைநயம் பலதரும் கருத்துக்கள் இசைத்து
சபைநயம் கவர உங்கள் கரங்களில் தவழ்ந்திடும் — இதழ்
மொழிநயம் சொல்லி நலிவிலா வாழ்வுறும்
முத்தமிழ் காவலன் விபுலாநந்தரின்
வித்தகப்பாதச் சமர்ப்பணமாகும்.

With Best Compliments

from

VIDYA SILPA

Manufacturers of

Scientific Equipment and Apparatus

Mini Hydro Electric Systems

Solar Electric Power Units for T. V. Operations

Home Lighting and Water Pumping

Office & Factory :

19, Meetotamulla Road, Wellampitiya.

Telephone : 572207

Show Room :

Benville Court, 1041, Maradana Road, Colombo - 8.

Telephone : 685000

Cable : VIDUSIP Wellampitiya Telex : 21494 GLOBAL CE

COVER DESIGN BY THAVACHELVAM SITPARAN & A. C. RIYAS MOHAMED

றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்
பெருமையுடன் வழங்கும்

கலை விழா'92

சிறப்பிதழ்

காலம் : கார்த்திகைத் திங்கள் முதலாம் நாள் [16-11-92]
திங்கட்கிழமை மாலை 4.00 மணி.

இடம் : நவ நாடக மண்டபம்

பிரதம இதழாசிரியர் : சாள்ஸ் நவீனன் அன்ரனிப்பிள்ளை

துணை இதழாசிரியர்கள் : தவச்செல்வம் சிற்பரன்
கந்தசாமி நரேஷ்குமார்
கனகசபாபதி சதீஸ்குமார்

Royal College

TAMIL LITERARY ASSOCIATION

PRESENTS

KALAI VIZHA'92

Date : **Monday the 16th of November 1992**
Time : **4.00 p. m.**
Venue : **Navarangahala**

Chief Editor : Charles Naveenan Antonypillai

Co. Editors : Thavachelvam Sitparan
Kandasamy Nareshkumar
Kanagasabapathy Sadeeskumar

தமிழ் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

COLLEGE SONG

1. Thy spirit First to life awoke
In eighteen hundred and thirty five:
Beneath the sway of Marsh and Boake,
Thenceforth did Lanka's learning thrive

Refrain

School where our fathers learnt the way before us,
Learnt of books and learnt of men, Through thee we ll do the same
True to our watchword 'Disce Aut Discede'.
We will learn of books and men, and learn to play the game

2 Within thy shades our fathers trod
The path that leads to 'man's estate:
They have repaid the debt they owed
They kept the fame inviolate

3. And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak;
Our lusty throats now raise a cheer
For Hartley, Harward, Marsh and Boake.

எம் கருத்து

றோயல் கல்லூரி மாணவர்களது தமிழார்வத்திலே பிறந்து ஆசிரியர்களது ஆதரவிலே வளர்ந்து வரும் தமிழ் நயத்தின் இவ்வாண்டுக்கான இதழ் விபுலாநந்த அடிகளின் நூற்றாண்டு விழாவையொட்டி அவரது பாதத்துக்கு அர்ப்பணமாக்கப்பட்டுள்ளது.

தங்கத்தாத்தா தாகூர் எழுதிய சிறிய கவிதை எனக்கு நினைவுக்கு வருகிறது.

> ''யார் எனது வேலையைப் பொறுப்பேற்கப் போகிறீர்கள்? எனக் கேட்டது
> அஸ்தமிக்கும் சூரியன் பூமியோ சித்திரப்பாவைபோல மௌனமாய் இருந்தது.
> ஆனால் மண்விளக்கோ ''என்னால் ஆனதை செய்கிறேன் பிரபு'' என்றது.

அந்த மண் விளக்கைப்போல் எம் மாணவர்களும் தம்மால் ஆன அளவு கதைகள், கவிதைகள், கட்டுரைகள், விகடத்துணுக்குகள் மூலம் தமிழ் நயத்துக்கு ஒளி கொடுத்துள்ளார்கள். அம் மாணவர்களது ஆக்கங்களுக்கு வாசக அன்பர்களது ஊக்கமும், உற்சாகமும் என்றும் இருப்பதாக.

இம் மாணவர்களது முயற்சிக்கு ஊன்றுகோலாகவும் தூண்டுகோலாகவும் விளங்கிய ஆசிரியர் அனைவருக்கும் குறிப்பாக திருமதி பி. சி தம்பாப்பிள்ளை, திரு எம். கணபதிப்பிள்ளை, திரு எஸ். இரத்தினசபாபதி அவர்களுக்கும் கடப்பாடுள்ளவர்களாயிருக்கிறோம். தமிழ் இலக்கிய மன்றத்தின் முன்னைய தலைவராகவும், நாடக மன்ற நவரச ஆசிரியராகவும் இருந்த செல்வன் ருஷ்டி அமீர் அவர்கள் தமது அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொண்டது மட்டுமன்றி அவ்வப்போது வேண்டிய உதவிகளையும் ஆர்வத்துடன் அளித்து வந்தது குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும்.

நன்றி

இதழாசிரியர்கள்:- சாள்ஸ் நவீனன் அன்ரனிப்பிள்ளை
தவச்செல்வம் சிற்பரன்
கந்தசாமி நரேஷ்குமார்
கனகசபாபதி சதீஸ்குமார்

பிரதம அதிதியின் ஆசிச் செய்தி

இலங்கையின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குவது றோயல் கல்லூரியாகும். 1835ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி தனது வளர்ச்சிப்பாதையில் பல நூற்றுக்கணக்கான தலைவர்களை சிருஷ்டித்துள்ளது. நாட்டின் தலைவர்கள் பலர் இக்கல்லூரியில் கல்வி பயின்றவர்களே.

றோயல் கல்லூரி கல்வித்துறையில் மட்டுமல்ல ஏனைய புறக்கிருத்தியதுறைகளிலும் முன்னணியில் நிற்கிறது. விளையாட்டுத்துறை, கலைத்துறை, இலக்கியத்துறை போன்றவற்றில் இக்கல்லூரி சளைக்காமல் தொடர்ந்தும் வருடாவருடம் சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டே வருகிறது.

இந்த நிலையில் இக்கல்லூரியில் இயங்கிவரும் மன்றங்களின் சேவையையும் பார்ப்பது அவசியமாகிறது. இங்கு பல மன்றங்கள் பல நல்ல நிகழ்ச்சிகளை வருடந்தோறும் நடத்திவருவதை என்னால் அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. அத்தகைய மன்றங்களில் ஒன்றாக தமிழ் இலக்கிய மன்றமும் விளங்குகிறது.

தமிழ் இலக்கியமன்றம் தனது பொன்விழாவை பூர்த்தி செய்திருக்கிறது. அத்துடன் அது தனது 31 ஆவது கலைவிழாவையும் நடத்துகிறது. மேலும் வருடந்தோறும் வகுப்புகளுக்கிடையிலான, பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரைப் போட்டிகளையும் பேச்சுப்போட்டிகளையும் நடத்தி வருகிறது.

இதனது பணி சிறப்பாக அமைந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக இம்மன்றத்தின் விவாதக்குழு கடந்த ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான விவாதச்சுற்றுப் போட்டிகள் மூன்றிலும் வெற்றி பெற்றதை காட்டலாம்.

கலைவிழாவை குறிக்கும் முகமாக இம்மன்றம் வருடந்தோறும் 'தமிழ் நயம்' என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது. இவ்வாண்டும் 'தமிழ் நயம்' மலரப்போகிறது என்பதை அறிவதில் மகிழ்ச்சியடைகிறேன். இது தனது பெயருக்கு ஏற்ப ரசிகர்கள் மத்தியில் நற்பெயர் பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இம்மலரை வெளியிட உதவிய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள், மற்றும் நலன்விரும்பிகளையும் இவ்விடத்தில் பாராட்டவேண்டும்.

தொடர்ந்தும் றோயல் கல்லூரியும், அதன் மன்றங்களும் தமிழ் பணியை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாகுக.

கௌரவ எம். எஸ். செல்லசாமி
கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

Message from the Principal, Royal College

Our Tamil Literary Association has implemented a very comprehensive and ambitious programme of work consisting of Inter-House and Inter-School debates and contests in oratory, composition and reading at the Junior, Intermediate and Senior levels. Its members have also represented the College at literary functions of other schools and at Tamil Day contests organised by the Ministry of Cultural Affairs. It is thus quite apparent that it has played a significant role not only in the life of this College but also in nurturing the Tamil cultural heritage among students at large.

The Kalai Vizha is the highlight of the Association's calendar consisting as it does of items covering almost the whole range of literary and cultural activity. This annual event has always maintained high standards and I have no doubt that this year's Kalai Vizha will follow suit.

I thank the Teachers in charge Mrs. P. C. Thambapillai, Mr. M. Kanapathipillai, Mr. S. Ratnasabapathi, and Mr. R. Rajasooriyar for all their efforts and dedication in furthering the interests of our Tamil Literary Association and the organisers of this event for which I wish outstanding success.

B. Suriarachchi,
Principal, Royal College.

தமிழ்த்துறைத் தலைவரின்

ஆசியுரை

பேரன்புடையீர்,

தமிழன்னை சீரும் சிறப்புமுற்றுப் பேருவகை கொள்ளும் மற்றுமொருநாள் இது.

முப்பெரும் விழா எடுத்து முத்தமிழுக்கு அன்று முடிசூட்டியவர்கள் மூவேந்தர்கள். ஆனால் இன்று. இந் நவீன உலகில், இயல் இசை நாடகம் எனத் தனித்தனி விழா எடுத்து எம் அன்னையாம் தமிழை அலங்கரிப்பவர்கள் எமது இளவல்கள்தான் என்றால் மிகையாகாது. இத்தினத்தில் றோயல் கல்லூரியின் நவநாடக மண்டபத்தில் அரங் கேறுவது இயற்றமிழின் பெருமை.

இத்தகை சிறப்பு வாய்ந்த இவ்விழாவின் இனிமையின் சின்னமாம் ''தமிழ் நயம்'' இதழிற்கு இச்செய்தியை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

றோயல் கல்லூரியின் இலக்கிய வளர்ச்சிக்குத் தன் வாழ்நாளின் ஒரு தசாப் தத்தையே அர்ப்பணித்தவர் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியை திருமதி சித்திரா தம்பாப்பிள்ளை. இவரின் தன்னலமில்லாச் சேவை இலக்கிய மன்றத்திற்கு ஒரு வரப் பிரசாதம். இலக்கியங்களைக் கற்றறிந்தவர்கள் கூறுவர் ஒவ்வொரு காவியத்தினதும் உயிர்நாடியாக ஒரு நாயகியே இருப்பாள் என்று. றோயல் கல்லூரியின் இலக்கிய மன்றமே ஒரு காவியம் என்றால் அதன் காவியநாயகி திருமதி தம்பாப்பிள்ளைதான்.

இம்மன்ற நடவடிக்கைகளுக்குப் பேருள்ளத்துடன் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கிய ஆசிரியர்களின் பணி பாராட்டத்தக்கது. குறிப்பாக திரு மா. கணபதிப் பிள்ளை, திரு சி. இரத்தினசபாபதி, திரு இ. இராஜசூரியர், திருமதி யஸ்மின்முனாஸ் ஆகியோரின் பங்களிப்புச் சிறப்பாக எடுத்துக்கூறப்படவேண்டும்.

கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தின் மாணவர் தலைவர், செயலாளர், பொருளாளர், இதழாசிரியர்கள் மற்றும் செயற்குழு, அமைப்புக்குழு உறுப்பினர்களின் கடின உழைப்பும், இலக்கிய ஆர்வமும் பாராட்டப்பட வார்த்தைகளே இல்லை. இச் சிறார்கள் இலக்கியப்பணி புரிவதைப் பார்க்கும்போது இவர்களெல்லாம் இதற்காகவே பிறந்து விட்டவர்கள் எனும் எண்ணம் உதிப்பது தவிர்க்க முடியாததாகும்.

றோயல் கல்லூரியின் கலைச்சங்கங்களுள் மூத்த சங்கமான தமிழ் இலக்கிய மன் றத்தின் இலக்கியப் பணி மென்மேலும் சிறப்படைய எனது நல்வாழ்த்துக்கள். இக் கலைவிழா இனிதே நிறைவுறவும் என் நல்லாசிகள்.

அன்புடன்

வே. சிவானந்தநாயகம்
தமிழ்த்துறைத் தலைவர்

றோயல் கல்லூரி,
கொழும்பு.

பொறுப்பாசிரியையின்

ஆசிச் செய்தி

இவ்வருடமும் இந்நன்னாளில், உங்கள் முன் அரங்கேறும் இக்கலை விழாவை முன்னிட்டு வெளிவரும் "தமிழ் நயம்'' எனும் இவ்விதழில், என் அருமை மாணவருக்கு ஆசி மொழிகள் சில கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்பது சான்றோர் வாக்கு.

இத்தகைய, தேனிலே ஊறிய, செந்தமிழின் சுவை எங்கும் பரவிடவும், எத்திசையிலும் அதன் புகழ்மணம் வீசிடவும், செய்திடும் நோக்குடனேயே றோயல் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றம் அன்றும், இன்றும், என்றும் செயல்பட்டு வருகிறது.

இம்மன்றத்தின் பல்வேறு முயற்சிகளில் ஒன்றுதான் முத்தமிழின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுமுகமாகவும், இளம் கலைஞர்களான மாணவச் செல்வங்களின் கலையுணர்வினையும், கலையார்வத்தினையும், வளர்க்குமுகமாகவும், பல்லாண்டு காலமாக, இக்கல்லூரியில் வருடத்துக்கொருமுறை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வரும் விழாவான கலைவிழாவாகும்.

இக்கலைவிழாக்கள், தமிழ்க் கலைகள், அனைத்தையும் தழுவி, அவற்றின் தொன்மையையும், மேன்மையையும், எடுத்துக்காட்டுவதோடு, அவற்றிற்குப் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. இந்நோக்குடனேயே, கொழும்பு நகரிலுள்ள பாடசாலைகளுக்கிடையேயும் பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், நட்புறவு விவாதங்கள் என்பவற்றை நடாத்தி, எமது கல்லூரி மாணவரின் தமிழ் வளர்ச்சியில் மட்டுமன்றி, ஏனைய பாடசாலை மாணவரின் தமிழ் வளர்ச்சியிலும், ஆர்வம் காட்ட அடியெடுத்து வைத்துவிட்டது, றோயல் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றம். எம் மாணவரின், தணியாத ஆர்வங்களும், அயராத முயற்சிகளும், குறைவிலாத் திறமைகளும் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியனவே, வாழ்க அவர்களின் அரும் பணிகள்!

மேலும் இவையனைத்தையும் நடத்துவதற்கு, எமக்கு எப்பொழுதும் பெரும் ஒத்துழைப்புத் தந்துவரும் எமது கல்லூரி அதிபர் திரு. பு. சூரியாராச்சி அவர்கட்கும், உப அதிபர்களுக்கும் மற்றும் தோளோடுதோள் நின்று உதவிகள் பல புரிந்துவந்த சகதமிழ் ஆசிரியர்கட்கும் எனது நன்றிகள் பல.

தனது 54 வருட வரலாற்றிலே, பல சாதனைகள் புரிந்த எம் மன்றம், தொடர்ந்து பல கலைவிழாக்களை இனிவரும் காலங்களிலும் நடத்தவேண்டும் என மனமார வாழ்த்தி இறுதியாக, எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடை பெறுகிறேன்.

திருமதி பீ. சி. தம்பாப்பிள்ளை
பொறுப்பாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

தமிழ்
இலக்கியமன்ற செயலாளரின்
சிந்தனையிலிருந்து

எங்கள் உழைப்பால் விளைந்த இந்த வண்ணமலரை நீங்கள் நுகர்கின்றீர்கள். தொட்டனைத்து ஊறும் மணற்கேணிபோல, கற்றனைத்து அறிவு மணம் பரப்பவல்ல ''தமிழ் நயம்'' உங்கள் கரங்களிலே தவழும் இவ்வேளை அதனூடாக உங்களுடன் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

''தமிழ் நயம்'' உங்கள் கரங்களிலே தவழும்பொழுது உங்கள் கண்கள மகிழ்வால் மலருகின்றனவே, இதயங்கள் இன்பப்பண் இசைக்கின்றனவே, இதழ்களிலே களிப்புநகை அரும்புகின்றதே அவை கண்டு நாம் பெற்றதாய் உற்றதன் அருங்குழவியைச் சான்றோன் எனக்கேட்டுப் பெரிதுவப்பது போன்று பெருமையுறுகின்றோம், பெருமகிழ்வெய்துகின்றோம்.

இவ்வருடம் எம் மன்றத்தின் செயற்பாடுகள் திருக்குடும்பக் கன்னியர் மட மாணவியர்களுடனான சினேகபூர்வ விவாதத்துடன் ஆரம்பமாயின. சென்ற ஆண்டைப்போல் இவ்வாண்டும் எமது விவாதக்குழு பிரகாசிக்கத் தவறவில்லை. தமிழ்த் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட விவாத சுற்றுப் போட்டியில் எமது குழுவினர் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டனர். தமிழ்த் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரை, பேச்சு, கவிதை சிறுகதைப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டத் தவறவில்லை. பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் இரண்டாவது தடவையாக இவ்வாண்டும் இனிதே முடிவுற்றன.

''தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகைச் செய்தல் வேண்டும்'' என்ற பாரதி பாடலுக்கொப்ப, இம்மன்றத்தின் தமிழ் மணம், உலகெலாம் வீசும் வகையில், ஊன் உறக்கமின்றி உழைத்த ஆசிரியர்களையும் மற்றும் எமது தோளோடு தோள்நின்றுழைத்த மாணவர்களையும் போற்றும் வகை தெரியாது தவிக்கின்றேன்.

இறுதியாக நீர்க்கு நுரையுண்டு, நெல்லுக்குமியுண்டு, புல்லிதழ் பூவிற்குண்டு என்றெண்ணி இதில் காணும் குற்றங்குறைகளை நீக்கி நிறை காணும்படி உங்கள் அனைவரிடமும் சிரம் தாழ்த்தி நிற்கின்றேன்.

E. G. J. வேதநாயகம்
செயலாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தின்
1992/93ம் ஆண்டிற்கான நிர்வாக உறுப்பினர்குழு

தலைவர்	:—	திரு. பி. சூரியாராச்சி
சிரேஷ்ட உபதலைவர்	:—	திருமதி பி. சி. தம்பாப்பிள்ளை
உபதலைவர்கள்	:—	திரு. ஆர். ராஜசூரியர்
		திரு. எஸ். ரத்னசபாபதி
மாணவ தலைவர்	:—	என். குமாரகுலசிங்கம்
செயலாளர்	:—	ஈ. ஜி. ஜே. வேதநாயகம்
பொருளாளர்	:—	வை. முகுந்தன்
செயற்குழு அங்கத்தவர்கள்	:—	சி. நவீனன் அன்ரனிப்பிள்ளை
		கே. நரேஷ்குமார்
		ரி. சிற்பரன்
		கே. சதீஸ்குமார்
		வி. மனோகரன்
		எம். வாகீசன்
		பி. தயானந்தன்
		எம். ரி. காண்டீபன்
		என். கஜேந்திரன்
		எஸ். நிலக்ஷன்

கீழ்ப்பிரிவு றோயல்கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்

மாணவர் தலைவர்	:—	எஸ். சரவணன்
உதவி மாணவர் தலைவர்	:—	எஸ். செந்தூரன்
செயலாளர்	:—	எஸ். சசிகாந்த்
உபசெயலாளர்	:—	ஏ. ஐ. பாயிஸ்
பொருளாளர்	:—	ஆர். வினோத்ராஜ்
உபபொருளாளர்	:—	பி. வாகுலேயன்
பிரதம இதழாசிரியர்	:—	எஸ். செந்தூரன்
துணை இதழாசிரியர்கள்	:—	ஆர். பிரணவன்
		எஸ். கிருபானந்தன்
செயற்குழு அங்கத்தவர்கள்	:—	எல். கோபிகாந்தன்
		எஸ். பிரதீபன்
		என். கிளினற்
		எஸ். மயூரன்
		வை. முரளி

ROYAL COLLEGE
TAMIL LITERARY ASSOCIATION
OFFICE BEARERS - 1992



Seated from L to R :-
Mrs. P. C. Thambapillai (Senior Vice President)
C. Naveenan Antonypillai (Chief Editor)
Y. Muhunthan (Treasurer)
N. Kumarakulasingam (Student Chairman)
Mr. B. Suriarachchi (President)
E. G. J. Vethanayagam (Secretary)
Mr. R. Rajasooriyar (Vice President)
Mr. S. Ratnasabapathy (Vice President)

Standing from L to R :-
K. Sadeesh Kumar (Co-Editor)
K. Naresh Kumar (Co-Editor)
K. M. Kandeepan
V. Manoharan
P. Thayananthan
T. Sitparan (Co-Editor)
N. Vaheesan
N. Gajendran
S. Nilakshan

With Best Compliments

from

V

Madras Thali Meals, Special Kottu Rotti,
Special Buffet Lunch & Dinner
and Bombay Sweets

SHANTHI VIHAR (PVT) LTD.

(VEGETARIAN RESTAURANT)

North Indian & South Indian

3, Havelock Road,
Colombo - 5.

Telephone : 580224

With Best Compliments From

T. Chandrapalan

Auctioneer, Broker, Valuer
New Unity Auctioneers and Court Commissioner

No - 126 REID AVENUE
(Thunmulla Junction)
Colombo - 4.

With Best Compliments
From

V

Victory Silk Store

WITH BEST COMPLIMENTS
FROM

Lalitha Jewellery Mart Ltd.

105, SEA STREET,
COLOMBO - 11.

T. P. 23691, 431993

றோயல் கல்லூரி

தமிழ் இலக்கிய மன்றம் நடாத்தும் 'கலைவிழா' - பெருவிழா காணவும்,
விழா நூல் 'தமிழ் நயம்' சிறப்புறவும், தமிழ் அன்னையை
தாள் பணிந்து போற்றுகின்றோம்

இந்து ௐ கலசம்

இந்து சமய, இந்து கலாசார ஜனரஞ்சக இலக்கிய மஞ்சரி

இந்து சமய இந்து கலாசார இலக்கிய பேரவை
P. O. Box. 162, கொழும்பு.

சிறக்கட்டும் 'கலை விழா'
பரவட்டும் 'தமிழ் நயம்'

கிராண்ட்பாஸ் ஸ்ரீ ஐயப்பன் சேவாபீடம் இந்து சமய கலாசார மேம்பாட்டுக்குழு
இல. 42, டிவாஸ் லேன், கிராண்ட்பாஸ்,
கொழும்பு 14.
இலங்கை.

தொலைபேசி : 423895

With Best Compliments from

New Alexandra Stores

WHOLESALE & RETAIL DEALERS IN GRAMS & SWEETS

42, Galle Road,

Colombo - 06.

Tel : 585927

With Best Compliments

From

Auto Craft LTD.

(Transporters)

800, Sirimavo Bandaranayake Mawatha,

Colombo - 14.

Tel : 522068 - 522917

25542

With Best Compliments From

Crystal Textiles

Wholesale & Retail Dealers

151, 2nd Cross Street,
Colombo - 11. Sri Lanka.

Tel: 28010, 29414

With Best Compliments
from

Electronic Engineering Systems (Pvt) Ltd.

278, Union Place
Colombo - 2.
Tel: 445706

SOLE AGENTS

MITEL PABX
MEGA II PABX
FUTAC TELEPHONE
POWERTRON UPS

Fax: 94-1-445709 94-1-1449494
Telex: 22466 EESY CE

With Best Compliments

from

★

RAJAH STORES

Importers and Wholesalers of Fishing Gear

S. 18, Ist Floor, Colombo Central Super Market Complex

COLOMBO - II.

Telephone:

Office:- 432628

Res:- 433176/431117

Telex: 22336 - 22337

Indika CE

Attention: Jawahar

Fax: 440925

Attention: Jawahar

றோயல் கல்லூரியின் சரிதை

1835ம் ஆண்டு கத்தோலிக்க மதஞ்சார்ந்த வணக்கத்திற்குரிய ஜோசப் எச். மார்ஷ் என்பவர் ஒரு தனியார் வித்தியாசாலையை ஹில் ஸ்ட்றீட் என்ற தெருவில் கொழும்பு செனட் செபஸ்டியன் (தற்போது ஹல்வ்ட்ஸ்டார்ப்) என்ற நகரப்பிரிவில் ஸ்தாபித்தார். அவ்வாறு தொடக்கி வைத்த உத்தமர் காலக்கிரமத்தில் இலங்கையின் தலை சிறந்ததொன்றாக விளங்கப் போகும் கல்விக் கூடத்தை உருவாக்குகிறோம் என்று கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்.

அவ்வாறு தொடங்கியபோது அக்கல்விக் கூடத்தில் 12 ஆசிரியர்களும் 20 மாணவர்களுமே இருந்தனர். மதச்சார்புடைய சல்விக் கூடமாகவே அது இருந்தது. அதற்கு 2 கட்டடங்களே இருந்தன. கல்வி கற்பதற்கு ஐந்து பாடங்களே கற்பிக்கப்பட்டன. அப்போது விளையாட்டு மைதானங்களோ, நூல் நிலையங்களோ, விஞ்ஞான கூடங்களோ இருக்கவில்லை.

இன்று அக்கல்விக் கூடத்தில் 7000க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 20க்கு மேற்பட்ட கட்டிடங்களில் 20க்கு மேற்பட்ட பாடங்கள் பயிற்றப்பட்டு வருகின்றன. பல விளையாட்டு மைதானங்கள், நூல் நிலையங்கள், விஞ்ஞான கூடங்கள், தேகப் பயிற்சிக் கூடங்கள் ஆகியவற்றுடன் நீச்சல் தடாகமும் ஒருங்கே அமையப்பெற்று தனியார் கல்விக் கூடமாக இல்லாது அரச கல்லூரியாக மாறி ''றோயல் கல்லூரி'' என்ற பெயருடன் இலங்கையின் தலைசிறந்த கல்லூரியாக இக்கல்விக் கூடம் இன்று விளங்குகிறது.

1835 இல் ''ஹில் ஸ்ட்ரீட் அகடமி'' என்ற பெயரில் தொடங்கிய இக்கல்லூரி 1836 தொடக்கம் 1881 வரை ''கொழும்பு அகடமி'' என்று பெயர்மாறி அதன் பின்னர் 1881 தொடக்கம் இன்று வரையில் ''றோயல் கல்லூரி'' என்ற நாமத்தைப் பெற்று வந்துள்ளது. 1972ல் இதன் பெயரை 'கொள்ளுப்பிட்டி மத்திய வித்தியாலயம்' என்று பெயர் மாற்ற எத்தனித்தும் பழைய மாணவர்களினதும், அப்போதைய மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோரதும் தளராத உறுதிப்பாட்டினாலும், ஒருங்கிணைந்த எதிர்ப்பினாலும் அவ்வெத்தனிப்பு கைவிடப்பட்டது.

1835 தொடக்கம் ஜோசப் எச். மார்ஷ் அதிபராகக் கடமையாற்றிய பின்னர் 1842 தொடக்கம் 1870 வரையில் போக் என்பவரும் 1870 தொடக்கம் 1877வரையில் ஜோர்ஜ் றேஸ்ட் என்பவரும், 1877 தொடக்கம் 1890 வரையில் கோல் என்பவரும், 1891 – 1892 வரையில் ஜோன் எச் மார்ஷ் என்பவரும். 1892 தொடக்கம் 1903 வரைஹாவட் என்பவரும் 1903 தொடக்கம் 1920 வரையில் ஹாட்லி என்பவரும், 1920 தொடக்கம் 1938 வரையில் வரையில் றீட் என்பவரும், 1931 தொடக்கம் 1938 வரையில் சாம்சன் என்பவரும் 1938 தொடக்கம் 1945 வரையில் ப்ரட்பி என்பவரும் 1946 தொடக்கம் 1953 வரையில் ஜெ. சீ.ஏ கொரெயா என்பவரும், 1954 தொடக்கம் 1966 வரையில் டட்லி கே. ஜீ. டி. சில்வா என்பவரும், 1966 தொடக்கம் 1971 வரையில் ஃபோகொட ப்ரேமரட்ண என்பவரும் 1971 தொடக்கம் 1972 வரையில் டி. ஜி. வெலிகல என்பவரும், 1972 இல் செனிவிரட்ண என்பவரும், 1972 தொடக்கம் 1980 வரையில் எல். டீ. எச். பீரிஸ் என்பவரும், 1981 தொடக்கம் 1986 வரையில் சீ. டீ. எம் ஃபெர்ணாண்டோ என்பவரும், தற்போதைய அதிபர் திரு. பு. சூரியாராச்சி என்பவர் 1987 இல் பதவி ஏற்கும் வரையில் தலைமை ஆசிரியர்களாக முறையே கடமையாற்றினர்.

இக்கல்லூரி இலங்கையின் பழமை பொருந்திய கல்லூரிகளில் ஒன்றெனத் திகழ்வதோடு மற்றைய சில பழம்பெரும் கல்லூரிகளுடன்தொடர்ந்து பல வருடங்கள் விளையாட்டுகளில் ஈடுபட்டதால் இக்கல்லூரிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இரு கல்லூரிகளுடனும் தொடர்பு இல்லாத மற்றையோரின் கவனத்தைக் கூட ஈர்க்கும் பெருமையும் புகழும் கொண்டுள்ளது. உதாரணமாக றோயல் கல்லூரிக்கும் பரிதோமாவின் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கட் போட்டி 1879 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. றோயல் கல்லூரிக்கும் கண்டி திரித்துவ கல்லூரிக்கும் இடையிலான றகர் போட்டி 1920ல் தொடங்கி இன்றும் வருடாவருடம் நடக்கிறது. 1983 ல் 100வது போட்டி நடைபெற்றபோது றோயல் கல்லூரியின் பழைய தலைமை ஆசிரியர்களான பிரட்பியும், கொரெயாவும் வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து போட்டியைச் சிறப்பித்தனர்.

கல்லூரியின் சரிதையில் சில முக்கியமான நிகழ்வுகளை இனி ஆராய்வோம். 1881 இல் மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் கடேற் சேவைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1945ல் சாரணர் பிரிவு நிறுவப்பட்டது. 1907 இலே தமிழ், சிங்களம் ஆகிய தேசிய மொழிகள் பயிற்றப்படத் தொடங்கின.

பல தடவைகள் உலக மகாயுத்தங்கள் காரணமாகவும் வேறு காரணங்களுக்காகவும் இடம் பெயர்ந்த எங்கள் கல்லூரி 1946 ல் தற்போதைய ரீட் அவனியு ஸ்தலத்தில் நிரந்தரமாக வேரூன்றிற்று.

இக்கல்லூரியில் ஐந்து இல்லங்கள் உள்ளன. அவை போக், மார்ஷ், ஹாட்லி, ஹார்வட், ரீட் என்ற பழைய தலைமை ஆசிரியர்களின் நினைவாகத் தொடங்கப்பட்டன. 1921 இல் முதன் முதலில் கல்லூரியின் தலைசிறந்த மாணவர்களை ''ப்ரீஃபெக்ட்ஸ்'' என்ற மாணவத் தலைவர்களாக நியமிக்கும் வழக்கம் தொடங்கியது. தற்போது வருடா வருடம் 70க்கும் மேலான மாணவத் தலைவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மாணவர்களின் விடுதியானது 1939இல் தாபிக்கப்பட்டது. 1960 இல் கல்லூரியின் 125வது வருட விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 1968ல் நீச்சல் தடாகம் கட்டப்பட்டது. 1969ல் ''நவரங்கஹல'' என்ற பொது மண்டபம் கட்டித் திறக்கப்பட்டது. 1978இல் இக்கல்லூரியின் கனிஷ்ட பகுதி சிரேஷ்ட பகுதியுடன் ஒன்றிணைக்கப்பட்டது. 1979ல் றோயல் தோமியன் கிரிக்கட் போட்டியின் 100வது போட்டி நடந்தேறியது.

வருடா வருடம் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சகல துறைகளிலும் தலைசிறந்து விளங்கி வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். இத்துணை பழைமை வாய்ந்த கல்லூரியில் கல்வி கற்பதால் நாமும் பெருமைக்குரியவர்கள் ஆகிறோம். இக்கல்லூரி 21வது நூற்றாண்டிலும் அதிசிறந்த கல்லூரியாகத் திகழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போமாக.

திரட்டியவர்
நிர்மலகுகன் விக்னேஸ்வரன்
ஆண்டு 12 Sc. L

தொகுப்பு: -

கல்லூரி சுவடிகள் கூடத்திலுள்ள றோயல் கல்லூரி வரலாறு (**History of Royal College**) நூலின் உதவியுடன் தொகுக்கப்பட்டது.

With Best Compliments

From

SHARMILA TRAVELS

Travels & Tour Operators
Passports Visa Consultants

V. MUTHUSAMY
Proprietor

F 24 & 25, Peoples Par,
Gas Works Street,
Colombo-11.
Phone: 436726 – 436727

Telex: 23202 SHARMI CE
Telex: 22338, 22337 INDIKA CE
Attn: SHARMI CE
Fax: 438869

With Best Compliments

from

N. C. Tours

Luxury Van Available, Day & Night Service

140, 1/1, Galle Road.

Wellawatte.

Res: 589372 Tel: 581332

With Best Compliments from

S. Manivannan

Maths Classes (1993)

(TAMIL MEDIUM)

By. S. Manivannan

GROUP CLASSES

MOD STUDY CIRCLE
27/1, Lilly Avenue, Colombo 6.
(For Year 10 & 11)

SMALL GROUP CLASSES
AVCO LANKA (PVT) LTD.
108, Galle Road, Colombo - 6.
(For Year 11, 10, 9, 8, & 7)

SRIDHARA INSTITUTE
243/4, Negombo Road, Wattala
(Opp-Church of St-Anne)
(For Year 11, 10, & 9)

INDIVIDUAL CLASSES
36/4 37th Lane Colombo - 6.
(For Year 11, 10, 9, 8, & 7)

நாகரிகப் பெண்ணே நீ போகும் பாதை எங்கே?

தமிழன்,

''உலகில் கல்தோன்றா காலத்தின் முன்னேயே தோன்றியவன்'' என்ற தனிச்சிறப்புக்குரியவன் தமிழன், ஒரு மனிதன் இப்படித்தான் வாழவேண்டும், இது தான் வாழ்க்கை முறை, இதுதான் நாகரிசம் என்பதனை அன்றே உலகுக்கு பறை சாற்றியவன் போதித்தவன் தமிழன்.

தமிழர் என்றாலே பண்புக்குரியவர்கள் பண்பாடான வாழ்க்கை வாழ்பவர்கள் என்று கூறிய அந்தக்காலமும் அந்த கால வாழ்க்கை முறையும் மீண்டும் எமக்கு அமைய வேண்டும்.

ஒரு சமூகம் சிறக்க வேண்டும் என்றால், அச் சமூகத்தின் வாழ்க்கை முறை சீரடைய வேண்டும் என்றால் இவற்றிற்கு வழிகோலுபவள் குடும்பத்தலைவி என்ற பெண்ணே. தமிழர்களை பற்றியும் தமிழ் பெண்களை பற்றியும் இவர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று இலக்கணம் வகுத்தவை எமது இலக்கியங்களும், இதிகாசங்களும், புராணங்களும் ஆகும். ஏனெனில் இன்றைய பெண்கள் நாகரிகம், நாகரிகம் எனக் கூறிக்கொண்டு அநாகரிகமாக எம் தமிழர் பண்பாட்டையே குழிதோண்டி புதைக்கும் வண்ணம் நடக்கும் பெண்கள் தமிழ் மங்கையர் தானா! இல்லையேல் தமிழ் மொழி பேசும் மேல் நாட்டு பெண்ணா? என்று சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். அன்று எமது தமிழர் பண்பும் பண்பாடும் கற்கால மனிதனுக்கு மட்டுமல்ல எக்கால மனிதனுக்கும் பொருந்துபவையே.

பெண் எனப்படுபவள் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை பெண்மையுடன் வாழவேண்டும் என்பதற்காகவே நம் முதாதையர்அச்சம், மடம், நாணம்பயிர்ப்பு என்ற பண்புகளை பெண்ணுக்கு ஊட்டினார்கள். பெண்கள் பிறந்ததிலிருந்து பெற்றோருக்கும், குருவுக்கும் பின் கணவனுக்கும் பணிந்து உண்மையாக வாழ்பவள்தான் தமிழ் பெண்.

ஆனால் இன்றைய இளம் பெண்கள் நமது பண்பாட்டுக் கேற்ற முறையில் தான் நடக்கிறார்களா? குறிப்பாக நமது பண்பாட்டிற்கே உரித்தான பாவாடை, தாவணி, சேலைகளை விடுத்து அலங்கோலமான ஆடைகளை அணிகிறார்கள் இன்று உலகில் அபிவிருத்தி அடைந்த நாடான அமெரிக்காவிலே கடந்த ஆண்டு கணிப்பின்படி பெண்கள் அணியும் கவர்ச்சியான உடைகள் காரணமாகவும் மிதமிஞ்சிய நாகரிகம் காரணமாகவுமே குற்றச்செயல்கள் அதிகரிப்பதாக ஓர் அறிக்கை கூறுகின்றது. தனித்துவமான பண்பாடில்லாத மேலை நாடுகளில் தான் இந்நிலை என்றால், சிறப்பான பண்பாடுகளை கொண்ட தமிழர்களாகிய நாமும் நாகரிகம் என்ற போர்வையை அணிவதாக நினைந்து அநாகரிமாக சமூகத்தையும் தமிழர்களின் சிறப்பையும் பாழாக்குகிறோம். எனவே ஆடை விடயத்தில் நமது தமிழ் பெண்கள், 'இவள் தமிழ் பெண்' என்று கூறும் வகையில் ஆடைகள் அணிய வேண்டும். இது தான் உண்மையில் அழகு.

அன்று சீதை இராவணனால் சிறை வைக்கப்பட்டபோதும் சரி, பல துன்பங்களை அனுபவித்த போதும் சரி அவள் பெண்ணுக்கே உரித்தான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்க

களையும் இழந்து விடவில்லை. என்றால் ஏன் இன்றைய பெண்ணுக்கு மட்டும் அவ் வாழ்க்கை முறையை பின்பற்ற முடிய வில்லை. இந்த இதிகாசங்களும், புரா ணங்களும், இலக்கியங்களும் பொய்யாக இருக்கலாம் ஆனால் அவை பெண்களை பற்றி கூறியவை பொய்மை அல்ல. அன்று சத்தியவானின் உயிரை மீட்டவளும் ஒரு பெண்தான். தன்பெண்மைக்கு களங்கம் வந்ததும் மதுரையை எரித்தவளும் ஒரு பெண் தான் இப்படி பெண் இனத்திற்கே பெருமை சேர்த்த தமிழ் பெண்களின் வழிவந்த இன்றைய மங்கையரோ குங் குமம் இடுவதையும், கூந்தலில் பூ வைப் பதையும் இழிவாக எண்ணுகிறார்கள். ஆனால் இவைதான் அன்றைய பெண் களை வாழ வைத்தது. மனிதனுக்கு நாகரிக வளர்ச்சி தேவை தான். ஆனால் அதுவே நம்மை இழிவு படுத்துவதாக அமையக்கூடாது. இன்றைய பெண்ணுக்கு கல்வியறிவு தேவைதான். படித்து அவள் பல பல பட்டங்களை பெறுவது தமிழ ருக்கும் பெருமை தான். ஆனால் பெண் உரிமை என்று படித்தவள் ஆண்களுக்கு சரிநிகராக அனைத்து விடயங்களிலும் தலையிட்டு தமிழ் பெண்ணுக்குரிய பெருமைகளை இழந்து விடுகின் றாள். எனவே பெண் என்பவள் தற்கால நாகரிகத்திற்கு மயங்கி விடாமல் பெண்மை உடன், பெண்ணுக்கே உரித் தான பண்புகளுடனும் தமிழர் பண் பாடை மாசுபடுத்தாமல் நடந்தால் நிச் சயமாக மீண்டும் நாம் உலக அரங்கிலே தமிழர் என்றுசொல்லி மார்தட்டி நம் தமிழ் பெண்ணைப்பற்றி போற்றி புகழலாம். நம்தமிழும் தமிழ் பண்பாடும் சீர் கெட்டதுபோதும். தமிழ் பெண்ணே நீ சென்றஅநாகரிக பாதையின் பயணம் போதும், திரும்பு எம் தமிழரின் இந்த நாகரிகபாதைக்கு!

சதீஸ் குமார்
ஆண்டு 12 L (விஞ்ஞானம்)

எங்கே அம்மா!

அம்மா அம்மா
என் இனிய அம்மா!
எங்கு நீ சென்றாய்?
இருப்பேன் என்றாய்
தரிப்பேன் என்றாய்
தருணம் பார்த்துத் தவறிப்போனாய்

எங்கே சென்றாய்
என் இனிய அம்மா?

வருவாய் என்று
வழிமேல் விழியாய்
காத்திருந்தேன் அம்மா
வந்தவர் சொன்னார்
வராள் உன் அம்மா
வந்தால் வருவாள்
வேறுருக் கொண்டென்று

வேதனையோடு காத்திருப்பேன்
வேறெப்போதாவது
சந்திப்போம் என்று
வருவாய் அம்மா
விரைவாய் வருவாய்
என் இனிய அம்மா

இப்படிக்கு
வாடும் உன் இளைய மகன்
யௌவனகுகன் விக்னேஸ்வரன்

With Best Compliments

From

START RIGHT

With Lucas

The good Life Battery

Sole Distributors for

Automotive & Motor Cycle Batteries

KLEVENBERG (PTE) LTD.

"Lucas House"

167/92, Avissawella Road,
Orugodawatte,
Wellampitiya.

Tel: 572106-08 (3 Lines)

With Best Compliments

From

A. M. M. NABUHAN

(GEM EXPORTER)

Office Address:

20, Rohini Road,
Wellawatte,
Colombo-6.

Telephone; 583082

Home Address:

42, Naleem Hajiar Mawatha,
China Fort,
Beruwala.

Telephone: 034-76533

With Best Compliments

from

Koncora (Pvt) Ltd.

MANUFACTURERS OF QUALITY

HOLLOW CEMENT BLOCKS

Factory:-

Palliyawatta
Hendala,
Wattala.

Head Office:-

63/1, Ananda Rajakaruna Mawatha,
Colombo – 10.
Tel: 6 9 1 2 4 1

WITH BEST COMPLIMENTS

FROM

Central Agency

Importers, Government & Corporation Suppliers

Dealers in Hardware & Sanitaryware

22. Quarry Road,
Colombo - 12.

T'phone: 27870
432450

FOR YOUR PRINTING
CONTACT

Sri Ganeshan Press

Printers and Stationers

26, Abdul Jabbar Mawatha,
Colombo 12.

T.Phone: 434148

නිව් නදීයා ජුවලර්ස්
நியூ நதியா ஜுவலர்ஸ்

New

Nadeeya Jewellers

DEALERS IN 22KT JEWELLERS

First Floor,
S - 34 Colombo Central Super Market,
Colombo - 11.

With Best Compliments

From

Travel Link Associates

18 — 1/2 Mudalige Mawatha, Colombo - 1. Sri Lanka.

Tel: 5 4 5 6 5 7 Tlx; 2 1 7 4 2 PERIMR CE Att. TRAVEL LINK
2 9 2 9 4
Fax: 5 4 5 6 5 7 5 4 7 8 8 4 Att: TRAVEL LINK

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்!

எமது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்

Asian Travel Services

63 1/4, Chatham Street,
Hirdaramani Bldg.
Colombo - 01.

Tel: 435638/436732 Fax: 422379

With Best Compliments

From

FOR ALL YOUR

ACCOUNT BOOKS

PETTY CASH BOOK

DAY BOOK

LEDGER

BANK BOOK ETC, ETC.

The Auto Printer

122, CENTRAL ROAD,

COLOMBO - 13.

PHONE: 433351

With Best Compliments

From

S. Muralidharan

For Quality (Wholesale) Readymade Dress

(Residence)

12/7, Arthur Place,

Dehiwela.

HEAD OFFICE: COLOMBO - 15. **SHOWROOM: PETTAH**

WITH BEST WISHES FROM

Mexpo Trading Agencies

39-1/27 Chatham Street,
Fort, Colombo - 1.

Telephone: 28938/422882

Telefax: 94-1-500746

WITH Best Compliments From

Pioneer Marine Traders

(Exporters of Marine & Local Products)

No. 8/12 Brass Founder Street,
Colombo - 13.

Phone: 27683 & 422423

Fax: 435731

WITH THE BEST COMPLIMENTS FROM

Mala Traders (Pvt) Ltd.

23, ST, JONES ROAD,

COLOMBO - 11.

T. P. 23321, 433669.

With Best Compliments From

M/s Indo - Ceylon Leather Co. Ltd.
&
M/s P. P. K. Vellaiappa Nadar

TANNERS

Exporters of Leather & Leather Goods
148, Prince Street,
Colombo - 11

Phone : 23503
Telex : 23675 NETCOM CE
Fax : 941 437615

With Best Compliments From

ARB

Audio Video Vision

439 1/1, GALLE ROAD, COLOMBO-6.

T. P. No. 586139

Our Length of Service:

- VIDEO FILMING
- VIDEO CASSETTE LENDING
- AUDIO VIDEO RECORDING
- STILL PHOTO GRAPHY
- COLOUR FILM DEVELOPING & PRINTING
- SALE OF AUDIO, VIDEO CASSETTES & FILM ROLLS.

★ WE ALSO PROVIDE VAN'S FOR HIRE

With Best Compliments

from

V. K. Enterprises

2, Police Park Avenue

COLOMBO - 5.

Phone: 508708, 502175

SUPPLIER OF HIGH QUALITY PLYWOOD SHEETS, CHIPBOARD, GYPSUM BOARD, AND STEEL PRODUCTS ETC. ETC.........

With Best Compliments

From

Al-haj M. T. M. AROOS.

New Atlas Traders

Wholesale Dealers in All Kinds of Towels Etc.

Shop:

Fairoze Super Market,
237/8, Main Street,
Colombo - 11.
Shri Lanka.

Residence:

42/4, Samudrasanna Road,
Kongahawatte,
Mt. Lavinia.
T.Phone:- 713993

With Best Compliments

From

J. P. Fernando & Sons

Importers, Distributors of All Kinds of Cotton & Nylon Fishing Nets, Twines, Lines & All Fishing Accessories.

Head Office:

287/1, Sea Street,
Colombo - 11.
(Shri Lanka)

Telephone:- 435634

KALAI VIZHA '92
ORGANIZING COMMITTEE



Seated from L to R :- K. Naresh Kumar, (Co-Editor), C. Naveenan Antonypillai (Chief Editor), Y. Muhunthan (Treasurer). N Kumarakulasingam, (Student Chairman), E. G J Vethanayagam (Secretary), T. Sitparan (Co-Editor), K. Sadeesh Kumar (Co-Editor).

Standing from L to R (1st Row) :- S. Kirubananthan, L. Gobi, S. Pratheepan, Y. Muralie, S. Sasikanth, S. Saravanan, S. Senthuran, R. Vinothraj, S. Senthuran, B. Vagulejan, R Pranavan, A. I. Fais.

2nd Row L to R :- A. Navaneethan, A. C. M. Samyoon, A. S. Naleem, P. Gnanasegaram, T. Thirumaran, B. Srirangan, N. Vaheesan, N. Gajendran, K. Ganendran, S. Nilakshan, R. Z. A. Ziyan.

3rd Row L to R :- A. Nirmalan. M. F. M. Fahri, G. Premanand, S. Navan, P. Brahman, M. Pradeepan, V. Manoharan, R. Kiruban, Rodney L. R. B, K. M. Kandeepan, R. Sathiaseelan.

Absentees :- V. Jeyaprakash, M. Kumaran, W. Nirmalaguhan, K. I. M. Fiaz, S. Mayuran, N. Clint.

With Best Compliments

from

V

DURO PIPE INDUSTRIES LTD.

MANUFACTURERS OF DURO PVC PIPES & FITTINGS

311, (Second Floor)
Old Moor Street,
Colombo - 12.

Telephone : 540759, 540760, 546781
Fax : 941-437646
Telex : 23085 Duro Ce.

ஔவையார்

மதுரை நகரிலே கடைச்சங்கம் இருந்த காலத்திலே ஔவையார் என்னும் மாது சோழ தேசத்திலே உறைஊர் என்னும் பட்டணத்திலே ஆதிபகவன் என்போருக் குப் புத்திரியாகப் பிறந்தார். பெற்றோ ருக்குள் ஏற்பட்டிருந்த உறுதிமொழிப்படி ஔவை குழந்தையிலேயே தனியாக்கப் பட்டார். சேரியில் இருந்த பாணர்கள் அவரை எடுத்து வளர்த்தனர். இயல் பாகவே சகல கலைகளையும் அறிந்து தமிழ் நாட்டிலே சிறந்த பெண்களுள் முதன்மை பெற்றிருந்தார்.

ஒரு நாள் சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான்பெருமாள் நாயனாரும் கைலா யத்துக்கு செல்லும் போது ஔவையா ரையும் அழைத்தனர். அவர் அப்போது தாம் செய்துகொண்டிருந்த வினாயகர் பூசையை செய்து முடித்துவிட்டு வருகின் றேன் என்று கூறி விரைவாக செய்யத் தொடங்கினார். அதை அறிந்தவினாயகர் ஔவையாரே நிதானமாக பூசை செய் என்று கூறினார். தாம் அவ்விருவருக்கு முன் உன்னை கைலாயத்தில் சேர்க்கின் றேன் என்றார். ஔவையார் 'சீதக்களவச்' என்று தொடங்கும் அகவலைப் பாடிப் பூசித்தார். வினாயகர் அவரை தன் துதிக் கையால் தூக்கி கைலாயத்தில் சேர்த்தார். தங்களுக்கு முன் ஔவையார் வந்திருப் பதை பார்த்துச் சேரமான் பெருமாள் நாயனார் 'அது எப்படி?' என்று வினவிய போது,

''மதுரமொழி நல்உமையாள்
சிறுவன் மலரடியை
முதிரநினைய வல்லார்க்க
ஈதோமுகில் போல் முழங்கி
அதிர வருகின்ற யானையும்
தேரும் அதன்பின் சென்ற
குதிரையும் காதம் கிழவியும்
காதம் குலமன்னனே!''

உயர்ந்த சேரர் குடியில் பிறந்த மன் னனே! இனிய சொற்களைப் பேசும் உமையம்மையாரின் மகனாகிய வினாய கப் பெருமானின் திருவடிகளை வணங்கு பவர்களுக்கு எந்தச் செயல் செய்வதற்கு அரியதாகாது. ஆதலால் நான் இங்கு வந்தி ருப்பது அரியதன்று. நிலம் அதிரச் செல் லும் யானையும் தேரும் அதற்குப் பின் னர் புறப்பட்டுவந்த குதிரையும், நாளிகை ஒன்றுக்கு காதவழி நடக்கும். நடக்க இயலாத கிழவியாகிய நானும் நடந்தது காதவழியேயாகும்.

ஒரு முறை ஔவையாரை சுப்பிர மணியக் கடவுள் சிறுவனாக வந்து சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண் டுமா? என சோதித்த போது இவரின் வெண்பாப் பாடலிலே ஔவையார் மீது அருள்மீக மரத்தை விட்டிறங்கி, நிசருப மெய்தி அவர் கரங்களைப் பற்றிக் கொண்டு, நான் உம்முடன் விளையாட வந்ததேயன்றி, இகழ்வதற்கன்றி 'உலகத் தில் உமக்குச் சமமானவர்கள் யார் இருக் கிறார்கள்'. என்று கூறினார் முருகன். உலகத்தில் கொடியது, இனியது, பெரி யது, அரியது என்று உரைக்க வேண்டும் என்று வினாவிய போது அதற்கு நான்கு அகவல்களை பாடிக்காட்டினார்.

ஔவையார் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, கல்வி ஒழுக் கம் போன்ற பல்வேறு நூல்களை செய் தருளினார். இந்நூல்களுள் அகர வற்க மாகச் செய்யப்பட்டுள்ள ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் நீதி நூல் கள் சொல் நடையும் பொருள் விளக்க மும் வாக்கியச் சுருக்கமும் கொண்டுள்ள தால் பிறதேசத்தவர்களாலும் தத்தம் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு சிறப் படைகின்றன.

இந்தக் கவி சாகரமாகிய ஔவை யார் திருவாக்கிலிருந்து தோன்றிய பல நூல்களும், தனிப் பாடல்களும் நீதி நிறைந்த அருள் வாக்கியங்களென்று யாவராலும் சிரமேற்கொள்ளப்படுகின் றன. கல்வியில் பெரியவன் கம்பன் முத லிய புலவர்களின் பாடல்கள் ஔவை யார் பாக்களோடு ஒப்பு உயர்வு கூறப் படா பூலோக சரஸ்வதியாக வந்து தோன்றினாள் என்று கூறப்படுகிறது. ஔவையார் ஜீவந்தராய் இருந்த காலத் தில் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் ஆகிய வித்துவ சிரோன்மணிகள் இருந்தார்கள்.

அக்காலத்தில் கம்பர் ஒரு பாட்டிற்கு 1,000 பொன் பெற்றாலன்றி ஒருவர் மீதும் பாடுவதில்லை. ஔவையோ பசிக்கு ஒரு கை கூழ் பெற்றால் பாடுவார் இத னால் கூழுக்குப்பாடி என்று புகழ் பெற்றார்.

'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுவும் சோழமண்டலமே'
-பெண்ணாவாள்

இது கம்பர் 500 பொன்னுக்கு பாடி யது. மற்ற 500 பொன் கொடுக்காததாலே பாதியிலே விட்டுவிட்டார்.

அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு'

சிறந்த நீரென்று போற்றப்படுவது காவேரியின் நீரே; அரசருள் சிறந்தவன் சோழ மன்னனே; சிறந்த நாடு என்று போற்றப்படுவது சோழ நாடே; சிறந்த மாது என்று போற்றப்படுபவள் அம்பர் என்னும் ஊரில் வாழும் சிலம்பி என்னும் பெயரை உடையவளே; சிறந்த காலில் அணியும் சிலம்பாவது அவள் தன் தாமரை போன்ற அடிகளில் அணியும் பொன் சிலம்பேயாகும்.

தென் பெண்ணை நதிக்கு தெற்கே உள்ள திருக்கோவ ஊரில் உள்ள ஆற்றங் கரையில் ஒரு இடையன் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தான். அவ்வீட் டில் ஒருநாள் மழைகாரணமாக ஔவை ஒடுங்கவேண்டி வந்தது. மழையில் அதிக மாக நனைந்தபடியால் குளிரெடுத்து நடுங்கிக்கொண்டிருந்தது. அந்த இடைய னுக்கு இரண்டு பெண்கள். அங்கவை, சங்கவை என்னும் பெயருடையவர்கள். இச் சிறுமிகள் கிழவியைப் பார்த்து மன மிரங்கி அவருக்கு ஆடைகொடுத்து, குளிர் காய நெருப்பும் உண்டாக்கி, உண்ண அமுதாக முருங்கை கீரையும் நெய்யும் விட்டுச் சமைத்து அதையும் கேழ்வரகுக் களியையும் கொடுத்தார்கள். உடுக்க உடையும், உண்ண உணவும் கொடுத்த தால் புலவருக்கு வரும் சந்தோஷத்திற்கு கேட்கவா வேண்டும். பாடல் பிறந்தது.

இதோ அப்பாடல்:

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த-பொய்யா
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டார்
கடகம் செறிந்தகை யார்

வளையல் அணிந்த அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் வெப்பமுடையதா கவும், நல்ல மனமுடையதாகவும், விரும் பிய வரையில் தின்றாலும் கெடுதியை உண்டாக்காததாகவும், நெய்யுடன் கலந்து செய்யப்பட்ட கீரைக்கறி எனச் சொல்லி அமுதத்தை இலையிலிட் டார்கள்.

பண்டைக்கால பெண் புலவர்களுள் திலகமாய் விளங்கும் ஔவைப் பாட்டி யார் சோழ நாட்டு அரசிளங்குமரனின் திருமண வைபவத்தில் கலந்துகொண் டார். திருமணத்துக்கு வந்திருந்த புலவர் களும் பாவலர்களும் பல பாடல்களைப் பாடி இளவரசனை வாழ்த்தினார்கள். அவர்கள் அவனை இந்திரன் என்றும், சந்திரன் என்றும், உண்மைக்கு ஒருவன் என்றும், வன்மைக்கு ஒருவன் என்றும்,

கற்பக விருட்சம் என்றும் காமதேனு என்றும் புகழ்ந்து பாடினார்கள். அங்கிருந்த ஒளவையாரோ 'வரப்புயர' என்னும் இரு சொற்களால் மட்டுமே அரசிளங் குமரனை வாழ்த்தினார். அங்கிருந்த எவரும் இக்கருத்தை அறிய வில்லை. இதனைக் கண்ட ஒளவையார்.

''வரப்புயர நீருயரும்
நீருயர நெல்உயரும்
நெல்லுயர குடிஉயரும்
குடிஉயர கோன் உயரும்''
எனவிளக்கினார்.

ஒளவையார் சிறந்த தமிழ்ப் புலவர். அவர் ஏழைகளோடும் பழகினார், அறிவாளிகளோடும் பழகினார். ஏழைகள் அன்போடு அவரை ஒளவைப் பாட்டி என்று அழைத்தனர். தனது கவிபாடும் வல்லமையினால் தம் உளக்கருத்துக்களை கவிமூலம் எடுத்துக் கூறும் வல்லமை பெற்றவராவார்.

ஒவவையார் பந்தன் என்னும் வைசிகன்மேல் ஓரந்தாதிபாடி அப்பிரபு நாகலோகம் சென்று அருமையாக பெற்று வந்த பொற்படாம் கொடுக்கப்பெற்று அதை உடம்பிற்றரித்து முதுமை நீங்கி இளமை பெற்று அருள் நெல்லிக் கனியிற் பாதிப்பழம் பெற்று அதை உண்டு 240 ஆண்டுகளுக்கு அதிகமாக ஜீவித்ததாக பழம்பெரும் சரித்திரங்கள் கூறுகின்றன. ஒளவையார் கிரகதாக்சிரம் சிறந்தது என்று மற்றவர்களுக்கு போதித்துவந்ததேயன்றி தான் ஆயுள் பரியந்தம் விவாகம் இல்லாமலே இருந்தார். இவருடைய இயற்பெயர் மறைந்து ''முதியவள்'' என்கின்ற பொருளைத் தரும் ஒளவை என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். தமிழ்மொழி வரலாற்று ஆசிரியர்கள் என்னும் பெயரில் மூவர் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.

இவர் தமிழ் மக்களுக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்த பெண் புலவராவார். மாணவரும் பெரியோரும் படித்துச் சுவைத்திருக்கும் அறிவு நூலா, நீதிநூலா, சுவைபெருக்கெடுத்தோடும் அடுக்கு மொழிக் கவிதைகளா, அனைத்தும் அவர் தந்தார். தரணி எங்கும் அவர்புகழ் பரந்து, ஆகவே சிந்தையில் நின்ற ஒளவைப் புலவரை, ஒளவைப்பாட்டியை சிந்தை செய்வோம், சிறப்போம்.

வாழ்க ஒளவை!
வளர்க அவர்புகழ்!

தொகுப்பு:
பா. வாகுலேயன்,
ஆண்டு 7 R

With Best Compliments

From

KRISHCO AGENCY

60, 1/4, Third Cross Street,

Colombo - 11.

T. P. 448557, 449943.

IMPORTERS, EXPORTERS, GENERAL MERCHANTS AND
DEALERS IN TEXTILES

விஞ்ஞானம் - ஆக்கமும் கேடும்

அஞ்ஞானம் குடியூன்றி வாழ்ந்த மக்கள் மெஞ்ஞானம் படைத்தவராய் விஞ்ஞானத்தின் விளிம்பிலே வீற்றிருக்கும் நூற்றாண்டு இந்த இருபதாம் நூற்றாண்டு. விஞ்ஞானம் இன்று வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுகின்றது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட, ஏற்படுகின்ற, ஏற்படப்போகின்ற ஆக்கங்கள் என்ன? கேடுகள் என்ன? என்று ஆராய்வது இன்றியமையாததாகும். விஞ்ஞானத்தின் மூலம் மனிதன் புவியின் எல்லையைக் கடந்து விமானங்கள், உந்துகணைகள் மூலம் வானத்தை நோக்கி இன்பமாக மேலே பறந்துகொண்டிருக்கிறான். அதேவேளை மேலே சென்ற மனிதன் படுபாதாளத்தில் விழுவதற்கும் விஞ்ஞானமே வழிசெய்கின்றதெனின் தவறில்லை. இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை விஞ்ஞானக் கண்டுபிடிப்பான அணுகுண்டு என்னும் பயங்கரப் படைக்கலத்திற்கே உரியதெனக் கூறின் மிகையாகாது. எனவே, ஆக்கம் ஏற்படும் அதேவேளை கேடும் விஞ்ஞானத்தால் ஏற்படுகின்றது என ஐயமின்றிக் கூறலாம்.

முதலில் விஞ்ஞானத்தின் மூலம் நமக்கேற்படும் ஆக்கபூர்வமான விடயங்களை நோக்குவோம். உலகம் இன்று வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுகின்றது. காலமும் இடமும் மனிதனின் கட்டுப்பாட்டிற்குள் வந்துகொண்டிருக்கின்றன. விண்ணிலும் மண்ணிலும் பேராழியிலும் அவ்வவற்றிற்கு உரிய இடத்தை உரிய காலத்தில் உடல் நலுங்காது சென்று அடைகின்றான். விண்ணையும் கடந்து வேற்றுக் கிரகங்களிலும் கால் பதித்து அங்கெல்லாம் வாழ முடியுமோ என்று அவனது ஆராய்ச்சி நீண்டு கொண்டிருக்கிறது.

'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?' என்று கருதி ஒடுங்கிய மனப்பான்மையோடு தான் உண்டு, தன் ஊர் உண்டு என்று வாழ்ந்த மனித சமுதாயம் மத்திய காலத்தில் அறிவுத்தாகம் கொண்டு புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட்டது. இதனால் அச்சடிக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி இன்று அறிவுப்பசிக்கு உரிய உணவினை வாரிவழங்கி வருகின்றன.

வெகுசனத் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் என்பனவும் விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்டவையே. விஞ்ஞானத்தின் அசுர சாதனைகள் இவையெனக் கூறின் மிகையாகாது. இவற்றினால் மக்கள் இருந்த இடத்தில் இருந்துகொண்டே சுலபமாக விடயங்களை அறிந்துகொள்ளும் வசதி ஏற்படுகின்றது. இதுமட்டுமா? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலையும் உருவாகக்கூடிய சாத்தியம் இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களினால் ஏற்படுகின்றதெனக் கூறின் தவறில்லை.

இல்வாழ்க்கையில் மின்சாரம் என்ற உருவில் விஞ்ஞானம் படைத்துவிட்ட புதுமைகள் அளப்பரியன. மின்சாரம் இல்லத்துக்கு ஒளியூட்டி விளக்குஞ் செய்கின்றது. கூட்டிக் கழுவித் துடைத்துச் சுத்தஞ் செய்கின்றது. மிக விரைவில் சமையல் செய்து முடிக்க உதவுகின்றது.

அடுத்து கைத்தொழிற் துறையில் விஞ்ஞானம் செய்த மாற்றம் சரித்திரப் பிரசித்திபெற்றது. பிரமாண்டமான இயந்திரங்கள், பல நூற்றுக்கணக்கான தொழிலாளரின் வேலைகளை சில மணி நேரத்தில் செய்கின்றன.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக மருத்துவத் துறையில் விஞ்ஞானம் செய்த புதுமைகள் அநந்தம். விஞ்ஞானம், தந்துதவிய மருத்துவங்கள், மனிதகுலக் கொடும்பிணிகளை மாற்றும் அமிர்தசஞ்சீவிகளாய் விளங்குகின்றன. மாற்று இருதய சத்திர சிகிச்சை முறை, மாற்று சிறுநீரக சத்திர சிகிச்சை முறை என்பன மக்களுக்கு மிக்க பயன்தரும் மருத்துவ விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களே எனக்கூறின் மிகையாகாது.

இத்தகைய ஆக்கச் செயல்களைச் செய்வதற்குத் துணை செய்யும் விஞ்ஞானம், மனித சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் எத்தனையோ கேடுகளையும் விளைவிக்கத் தவறவில்லை என்பதையும் துணிந்து கூறலாம்.

முதலாவதாக மனித சமுதாயத்திற்கும், இயற்கைச் சூழலுக்கும் ஏற்பட்டுள்ள பாரிய தாக்கம் விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட அணுகுண்டின் பிரயோகமாகும். இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிலுள்ள ஹீரோசிமா, நாகசாகி என்னும் இரு நகரங்கள் மீதும் அணுகுண்டு பொழியப்பட்டு அவை பாழடைந்த நகரங்களாக்கப்பட்டன. புல் பூண்டுகள்கூட முளைக்கத் தகுதியற்றவையாக அந்த நகரங்கள் நாசமாக்கப்பட்டன. அணுகுண்டினால் பாதிக்கப்பட்டவர்களின் சந்ததியினரில் பலர் அங்கவீனர்களாகக் காணப்படுகின்றனர்.

மேலும் இந்தியாவில் போபால் நகரில் ஏற்பட்ட நச்சுவாயுக் கசிவாலும் இரஷ்யாவில் ஏற்பட்ட அணுவாலை விபத்தாலும் வெளிவிடப்பட்ட கதிர்களின் மூலம் பல்வேறு நோய்களால் மக்கள் பீடிக்கப்பட்டனர். இவ்வாறு மனித குலத்தை அழிவின் எல்லைக்கு இட்டுச் செல்பவையாக விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளான ஆயுதங்கள் தொழிற்படுகின்றன.

அடுத்து, நவீன உபகரணங்களாலும், போக்குவரத்துச் சாதனங்களாலும் இயந்திரங்களினாலும் வெளிவிடப்படும் பதார்த்தங்களால் சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இன்று சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவது உலக நாடுகளனைத்திலும் பாரிய பிரச்சினையாகத் தலையெடுத்துள்ளது. கடல்களிற் கழிவுநீர் கட்டுப்பாடின்றி விடப்படுவதால் நீர்வாழ் உயிரினங்கள் பலவும் வாழ்விழக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன.

இன்று எல்லோராலும் பரபரப்பாகப் பேசப்படுவதும் வயது வேறுபாடின்றி கற்கப்படுவதுமான 'கணனி' பற்றி யாவரும் அறிவோம். இக்கருவியின் வளர்ச்சியினால் இன்னும் ஒரு சில தசாப்தங்களில் மனிதன் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலையே இழந்துவிடுவான்போல் தெரிகிறது. 'உமது பெயர் என்ன' என்று முன்னே நிற்பவரிடம் கேட்டாலும், ''சற்று நேரம் தாமதியும், கணனியில் மீள் நினைவுக்குக் கொண்டுவந்துதான் சொல்லலாம்.'' என்று கூறினாலும் அதிசயப்படுவதற்கில்லை.

இவ்வாறாக, விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களினால் விஞ்ஞானம் மனிதனுக்கு எவ்வளவு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அளித்து வருகின்றதோ அவ்வளவுக்குக் கேடுகளை விளைவிக்கும் செயற்பாடுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. எனவே நாம் அழிவுதரும் செயற்பாடுகளையும் ஆக்கபூர்வமானவையாக மாற்றி விஞ்ஞானத்தின் மூலம் பெறக்கூடிய உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக இன்றே நாம் சிந்தித்துச் செயற்படத் தொடங்கவேண்டும். இதுவே மனித சமுதாயம் முன்னேற்றப்பாதையில் பீடுநடைபோடச் சிறந்த வழியாகும்.

துரைராஜா அசோகன்
ஆண்டு–10 Q.

With Best Compliments

from

Kamala Jewellers

FOR EXCLUSIVE CRAFTSMANSHIP

341, Galle Road,

Colombo - 4.

T. P. 501995

With Best Compliments From

Ajanthaa Trader

Dealers in Essence, Food Colour Powder Dyes, Perfumes,
Chemicals & Stockists of Raw Materials for Ice Cream,
Biscuit, Sweets Etc.
Commission Agents & Importers of All Kinds

No. 127, Dam Street,
COLOMBO - 12.

With Best Compliments
from

SARATH IMPORT (PVT) LTD.

Importers of Essences, Food Colours, Gelatine,
Glucose, Chemicals Etc.

Office :-
180/4, People's Park,
Gasworks Street, Pettah,
Colombo-11.
T'Phone : 29571

Stores :-
21, St. Michael's Road,
Kollupitiya,
Colombo-3.
T'Phone : 448768

Let Me....!

Where knowledge might be found,
Let met learn it;

Where honour might be gained,
Let me learn it;

Wherc Comfort might be wanted,
Let me render it;

Where kindness might be given,
Let me show it;

Where effort might be needed,
Let me give it;

Where Challenge might be offered,
Let me take it.

Nirmalan - Anandacoomarasamy
Year 13 L

என் கடன்பணி...!

எவ்விடத்தில் புலமை திரட்டப்படலாமோ,
என் கடன்பணி அதனை தெரிந்து கொள்வது;

எவ்விடத்தில் கௌரவம் பெற்றுக்கொள்ளலாமோ,
என் கடன்பணி அதனை கற்றுக்கொள்வது;

எவ்விடத்தில் ஆறுதல் தேவைப்படுகின்றதோ,
என் கடன்பணி அதனை அளிப்பது;

எவ்விடத்தில் இரக்கம் காண்பிக்கப்படலாமோ,
என் கடன்பணி அதனை தெரிவிப்பது;

எவ்விடத்தில் முயற்சி தேவைப்படுகின்றதோ,
என் கடன்பணி அதனை ஊக்குவிப்பது;

எவ்விடத்தில் சவால் விடப்படுகின்றதோ,
என் கடன்பணி அதனை ஏற்றுக்கொள்வது;

நிர்மலன் ஆனந்தகுமாரசாமி
ஆண்டு 13 L

With Best Compliments

From

Dr. M. V. Kailayanathan (Justice of Peace)
(Proprietor)

Any Medical Requirements

Visit

Ranga Pharmacy

No. 7, Jampettah Street,
Colombo - 13.

With Best Wishes from

SJ

Selva Jewellery Mart

150, Sea Street,
Colombo - 11

WITH THE BEST COMPLIMENTS FROM

WESTERN TRAVELS AND TOURS

379 1/1 GALLE ROAD,
COLOMBO - 6.

T. P. No. 583054 FAX: 583054

For Cheapest Air Fares Around The World

With Best Compliments From

Indra Jewellers

46, Sea Street,
Colombo - 11.

T'Phone: 447690

விகடத்துணுக்குகள்

மகன்; அப்பா சுமிங்பூள் கட்ட டொனேஷன் கேக்கிறாங்க
அப்பா: (குசினிக்குள் சென்று வந்து) இந்தா, இந்த டம்ளர் நிறைய தண் ணீர் இருக்கு இதைக் கொண்டு அவங்கட்ட கொடு

செ. செந்தூரன் 7S

ஆசிரியர்: முரளி நீயேன் நேற்று என் அனுமதியில்லாமல் வகுப்பை விட்டு வெளியில் சென்றாய்?
முரளி: எனக்கு நித்திரையில் நடக்கும் பழக்கமுண்டு

இ. பிரணவன் 7S

ஒருவன்: உங்க அம்மா கானில் வழுக்கி விழுந்து கால் உடைஞ்சதுக்கு ஏன் போய் கண் ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும்?
மற்றவன்: கண் ஒழுங்கா தெரிஞ்சா ஏன் கானில் வழுக்கி விழ வேண்டும்?

ரஜிவ் பிரசண்ணா 7S

மனைவி: இதுக்குத் தான் அப்பவே சொன்னேன் கரப்பான் பூச்சி டிசைன் போட்ட சாரி வேண்டாமென்னு கேட்டீங்களா?
கணவன்: ஏன்? என்னாச்சு?
மனைவி: இப்ப உண்மையான கரப்பான் பூச்சி எங்க ஊறுதுனு தெரியலே

சி. கேதிஸ்வரம் 7S

ஒருவர்: எனது பையன் வளர்ந்தவுடன் ''கார்ல் மார்க்ஸ்'' போல் சிறந்த மேதையாவான்
மற்றவர்: எப்படிச் சொல்கிறீர்கள்?
ஒருவர்: பின்னே என்ன! எல்லாப் பாடத்திலும் கால்மாக்ஸ் தான்(25புள்ளி) வாங்கியிருக்கிறான்

சு. நிலக்ஷன் 11Q

தலைவர்: மகா ஜனங்களே! எதிர்க்கட்சியைச் சேர்ந்த ராமநாதன் ஒரு துரோகி, வஞ்சகன், மக்களை ஏமாற்றிப் பிழைப்பவன்.........
செயலாளர்: (இரகசியமாக) தலைவா! இன்று அவர் எமது கட்சியில் சேர்ந்து விட்டார்
தலைவர்:...... என்று யாராவது கூறினால் அவனை எமது கட்சித் தொண் டர்கள் சும்மா விடமாட்டார்கள்

சு. நிலக்ஷன் 11Q

ராஜா: சர்வன்ட், சர்வன்ட் சோற்றில் ஒரு கொசு கிடக்கிறது.
சர்வன்ட்: கவலைப்பட வேண்டாம் பருப்பில் உள்ள சிலந்தி அதை பிடித்து விடும்.

எச். எ. ஆசிப் நிம்றி 13L

நோயாளி: எனது இதயத்தில் ஏதாவது கோளாறா டாக்டர்?
டாக்டர்: நான் உங்களை நன்றாக பரிசோதித்து விட்டேன் ஒன்று மட் டுமே என்னால் சொல்ல முடியும் நீங்கள் உயிர் வாழும் வரை உங்கள் இத யம் துடிக்கும்.

எச். எ. ஆசிப் நிம்றி 13L

தமிழாசிரியர்: குமார் ஏணியிலிருந்து விழுந்தான்
இது என்ன காலம்?
மாணவன்: குமாரின் கெட்ட காலம் சேர்

கு. கணேந்திரன் 10Q

நீதிபதி: சாட்சியங்களைவைத்துப் பார்க்கும் போது கூண்டில் நிற்கும் குப்புசாமி, மக்களை ஏமாற்றி வெகு சாதூரியமாக கண்களில் மண்ணை தூவி, அவர்களின் பொருட்களை திருடி, பொலிஸ்காரரிடமிருந்து புத்திசாலித்தனமாகத் தப்பி.....
குப்புசாமி; (குறுக்கிட்டு) ரொம்ப புகழாதையுங்க சேர் ...... கூச்சமாயிருக்கு

க. நிலக்ஷன் 11Q

நீதிபதி: ஓடர்! ஓடர்! ஓடர்!
குற்றவாளி: (ஏதோ நினைவாக) இரண்டு இட்லி ஒரு வடை

கு. கணேந்திரன் 10Q

ஆசிரியர்: ஓடு மீன் ஓட உறு மீன்வரும் வரை காத்திருக்குமாம் கொக்கு
மாணவன்: அதென்ன சேர் மாம்கொக்கு?
ஆசிரியர்: அது மாமரத்தில் வசிக்கும் கொக்காக இருக்கும்.

க. ரமணாஹரன் 10Q

ஒருவர்: என் நண்பர் சிறு பிள்ளைகளிடம் கூட தலைகுனிந்து தான் கதைப்பார்
மற்றவர்: ஆகா! என்ன தாழ்மையுள்ள சுபாவம் என்ன இருந்தாலும் அவர் மரியாதை கொடுப்பதில் கொஞ்சம் ஓவராய் போய் விட்டார் போல் தோன்றவில்லையா?
ஒருவர்: அதில்ல சார், அவர் மிகவும் உயரமான மனிதர் என கூற வந்தேன்.

க. ரமணாஹரன் 10Q

உலோபி: தலை முடி வெட்ட எவ்வளவு?
முடிவெட்டுபவர்: 10 ரூபாய்
உலோபி: ஷேவ் பண்ண எவ்வளவு?
முடிவெட்டுபவர்: 5 ரூபாய்
உலோபி: சரி தலையை ஷேவ் பண்ணுங்கள்

எச். எ. ஆசிப் நிம்றி 13 L

சோமு: அடே ராமு உங்கள் வீட்டுல இன்னிக்கு கத்தரிக்காய் சாம்பாரா?
ராமு: ஆமா! எப்படி கண்டு பிடிச்சே?
சோமு: எங்கள் வீட்டு கத்தரி பாத்தில ஒரு செடியை காணோம்.

சி. கேதிஸ்வரம் 7S

ஒருத்தி: புதுசா வந்த வேலைக்காரியை ஏன்டி திருப்பி அனுப்பிட்டே?
மற்றவள்: அவளோட ஜாதகமும் என் கணவரோட ஜாதகமும் அநியாயத்துக்குப் பொருத்தமாக இருக்கே

செல்வராஜா நிரோஷன் காஞ்சன்

டாக்டர்: என்ன பிரச்சனை உங்களுக்கு
நோயாளி: தினமும் காலை எழுந்தவுடன் அரை மணி நேரம் தலை சுற்றுகிறது டாக்டர்
டாக்டர்: அப்படியானால் அரை மணித்தியாலம் பிந்தி எழும்புங்கள்

எச். எ. ஆசிப் நிம்றி 13L

Wishing all the best for the Growth of

Tamil Literary Association of Royal College.

MARATHON VIDEO

G I-6 Ground Floor

Majestic City,

Colombo - 4.

எங்கள் தாய்மொழியான தமிழ்மொழி

''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடியாம்'' அக்குடியில் செழித்து வளர்ந்த மொழியே தாய்மொழியான தமிழ்மொழியாகும். எப்போதும் தமிழ்த் தாய் இளமையாயும் அன்னையாகவும் விளங்குகின்றாள். உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் மூத்த மொழியே தமிழ் மொழியாகும். தமிழ் அன்னை இறவா தன்மை பெற்று இவ்வுலகில் செழிக்கின்றாள். தமிழ் அன்னைக்கு சாவா நிலை இருப்பதால் தமிழ் மொழிக்கும் அழியா நிலையுள்ளது. ''உலகத் தனிச் செம் மொழி'' என்னும் பாராட்டு கூட இத் தகைய தமிழ் மொழிக்கே உரியது. வேறு மொழிக்கு இல்லாத பெரும் சிறப்பும் தமிழ் மொழிக்கே உண்டு.

காப்பின்றியும், பிற மொழிகளின் உதவியின்றியும் தனித்துக் கோலோச்சும், தகுதியும் திறமையும் முழுமை முற்றுமை யும் தமிழ் மொழிக்கே உள்ளது. இனித் தும் தனித்தும் இயங்கும் தமிழிற்கு ஈடாய் தமிழையே சொல்லமுடியும். பல் வேறு தாக்கங்கள் வந்தபோதிலும் தமிழ் மொழி தன் நிலையினின்று தவறாமல் அதற்கு எதிர்மாறாக உயர்ந்து செல் கிறது. தமிழ் அன்னைக்கு தமிழ் மொழியை உலகெல்லாம் பரவச் செய்ய வேண்டுமென்ற ஆவல் இன்று நாளுக்கு நாள் அதிகரித்ததேயொழிய குறைய வில்லை.

இத்தமிழ் மொழியை புகழ்ந்து பாடாத எந்த புலவருமேயில்லை. தமிழ் மொழிக்கு அரசன், மக்கள், புலவர்கள் சுருக்கமாக சொல்லப்போனால் உலகத் திலுள்ள எல்லா தமிழ் மக்களுமே இதற்கு மரியாதை அளிக்கின்றனர். சுப்பிரமணிய பாரதியாருடைய,

''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகைச் செய்தல் வேண்டும்''

என்பது அமுத வாக்காகும். தீந்தத்தமிழ் மொழியின் தேன் சுவையை உலகத்தில் உள்ளோருக்கு அறிவிக்கவும், உலகத் திலுள்ள ஏனைய மொழிகளுக்கெல்லாம் சமமாகத் தமிழ் மொழியை உயர்த்தவும், பலவகையான பல புது முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. உலகத் தமிழ் மாநாடுகள் நடாத்தப்படுகின்றன. பிரான் சிலும் (France), அமெரிக்காவிலும் (U S.A), கொழும்பு நகரிலும், கோலாலம்பூரிலும் (Kualalumpur) தமிழினத்தின் தன்மார்க்க குரல்கள் ஒலிக்கின்றன. ஆம்! தமிழ் மறு மலர்ச்சி பெற்று வருகின்றது.

இத்தமிழ் மொழியின் மூத்த இலக் கணமாய் இன்று இருப்பது ''தொல் காப்பியம்'' என்ற நூலாகும். தமிழ் மொழியின் வளமையை சொல்ல இத் தொன் நூல் ஒன்று போதும். தமிழ் மொழி தன்பால் இன்று அணைத்துக் கொண்டுள்ள நூல்கள் ஆயிரமாயிரம். தமிழ் மொழியிலுள்ள இலக்கியச் சோலை யில் புகுந்தால், வாழ்க்கையை மணமாக் கும் வண்ண மலர்களைப் பறிக்கலாம். தமிழ் மொழியிலுள்ள இலக்கணக் காட் டிற்குச் சென்று நுழைந்தால் மொழி நெறிக்கும் வாழ்வின் வழி நெறிக்கும் சரி யான சட்ட விதிகளைப் படிக்கலாம். பெருமை வாய்ந்த இத்தமிழ் மொழி கற் றாரையும் உற்றாரையும் வளப்படுத்தும், நெறிப்படுத்தும், முறைப்படுத்தும்.

சிறப்பு ''ழ'' கரத்தையும், சிறப்பு ''ற'' கரத்தையும் தனி உரிமையாகப் பெற்றது. தண்டமிழின் சிறப்பு ''குற்றிய லுகரம்'' என்ற சிறப்போசை தமிழுக்கு தனிச்சிறப்பு நல்குவது ''ஃ'' என்பது ஆயுத எழுத்து தமிழில் மட்டுமேயுள்ளது. மேலும் பக்தியான இலக்கியங்கள் தமிழில் ஏராளமாகத் தோன்றியுள்ளது.

தமிழ் அன்னை தந்த தமிழ்மொழியை எமது உயிரெனப் போற்றி அதன் வளர்ச்சிக்குப் பணியாற்றுவது நம்கடமையாகும். கதிரவனால் மண்ணின் இருளும் கன்னித் தமிழ் மொழியால் மனதின் இருளும் நீங்கும். தமிழ், சிலர் சொல்வதுபோல், எண்ணத்தின் வெளிப்பாட்டுக்கு உதவும் ஒரு கருவி மட்டுமன்றி அது தமிழ் மக்களின் நாகரிகமானது. பண்பாடு, ஒழுக்கம், கலை ஆகியவற்றின் தித்திப்பு வெள்ளத்தை நெடுந்தொலைவிலிருந்து கொண்டு வந்து கொடுக்கும் கருவியாகும். அந்த தமிழ் அருவியில் குளிப்போம்! தமிழ் மாந்தர்களாய்க் குளிப்போமாக.

வாழ்க தமிழ்மொழி வளர்க தமிழ் மொழி

செல்வரட்ணம் செந்தூரன்
ஆண்டு 7'S'



With Best Compliments From

V.T.R. SINGAMS

Dealers in all Types of Electrical Fittings, Electric Wires, P. V. C. Pipes Switch - Gears, Earth Leakage Circuit Breakers, Miniature Circuit Breakers and Mounting Plastic Boxes, Telephone Sockets, T. V. Sockets Etc.

No. 419, Galle Road,
Colombo - 4.

Telephone : 503607

With Best Compliments

From

Gaythana Jewellers

With Best Compliments

from

WALSTONS SCHOOL CHALK

Largest Manufacturers in Sri Lanka.

Dabrera Brothers

213, Welivita, Kaduwela

Phone :- 57247

With Best Compliments

From

Silver line Garments Maldives (Pvt) Ltd.

2nd Floor, Metropolis, Male
Republic of Maldives.

Telephone : 323276, 326596
Fax : 960-322472
Telex : 66023 Silver MF

With Best Compliments

Gaythana Jewellers

With Best Compliments

Largest manufacturers in Sri Lanka

Dabrera Brothers

கலைகளினால் நாம் அடையும் பயன்கள்

''கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு'' என்று பாடினார் ஔவைப் பிராட்டியார். நாம் அறிந்தவையும் அறிந்து கொள்பவையும் ஒரு சிறிதே. இன்னும் எத்தனைக் கற்றாலும் மேலும் மேலும் கற்பதற்குள்ள பல இந்தப் பிரபஞ்சத்தில் உள. கற்றவையும், கற்பவையும் கற்கப்புகுவனவும் கலைகளின் அம்சங்களைக் கொண்டுள்ளனவாகும்.

அழிவுக்கு ஆதாரமான கலையுணர்வுகளால் புதிய பல சித்தாந்தங்களைக் கலைகள் நமக்கு அளிக்கின்றன. இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், சித்திரம், ஆகியன நமது உள்ளறிவை விளக்குவதற்கு சாதகமாகின்றன. நமது முன்னோர்கள் கலையை அறுபத்து நான்காக வகுத்து வளர்த்தனர். சமுதாயத்தின் உயர்வுக்கும், நல்லொழுக்கத்திற்கும், தீய செயல்களினால் ஏற்படும் தீங்குகளை விளக்குவதற்கும், பக்தி, பரவசம், கருணை, அன்பு, அருள் ஆகியனவற்றை ஊக்குவிப்பதற்கும் கலைகள் மிகவும் உதவுவதாகும்.

உண்மையான உணர்வுக்கு எல்லை இல்லை. இந்த உணர்வே பிரபஞ்ச உணர்வு எனப்படும். இந்த பிரபஞ்ச உணர்வின் வியாபித்ததன்மை ஒவ்வொரு பொருளிலும் உறைவதால் அதனை உணர்ந்துகொள்ள கலை அவசியமாகிறது. எல்லையில்லாத தத்துவங்களை அறியவும், விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆதாரமாக ஈடுபடுத்தப்படுவதும் கலைகளினால் எனலாம். தனிமனித உள்ளறிவை வளர்ப்பதற்கும், கற்பனா சக்தியை ஊட்டுவதற்கும் சிந்தனைக்கு விருந்தளிப்பதற்கும் கலைகளே முதலிடம் வகிக்கின்றன. தமது கருத்திற் பதிந்தவற்றை கற்பனாத் திறமையால் வெளிப்படுத்துவதே கலைகளின் வழியில் அமைகிறது.

மனப்புலன்களின் களஞ்சியம், புலன்கள் வழியாக நாம் பெறும் சகல உணர்வுகளையும் மனம் அறிகின்றது. மனத்தின் உணர்வுகளை ஆதாரமாகக் கொண்டே நமது அறிவுத்திறனுக்கு ஏற்ப வெளியுலகக் காட்சிகளையும், சம்பவங்களையும் மனதில் பதித்து அவற்றின் உயிர்ப்பு எவ்வாறு ஏற்பட்டது - அமைப்பும் அழகும் எவ்வாறு தோன்றின என்பதைப் பிரதிபலித்திடவும் கலைகள் கருவியாக அமைகின்றன. கலைகள் யாவும் சிருட்டிக்கப்படுபவை. இயற்கை எழிலின் அற்புதங்களை நமது அறிவுக்கெட்டியவாறும், அனுபவத்திற்கு ஏற்றவாறும், கலைகளின் மூலம் நுண்ணறிவை விளக்குவதே ஒரு அரிய சாதனையாகும். இதனையே லலித கலைகள் புலப்படுத்துகின்றன.

ஒவ்வொரு மனிதனும் தனது தவறுதல்களை எண்ணுவதில்லை. பிறர் மீது தவறுகாணும் பழக்கமே வழக்கமாக கொண்டவனாக இருக்கின்றான் என்பதில் ஆச்சரியம் இல்லை. இவ்வகை மனத்தினர் வாழும் சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த கலைகளினால் தான் நிச்சயம் செயல்படுத்த முடியும். இயல், இசை, நாடகம், சிற்பம், சித்திரம், நடனம், பாட்டு ஆகியவற்றிலும் எளிதான முறையில் தவறுதல்களை எடுத்துக்காட்டலாம்.

உதாரணமாக மதுவையே நம்பி வாழும் ஒருவனை நல்வழிப்படுத்திட கலைகளின் மூலம் முயற்சிக்கலாம்.

மனக்கவலைகள் ஏற்படாவாறு வேறு மகிழ்ச்சிக் கருத்துக்களைக் கூறுவதும் ஒரு கலைதான். ஒரு சமுதாயம் உயர்ந்து முன்னேற வேண்டுமானால் ''ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே'' என்று பாரதியார் அன்று பாடிவைத்ததுபோல் இன்று மக்களின் பேரளவும் கருணா உள்ளமும் எமது தமிழ்ப் பண்பாடும் வளர்ச்சி பெறுவதற்கும் கலை முயற்சி அவசியம்.

நாம் காணும் சகல பொருட்களிலும் கலையுணர்வுகள் தோய்ந்து கிடக்கின்றன. இந்த கலாவுணர்வுகளை அழகிய அலங்காரங்களாக சித்தரிப்பதே கலா அம்சமாகும். மனத்தின் பிரதிபலிப்புகளுக்கு உருவகம் கொடுத்து அதனை ஆக்கமடையச் செய்யும் படிக்கம் கலைகள் வழியாகப் புலப்படுகின்றன. கலைகள் மனித வாழ்வின் சகல காரியங்களுக்கும் ஏற்ற அற்புதமான படைப்புக்களை உருவாக்குகின்றன.

கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத்தக-

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கேற்ப இத்தகைய பெருமைப் பொருந்திய கலைகளை வளர்த்து உண்மையை உணர்ந்து ஆயக்கலைகள் அறுபத்து நான்கினையும் பெற்று பிரகாசிப்போமாக.

வாழ்க கலைமகள் வாழ்க கலைச்சுடர்

ஜே. ஹரிஹரன் முரளி
ஆண்டு 7 S.

புதிர்க் கணக்கு

ஒருவனிடம் வினோதமான குதிரை இருந்தது. அது மணிக்கு 60Km வேகத்தில் ஓடக்கூடியது. ஆனால் குதிரையோ 10Km முன்னோக்கி ஓடினால் 5Km பின்னோக்கியும் ஓடும்.

அப்படியானால் திறமையான குதிரையோட்டி ஒருவன் குதிரையில் அமர்ந்து 50Km தூரத்தை எவ்வளவு நேரத்தில் கடந்திருப்பான்?

விடை: அவன் குதிரை முன்பக்கமாக ஓடும் போது முன்பக்கமாகவும் குதிரை பின்பக்கமாக ஓடும்போது குதிரையை பின்பக்கமாகவும் நிறுத்துவான்.

ஆகவே அவன் 50 நிமிடங்களில் 50 Km ஐ கடந்திருப்பான்.

என் தாயகத்தில் துலங்கும் நன் முத்துக்கள்

கங்கையிலே பெரியது
மகாவலியே
மலையிலே பெரியது
பீதுருதலாகாலையே
நீர்வீழ்ச்சியில் பெரியது
தியலுமவே
நீர்வீழ்ச்சியில் அழகியது
துங்ஹிந்தவே
பூங்காவில் பெரியது
ஹக்கலைப் பூங்காவே
நகரில் அழகியது
நுவரெலியாவே
மழை அதிகம் பொழிவது
வட்ட வளையிலே
இயற்கைத்துறையில் பெரியது
திருகோணமலைத்துறையே
செயற்கைத்துறையில் பெரியது
கொழும்பே
தேசிய வனத்துள் பெரியது
சிங்கராசவனமே
மிருகங்களின் சரணாலயம்
யாலயும் வில்பத்துமே
பறவைகளின் சரணாலயம்
குமணவே
தலைநக ரெமது
ஜயவர்த்தனபுரவே
முதுசொம் எமது கலையகம்
றோயலே
அதனிலும் ரசனை மிக்கது
இலக்கிய மன்றமே.

அ. இர்ஹாம் பாயிஸ்
ஆண்டு 7 R

BEST WISHES FROM

"கோமதி விலாஸ்"

சைவ உணவு

142, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

தொலைபேசி: 434144

With Best Wishes from

REXPO ENTERPRISES

General Hardware, Electrical Merchants, Commission Agent & Suppliers, Dealers in Cement.

71-A, Wolfendhal Street,
Colombo-13.
Phone: 434460

மாறிய மனம்

காலைப்பொழுது கதிரவன் தன் தங் கக்கரங்களால் கீழ் வானத்தை செந்நிற மாக்கிக் கொண்டிருந்தான். குயிலின் இன்னிசைக்குரலும் கோயில் மணி ஓசை யும் ஒருங்கிணைந்து பூபாளம் பாடின. மலர்கள் தம் நறுமணத்தை பரப்பிய வண் ணம்தென்றலில் அசைந்தாடின. இந்தச் சூழ்நிலைக்கு கொஞ்சமும் பொருத்தமில் லாமல் பரட்டைத் தலையும், சிவந்த கண் ணும் கசங்கிய ஷேர்ட்டும் கொண்டு குமரன் இன்னும் கட்டிலிலிருந்து எழும் பாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது கட்டிலுக்குக் கீழே காகிதக் குவியல் எதை எதையோ எழுதி தன் மனத்தின் உணர்ச்சிகளை கொட்டிக் கொள்கிறான். இவ்வளவிற்கும் அவன் 18 வயது நிரம்பிய கட்டிளம் காளை. மாசு மறுவற்ற தோற்றம். கண் களில் ஒரு குழந்தையின் எதிர்பார்ப்பான பார்வை. குமரன் அனாதை அல்ல தாய் தந்தைக்கு ஒரே பிள்ளை. அவன் மனதில் ஏனிந்த போராட்டம்?

அவன் அம்மா வருகிறாள். ''குமரா! நீ இன்னும் எழும்பவில்லையா? பல்துலக்கி குளித்துவிட்டு போய் சாப்பிடு. எனக்கும் வெளியில் சில வேலை இருக்கிறது. போய் வருகிறேன்'' என்று அவனை ஏசிவிட்டு அவன் பதிலுக்கு காத்திராமல் ''டம்பப்பை'', குடை சகிதம் செருப்பு மாட்டிக்கொண்டு அவன் அம்மா போய் விடுகிறாள். குமரன் தன் நிலையிலிருந்து சிறிதும் மாறவில்லை. இன்னும் கொஞ்சம் எழுதலாமா என அவன் மனம் அலை பாய்கிறது. சிறிது நேரத்திற்கு பின்பு அவன் அப்பா வாசலில் வந்து நிற்கிறார். அவர் கண்களிலிருந்த மிடுக்கை பார்த் ததும் குமரன் சற்று மிரள்கிறான். இப் பொழுது சிறிது மிரட்டலுடன் அவர் அவனை அதட்டுகிறார். ''நீ குளித்து விட்டு ஒழுங்காக உடையணிந்து கொண்டு பாடம் படிக்க போகிறாயா இல்லையா?'' ஓநாய்க்கு அஞ்சிய ஆட்டுக்குட்டிபோல குமரன் அப்பா சொல்கின்றபடி செய் தான். சிறிது நேரத்தில் அப்பாவின் சினே கிதர்கள் வந்து சேருகின்றனர். தங்களுக் குள் என்னென்னவோ பேசிக்கொள்கின் றனர். இடையில் குமரன் பற்றியும் சம்பாஷணை அடிபடுகின்றது. ''ஆமாம், சிவஞானம் (குமரனின் அப்பா) குமரன் இப்பொழுது நல்ல பிள்ளையாயிருக் கிறான், போலும்''. இது நண்பர் கிருஷ்ணமூர்த்தியின் பேச்சு. ஆகவே சிவஞானம் ''சில வேளையில் அவன் ஒழுங்காக நடந்து கொள்கிறான். ஒரு பூசை செய்து அவனுக்கு தாயத்து கட்டி விடவேண்டும். எங்கள் பிள்ளையின் கவலைதான் எங்களுக்கும்'' என்றார். பழையபடி அரட்டை தொடங்குகிறது. சற்று நேரத்தின் பின் குமரனின் அம்மா வீடு திரும்புகிறாள். அரட்டை ஓய்ந்த பின் சகலரும் கிளம்புகின்றனர். அம்மா குமர னிடம் ''நாங்கள் ஒரு சினேகிதரின் வீட்டுக்கு விருந்துக்கு போகிறோம். பக் கத்து வீட்டு பாலன் வந்தால் அவனுடன் கதைத்துக்கொண்டிரு'' என்று சொல்லி விட்டு சென்றாள். குமரனின் எண்ணக் குதிரை விசைதட்டியது போல நாலு கால் பாய்ச்சலில் பறக்கின்றது. பழையபடி ஏதோ கிறுக்கின்றான் ஆம் அவனது துணை யெல்லாம் அவனது எழுதுகோலும், காகி தங்களுமே. குமரனை தனிமைபடுத்தி அவனது கோலத்துக்கு காரணமானவர் கள் வேறொருவருமல்லர் அவனது பெற் றோர் தான்! அவனுக்கு ஒரு கோளாறு மில்லை. தங்கள் சுயநலத்திற்காக, தங் கள் இன்பத்திற்காக பாழும் பிஞ்சு மனத்தை அவனை பற்றி படர வேண்டிய பாசவலையை சின்னாபின்னபடுத்து கின்றனர்.

மோட்டு வளையை பார்த்துக்கொண்டிருந்த குமரனை பார்க்க பாலன் வருகின்றான். பாலனை கண்டதும் பாலைவனப் பூஞ்சோலை போல இருக்கிறது குமரனுக்கு. அவனது கண்களிலிருந்து ஒளி தெறித்தது. மனதில் எழுந்த உணர்ச்சிகளையெல்லாம் சொற்களில் வடித்து இடைநிறுத்தாமல் அவனுடன் கதைக்கிறான். பாலன் அவனை வீட்டுக்கு அழைத்து செல்கின்றான். அங்கு பாலனின் அம்மா உணவை ஊட்டி, கதைகள் சொல்லி பாடங்களும் கற்பிக்கிறார். அப்பொழுது குமரன் தான் பாலனாக பிறக்கவில்லையே என ஏங்கினான். இவ் ஏக்கத்தை புரிந்து கொண்ட பாலனின் அம்மா ''நீ என் மகன்தான். ஏதாவது விளங்கவில்லை என்றால் என்னிடம் கேள்'' என்றார். குமரனும் சந்தோஷத்தில் தலையாட்டினான்.

இனி குமரன் கிறுக்க மாட்டான். ஒன்றையும் வெறித்து பார்க்கமாட்டான் ஏனைய சிறார் போல படித்து விளையாடி சந்தோஷமாக வாழ்வான்.

இ. பிரணவன்
ஆண்டு – 7 'S'

To Royal College with Love

V

From A Well Wisher

With Best Compliments
From

WHOLESALE & RETAIL DEALERS IN GROCERIES

K. R. BROTHERS

General Merchants - Dealers in Sundry Item Etc.

200, Bodhiraja Mawatha, (Gas Works Street)
Colombo - 11.

WITH BEST COMPLIMENTS
FROM

★ Imported Sarees with Malchy blouses ★ Indian Silk Sarees ★ Cotton Sarees ★ Imported Gents Shirts ★ Denim Trousers (all sizes) Fancy Trouser, Imported Shorts & T. Shirts ★ All Kinds of dresses, Skirt & Blouses ★ Salwar Kameez ★ Children Clothes-all ages for Boys & Girls Suitings (Imported & Local) - Gift Items - all makes of Film Rolls Processing & Developing under taken, Ladies & Gents Tailoring, a Speciality urgent orders for Tailoring under taken.

K. Maart

142 1/4, 1st Floor, Galle Road, Wellawatte.
(Opposite Wellawatte Market) Tel: 503562.

Well Wishes From

Employees' Trust Fund Board

VISION THROUGH FREE ETF LENS
TO
ETF MEMBERS
AFTER CATARACT OPERATIONS
COST OF LENS IMPLANTED AT
EYE HOSPITAL COLOMBO & GENERAL HOSPITAL KANDY
REIMBURSED NOW ON

For Further Particulars :-

EMPLOYEES' TRUST FUND BOARD
1st Floor, Labour Secretariat,
P. O. Box 807,
Colombo-5.

Telephone: 581704, 588709, 589937.

தமிழ் வளர்த்த சான்றோர்களும் தமிழரை வளர்த்த தமிழ்த் தாயும்

எமது தாய் மொழியாம் தமிழ் மொழி தரணியிலே தலை சிறந்த தன்னிகரற்ற மொழியாகும். பண்டைக் காலம் தொட்டு பல மொழிகள் தோன்றி இன்று இருந்த இடம் தெரியாது அழிந்துள்ளன. ஆனால் தொன்மை வாய்ந்த நம் தமிழோ இன்றும் கன்னித் தமிழாகவே காட்சி அளிக்கின்றது.

இவ்வாறு '' கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ் '' என்னும் புகழுக்குரிய நம் தமிழ் மொழியை தம் தாயினும் மேலாகப் போற்றி வளர்த்தவர்கள் பலராவர். தேனினும் இனிய நம் தமிழ் மொழியானது பல புலவர்களாலும், மன்னர்களாலும், வள்ளல்களாலும் வித்திட்டு நீர்பாய்ச்சி, களைபிடுங்கி, செழிப்பாக வளர்க்கப்பட்ட விதம், வியக்கத்தக்கதும் போற்றக் கூடியதும் ஆகும். இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதியிலிருக்கும் திராவிடம், தமிழகம் போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த தமிழ் நாட்டிலேயே முதன் முதலில் தமிழ் மொழி தோன்றி வளர்ந்தது என்பது அறிஞர்களின் கருத்தாகும். தமிழ் தோன்றிய தமிழ் நாட்டைப் பண்டைக் காலத்திலே சேரர், சோழர், பாண்டியர் எனப்படும் முடியுடை வேந்தர் மூவர் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்களே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அடிகோலியவர்களும் தமிழை தமிழர்களின் தாயாக்கியவர்களும் ஆவர். இவர்களை விட வேறு பல மன்னர்களும் தமிழ்த் தாயை போற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாண்டி நாட்டை ஆண்ட பாண்டியர்களே சங்கம் வைத்து தமிழ் வளர்த்தோர் என்னும் புகழுக்குரியவர்களாவர். பாண்டியர்களால் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட சங்கம் '' தலைச் சங்கம் '' அல்லது முதற்சங்கம் எனப்படும். இச்சங்கமானது இப்போது கன்னியாகுமரிக்குத் தெற்கே கடலில் அழிந்திருக்கும் குமரிக் கண்டத்திலுள்ள தென்மதுரை என்னும் நகரிலேயே தோற்றுவிக்கப்பட்டது. இச் சங்கத் தலைவர்கள் சிவபெருமான், முருகவேள், அகத்தியர் என்போராவர். இச் சங்கம் கடலால் அழிய இடைச் சங்கம் கபாடபுரத்திலே தோற்றுவிக்கப்பட்டது. இதன் தலைமைப் புலவர் அகத்தியராவர். இதுவும் கடலால் அழிய கடைச்சங்கம் ஆனது இப்பொழுதுள்ள மதுரையிலே தோற்றுவிக்கப்பட்டது. இச் சங்கத் தலைவர் இறைவனிடமே குற்றங் கண்ட நக்கீரர் என்பவராவர். கடைச் சங்கத்திலேயே ஈழப்புலவரான ' ஈழத்துப் பூதன் தேவனாரும் ' இருந்து தமிழாராய்ந்தார் என்பது நமக்குப் பெருமை தருவதாகும்.

மேற்கண்டவாறு மன்னர்கள் தமிழ் வளர்க்க செந்தமிழ் புலவர்கள் தமது அறிவாற்றலாலும், சொல்லாற்றலாலும் தமிழ்வளர்த்தனர். தமிழ் வளர்த்த புலவர்களுள் பாரதியார், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், வில்லிபுத்தூரர், திருவள்ளுவர் போன்ற தமிழகப் புலவர்களும், சோமசுந்தரப் புலவர், ஆறுமுக நாவலர் போன்ற ஈழத்துப் புலவர்களும் முதலிடம் பெறுவர். இப் புலவர்கள் தமிழை வளர்ப்பதற்காக மட்டும் கவி பாடவில்லை. தமிழரை திருத்துவதற்காகவும் கவிபாடினார்கள். அவர்கள் எதற்காகப் பாடினாலும் சரி அவர்களது பாடல்கள்

தமிழ் சுவை மிகுந்தவையாக இருந்தன. அதனால் தமிழர் அதனைப் படித்தனர். திருந்தினர். தமிழ் தாயைப் போற்றினர்.

இவ்வினிய பைந்தமிழைக் கற்று சீரிய செந்தமிழ்ப் பாக்களை இயற்றிய புலவர்கள் பாடிய வசைகளை வள்ளல்களும் மன்னர்களும் பொறுத்தனரென்றால் வேறு எவ்விதம் நம் தமிழின் பெருமையை எடுத்தியம்புவது? இச் செந்தமிழ் மொழி நாட்டுப்பற்றையும், ஒற்றுமை உணர்ச்சியையும் வீர எழுச்சியையும் அளிக்கும் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தது. இது தேசப்பற்றை உண்டு பண்ணும் என்பதற்கு பாரதியார்,

'' செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
நம் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறந்தது மூச்சினிலே ''

என்று கூறிய வீர மொழியே சான்றாகும். மேலும் இவர் தமிழ் மொழியையும் தமிழ் புலவர்களையும் போற்ற எண்ணி,

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம். யாமறிந்த புலவர்களிலே கம்பனைப்போல், வள்ளுவனைப் போல், இளங்கோபோல் யாரையும் கண்டிலோம்''

என்று கூறினார்.

பாரதி வழி வந்த பாரதிதாசனோ!

'' தமிழுக்கு அமுதென்று பெயர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர் ''

என்று பாடி தமிழை தம் உயிருக்கு நேராக்கும் விதம் மிகவும் சிறந்ததும் போற்றக் கூடியதும் ஆகும். இவற்றை தவிர ஈழப்புலவர் ஆறுமுக நாவலரது தமிழ் பற்றையும், சமயப்பற்றையும் உலகறியச் செய்யும் பொருட்டு வேறொரு புலவர்.

'' நல்லைநகர் ஆறுமுகநாவலர்
பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே? சுருதியெங்கே?
என்று பாடினார்

இவை எல்லாவற்றையும் விட திருவள்ளுவர் அருளிச் செய்த எல்லா இன, மத மக்களுக்கும் பொருந்தக் கூடிய வாழ்க்கை வழியை கூறும் திருக்குறளானது முதன் முதலில் தமிழிலேயே இயற்றப்பட்டது என்பது தமிழ்த் தாயின் பிள்ளைகளாகிய எமக்குப் பெருமை தருவதாகும். இப்படிப்பட்ட பல புலவர்களது நாவன்மையே நம் தமிழ் தாயின் கற்பைக் காத்து இன்றுவரை கன்னித் தமிழாக மிளிர வைத்தது என்று கூறின் அது மிகையில்லை.

இவ்வாறு மன்னர்களும், புலவர்களும் தமிழ் வளர்க்க தமிழ்தாய் தமிழருக்கு பண்பு கலந்த வீரத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தாள் என்பது யாவரும் ஒத்துக் கொள்ள வேண்டியதொன்றே.

பண்டைத் தமிழ் மன்னர்கள் மண்ணை விரும்பியோ மாபெரும் அரசை விரும்பியோ போர் தொடங்கினரல்லர். மற்றோர் தமிழரை மதிக்கவில்லையே என்ற மானம் குறித்தே அறப்போர் தொடுத்தனர். முகத்திலும், மார்பிலும் உண்டாகும் புண்களை உயிரினும் மேலாக மதித்தனர். முதுகில் புண்பட்ட வீரனை அயலார், பகைவர் மாத்திரமன்றி இல்லாளும் ஈன்ற தாயும் கூட வெறுத்தனர். மயிர் குலைத்தோன், ஒத்த படையிராதோன், இளையோன், முதியோன், முதுகை காட்டுவோன், அடி பிறக்கிட்டோன் ஆகியோரை எதிர்த்து போர் செய்யலாகாதென்பது தமிழன்னையின் கட்டளையாகும். தமிழ் மன்னர்கள் தமிழ் தாயின் கட்டளைப்படியே நடந்ததால் வெற்றிவாகை சூடினர்.

மேலும் தமிழ்த்தாயானவள் தன்னை தழைக்க வைத்த வறிய புலவர்களுக்கும் அடைக்கலம் அளித்தாள். தமிழின் மீது பெருமன்னர்களுக்கு ஆசையை உண்டு பண்ணி அந்த ஆசையை வறிய புலவர்

களின் மூலம் தீர்த்து வைத்தாள். அம் மன்னர்கள் தமக்கு தமிழின்பத்தை அளித்த புலவர்களுக்கு வாழ்வளித்தார் கள். இவ்வாறு தன் புகழ்பாடும் புலவர் களை தமிழ்த் தாய் மன்னர்கள் மூலம் காத்தருளினாள்.

ஆனால் இப்போது தமிழன்னையை கவனிப்பாரில்லை. நம்மவர்கள் தமிழர் என்று சொல்லவோ தமிழை கதைக்கவோ வெட்கப்படுகின்றனர்.

ஆகவே என்னருமை தமிழர்களே உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ் வையும், முன்னோர் வாழ்வையும் ஒப் பிட்டு நோக்குங்கள். தமிழன்னையின் நிலையை சற்று நினைவு கூருங்கள். அவ ளைப் போற்றுங்கள். அவள் உங்களை காப்பாற்றுவாள். நிமிர்ந்த நோக்கு இல் லாத நேயரே நிதானியுங்கள். காவலன் வாயிற்கடை சென்று கணவனின் புகழ் காத்தவள். எங்கள் அன்னை கண்ணகி யாம். பால்மணம் மாறாத பாலகனை படையுடன் களத்துக்கனுப்பியவள் எங் கள் மற்றோர் தாய். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாய வேண்டும். அந்த தாய் மரபு எங்கே வாழையடி வாழையாக வந்த வீரத்திற்கு வழியடைக்கும் கல்லை யார் வைத்தார் கள்? சிந்தியுங்கள் என் அன்பு தமிழர் களே! தாய் மொழி சந்தியில் நின்று தடு மாற நம்மவர்கள் தாள் இட்டுக் கொண்டு வீட்டிலிருப்பதா? இது தகுமா? இது முறையா? எழுங்கள் உணர்ச்சியோடு எழுங்கள் கடைசி மூச்சு இருக்கும்வரை தமிழன்னையை காப்போம் என உறுதி செய்யுங்கள்! அன்றுதான் தமிழ் தழைக் கும் தமிழினம் தலையெடுக்கும்!

வாழ்க நம் தமிழ்
வளர்க தமிழர் வீரம்
ஓங்குக தமிழ்த் தாயின் புகழ்

சு. பாலமுரளி
ஆண்டு:- *10 Q.*

With Best Compliments

from

International Marketing Centre

Dealers in Rice Mill Machineries,
Diesel Engines, Water Pumps, Electrical Goods,
Motors, Hand tools & Spares,

312, Sri Sangaraja Mawatha,
Colombo - 10.

Telephone : 432956 / 432007

WITH BEST COMPLIMENTS

FROM

A WELL WISHER

இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழே!

அகில இலங்கை முஸ்லிம்களதும் பொன்னை நிகர் அன்னைமொழி அருந் தமிழே. 'தமிழ்' என்றால் இனிமை என்று பொருள். ஒரு வேற்று மொழிப் பிரசங் கத்தை அல்லது பாட்டை நாம் செவிமடுக் கும்போது தமிழில் நிகழ்த்தப்படும் பேச்சும் தமிழில் இசைக்கப்படும் பாட்டும் தரும் செவியின்பத்தை அவற்றில் நாம் அனுபவிக்க முடியாது. இவ்வாறு உரைப் பது தமிழ்ப் பற்றும் அபிமானமும் காரண மாகத்தானே என்று சிலர் எண்ணலாம். அவ்வாறன்று; பிறமொழி வல்லுனர்கள் கூட இவ்வுண்மையை மெய்யென நிறுவி யுள்ளனர்.

முஸ்லிம்கள் இந்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகின் றனர். எம் மூதாதையர் தம் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள தமிழ்ப்பேச்சை யும் தமிழ் எழுத்தையுமே உபயோகித்து வந்தனர். சுருங்கக் கூறின், அன்னவர், தமிழ்ப் ''பாஷையை ஆசையோடு நேசித்து, வாசித்து, அதன் மூலம் யோசித்து, இறைவனைப் பூசித்தும்'' வந்தனர் எனினும் மிகையாகாது.

உதாரணமாக முக்திப் பேராநந் தத்தை இலக்காகக் கொண்ட பக்திப் பரவசமுள்ள முஸ்லிம் மேதைகள் பின்வரு மாறு தம் தாய் மொழியாம் தமிழில் பாடிப் பிரார்த்தித்தனர்:

''காவலாய் நிற்கும் வல்லோன்
கர்த்தனாய்ச் சிவனெல்லாம்
ஆவலாய்ப் போற்றி வாழ்த்தி
அதற்குணவளிக்கும் கோமான்
நாவினால் எளியோர் கேட்கும்
நாட்டத்தின்படியே தந்து
தாவிலா றஹ்மத்தாலே
தற்காக்கும் பொருளதாமே''

தமிழ் தென்னிந்தியாவிலும், இலங்கை நாட்டிலும் உள்ள முஸ்லிம்களின் தாய் மொழி. எம் அன்னையர் அம்மொழி மூலமே பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி எம்மை வளர்த்தனர். அம்மொழி மூலமே மழலைப் பேச்சைப் பழக்கினர். அதன் மூலமே கொஞ்சு மொழிபேசி, நெஞ்சில் அமர்த்தி வைத்து சஞ்சலமெலாம் போக ''அஞ்சல்'' எனக்கூறி அகமிக மகிழ்ந் தனர். உச்சி முகர்ந்து உளம் பூரித்தனர். எமது ஆருயிர் அன்னையானவர் அமு தைப் பினைந்து அருங்கையில் எடுத்து ''அல்லாஹ் என்று சொல்லுராஜா! ஆவென்று வாயைத்திற ரோஜா!'' என்று ஆசையோடு அமுதை எமக்கு ஊட்டியதும் எமது தாய்மொழியாம் தமிழ் மூலமாக வன்றோ! எனவே தமிழ் எமது இரத் தோட்டத்தில் இரண்டறக் கலந்து விட் டது.

செவ்விய இலக்கியக் கடலைத் தன்ன கத்தே கொண்ட திவ்விய தமிழ்மொழி, இலங்கை முஸ்லிம்களுக்குச் செய்துள்ள சேவை சொல்லுந்தரமன்று. ஆற்றில் கரைக்கப்பட்ட அற்ப அளவு புளியைப் போல் சிங்கள வெள்ளத்திலே நாம் சீர்கெட்டு அமிழ்ந்திச் சிதறிவிடாமல் இத்தனை நூற்றாண்டுகளாக நம் சமுதா யத்தின் கட்டுக்கோப்பையும் தனித்துவத் தையும் பேணிப் பாதுகாத்து வந்தவள் தமிழ் அன்னையே ஆவாள். இவ்விடயத் தில் நம் முன்னோர்கள் அபார தீர்க்க தரிசனத்துடனும், மதிநுட்பத்துடனும் நடந்து வந்தமை ஆழ்ந்து சிந்தித்துப் போற்றிப் பாராட்டத்தக்க செயலாகும். தூரதிருஷ்டியும் மதிநுட்பமும் இல்லாத இன்றைய இலங்கை முஸ்லிம்கள் பலர் சிங்கள மொழிப் பாடசாலைகளுக்குத் தம் சிறுவர் சிறுமியரை அனுப்புகின்றனர். அது ஒரு குற்றம். சிங்களத்தை நம்முஸ்லிம்

வீடுகளுக்குக் கொண்டுவந்து அதனை வீட்டுப் பாஷையாக்கிக் கொண்டமை மற்றக் குற்றமாகும். இதனால் இனி ஏற்படக் கூடிய பாரதூரமான விபரீத விளைவுகளை இன்னார் உணரவில்லை.

சிங்கள பாஷையை எமது வீட்டுப் பாஷையாக்கிக் கொண்டவுடன், நமது தனித்துவம் அழிந்தொழிந்தேபோகும். நமது கலாசாரம் மறைந்துவிடும். நமது முஸ்லிம் பாடசாலைகளுக்கும், ஆசிரியர் கலாசாலைகளுக்கும் மூடுவிழா நடைபெறும். நமது வானொலி முஸ்லிம் சேவைக்கும் நிகழ்ச்சிகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்படும். நமது ஜூம் ஆப் பிரசங்கங்கள் அல்லோலகல்லோலப்படும். அது மட்டுமா? இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களாகிய மன்னார், கற்பிட்டி, புத்தளம், மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் பெருந்தொகையினராக வாழும் முஸ்லிம் சகோதரர்களுக்கும் மத்திய, மேல், தென் மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள சகோதரத்துவத் தொடர்பு அறுந்து விடும். அம்மட்டல்ல. நமது தப்லீக் (பிரச்சார) மாநாடுகள், மீலாத் விழா (நபிகள் பிறந்த தினவிழா) போன்ற வற்றிற்கு தென்னிந்திய முஸ்லிம் அறிஞர்கள் அடிக்கடி வருவது வழக்கம். இவர்களது தமிழ்மொழி மூலப் பிரசங்கங்களால் எங்கள் இளைய தலைமுறையினர் பயனடையாது போவர்.

இவ்வாறு நாம் கூறுவதால் சிங்கள மொழியை படிக்கவேண்டாம் என்கிறோம் என்று எவரும் தப்பர்த்தம் கொள்ளக் கூடாது. நாம் கூறுவதெல்லாம் சிங்கள மொழியை வீட்டுமொழியாகவோ, தாய் மொழியாகவோ ஆக்கிக்கொள்ள வேண்டாம் என்பதுவேயாகும். இன்னும் சிலர் இப்படியும் கேட்கலாம். அதாவது ''தமிழ் தமிழ்'' என்கிறீர்களே? அதுவும் ஒரு அன்னிய மொழிதானே என்று! ஆயினும் அஃது எமது தாய், தந்தையர் எம்மைப் பெற்று வளர்த்த மொழி. ஆகவே அது தான் எமது தாய்மொழி. அன்றியும், அதனை நாம் பன்னூறு ஆண்டுகளாகப் பேசி எழுதி எமது அரபுப் பதங்களையும் சேர்த்து எமதாக்கிக் கொண்டோம். உதாரணம் ''இஷா, மஃறிப் இடையில்'' என்றால் அஃது அரபுத்தமிழ். அது எமக்கு மட்டுமேவிளங்கும். ஆகவே பாஷை விடயத்தில் இவ்வுண்மையை உணர்ந்து செயல்படுவோமாக.

வாழ்க தமிழ்மொழி
அதுவே எம்மொழி!

கே. எம். அஜ்மல் கமீல் மரிக்கார்
ஆண்டு 10 Q.

With Best Compliments

From

Metropolitan Communications Ltd.

85, BRAYBROOKE PLACE,

COLOMBO - 2.

With Best Compliments

From

GNANAMALAR STORES

102/2, WOLFENDHAL STREET,

COLOMBO - 13.

கோள்களும் வாழ்வும்

அந்தக் காலம் தொடக்கம் மக்கள் மனதில் கிரகங்களைப் பற்றியும் நட்சத்திரங்களைப் பற்றியும் அறிய ஆவல் மிகுந்திருந்த போதிலும் அதை செயல்படுத்துவதற்குரிய விஞ்ஞான வளர்ச்சி குன்றியிருந்தமையினால் அது எட்டாத தூரமாகவே இருந்து வந்தது. அந்தக் கனவை நனவாக்கும் முகமாக 1957 ஒக்டோபரில் செயற்கை விண்வெளிக் கலங்கள் அனுப்பப்பட்டன. முதன் முதலில் ரஷ்யர்களினால் அனுப்பப்பட்ட '' ஸ்புட்னிக் '' பூமியைச் சுற்றியுள்ள ஒழுக்குகளில் வலம் வந்து அவ்வப்போது அவ்விடங்கள் பற்றிய தகவல்களை பூமிக்கு அனுப்பி வந்தது. தொடர்ந்து அனுப்பப்பட்டு வந்த அமெரிக்க '' எக்ஸ்புளோரர் '' (Explorer) பூமியின் வளிமண்டலத்தைப் பற்றிய தகவல்களை பூமிக்கு அனுப்பி வந்தது. பூமியைக் கடந்து சூரியத் தொகுதியில் காணப்படும் மற்றக் கிரகங்களை அடையக் கூடிய ஒரு வகையான விண்வெளிக் கலங்கள் '' புரோப் '' (Probe) என அழைக்கப்படுகிறது. ''வைக்கிங்'' (Viking) என்ற ''புரோப்'' செவ்வாய் வரை சென்று தகவல் அனுப்பியதாகவும், 'Voyager 2' என்ற கலம் அடுத்துள்ள கிரகங்களான வியாழன், சனி, நெப்டியூன் வரை பிரயாணம் மேற்கொண்டது எனவும் தரவுகள் விபரிக்கின்றன. சூரிய மண்டலத்தின் அந்தத்தில் காணப்படும் புளூட்டோவைக் கூட தற்போதைய விண்வெளிக் கப்பல்களான 'பயனியர்' (Pioneer) அண்மித்ததாக தற்போது தெரிய வருகிறது. இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள்தான், சூரியத் தொகுதியை விபரிப்பதற்கு முக்கியமாக உதவியதாகும்.

சூரியத்தொகுதி, அது சூரியனை தலைவனாகக் கொண்ட ஒரு பெரிய குடும்பமாகும். சூரியன் என்ற தலைவன் தன்னைச் சுழன்று, ஒரே இடத்தில் தரித்திருக்க, தங்களைச் சுற்றுவதுடன் சூரியனையும் அவற்றிற்கென வகுக்கப்பட்ட தனி தனி ஒழுக்குகளில் மற்றைய 9 கிரகங்களும் சுழன்று வருகிறது உண்மையிலே ஆச்சரியப்படக் கூடியதொன்றாகும்.

புதன் அளவில் சிறியவனாக இருந்த போதிலும் சூரியனுக்கு மிக அருகிலே இருப்பவன் என்ற பெருமையை தன தாக்கி வைத்திருப்பவன். அவனிடத்தில் காணப்படும் இன்னொரு ஆச்சரியத்திற்குரிய விடயம் என்னவெனில் அவன் 88 நாட்களில் தன்னைத்தானே மிக ஆறுதலாக சுற்றுவதுடன் அதேயளவு நாட்களில் சூரியனையும் சுற்றி விடுவதேயாகும். எனவே நாள், வருடம் என்று எமது பூமியில் வர்ணிக்கப்படும் இரு வேறுபாடான கால அளவுகள் இங்கு காண்பிக்கப்படமாட்டாது. புதனில் ஒரு பாதி மட்டுமே எப்போதும் சூரியனை நோக்குவதால் அப்பக்கம் வெப்பநிலை மிகக் கூடியதாகவும், மறுபக்கம் மிகக் குளிராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழ்நிலையில் புதனில் உயிர்கள் வாழ்வதற்குரிய நிலைமையை அரிதாக்குகின்றது. மேலும் இந்தக் கிரகத்தில் கவர்ச்சி விசை பூமியுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. ஆகையால் அங்கு காணப்படும் எல்லா வாயு மூலக் கூறுகளும் அதன் கவர்ச்சியிலிருந்து இலகுவில் தப்பி விடுவதால், இங்கு ஒருபோதும் வளிமண்டலம் என்ற அமைப்பு இருந்ததேயில்லை. இதனால் சூரியனின் வெப்ப ஒளிக்கதிர்களினாலும் வேறு பல கதிர் வீச்சுக்களினாலும் உண்டாகக்கூடிய தீய விளைவுகளிலிருந்து வளிமண்டலம் வழங்

கும் பாதுகாப்பை இந்தக் கிரகம் முற்றாக இழந்து விடுகிறது. இது உயிர் வாழ்க்கையை முற்றாக அற்றதாக்கி விடுகிறது.

இரண்டாவது கிரகமாக இருக்கும் வெள்ளி என்ற கிரகமே, எல்லாக் கிரகங்களிலும் பிரகாசமான கிரகமாகும். பருமனில் ஏறத்தாழ பூமியின் பருமனையுடைய இது பூமியிலிருந்து மற்ற எல்லா விதத்திலும் முற்றிலும் வேறுபட்டது. இது தன்னைத்தானே 245 நாட்களில் சுற்றுவதுடன் சூரியனை ஏறத்தாழ 225 நாட்களில் சுற்றுகிறது. இது மற்றைய கிரகங்களை போலன்றி, இடதுபுறமாகவே சுழன்று கொண்டிருக்கும். சூரியனிலிருந்து இக்கிரகத்தின் தூரம் புதனைவிட அதிகமாக இருப்பதால் இதன் கவர்ச்சி விசையும் புதனைவிட அதிகம். இதனால் வாயு மூலக்கூறுகள் தப்பி வெளியேறும் தன்மை இங்கு சிறிது குறைவாகும். அதிகூடிய வேகமுடைய வாயுக்களைத் தடுத்து வைக்க இந்த கவர்ச்சி விசை காணாமலிருந்த போதிலும் CO_2 வாயு மூலக்கூறுகளை முற்றாக நிறுத்தி வைத்திருக்க இது போதுமானதாகும். இதனால் இக்கிரகத்தின் வளிமண்டலம் பெருமளவான CO_2 வாயுவைக் கொண்டிருக்கும். இந்த CO_2 இன் குறிப்பிடத்தக்க இயல்பான வெப்பம் உறிஞ்சும் இயல்பால் இந்தக் கிரகத்தின் மேற்பரப்பு உயர்ந்த வெப்பநிலையான 900°C ஐக் காட்டுகின்றது. இக்கிரகத்தின் உயர்வெப்பநிலையும், CO_2 வாயுவை மட்டுமே கொண்ட வளிமண்டலமும் இங்கு உயிர்கள் வாழ்வதற்குரிய நிலையை முற்றிலும் சாதகமற்றதாக்குகிறது. புதனைப்போன்று இதற்கு உபக்கிரகம் இல்லை.

வெள்ளியின் அடுத்த வீட்டுக்காரனான பூமி சூரியனிலிருந்து ஓரளவு தள்ளியிருப்பதால் அதன் மேற்பரப்பு வெப்பநிலை உயிர்வாழ்க்கைக்கு தகுந்ததாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அதன் கவர்ச்சி விசை பெரும்பாலாக எல்லா வாயு மூலக்கூறுகளையும் தடுத்து வைக்க போதுமானதாக இருப்பதால், பூமி பெருமளவில் N_2, O_2 ஐயும் வேறு பல வாயுக்களையும் கொண்ட ஒரு அடர்த்தியான வளிமண்டலத்தை நிறுத்தி வைத்திருக்கும் வல்லமை உடையது. இதுவே உயிர்களின் வாழ்க்கைக்குரிய மிக அவசியமான காரணி என்பதில் ஐயமில்லை. இதைவிட பூமியின் மேற்பரப்பில் 70% நீரினால் சூழப்பட்ட நிலை அதன் மீதுள்ள உயிர் வாழ்க்கைக்கு ஒரு ஊன்றுகோலாக அமைகிறது. இதனாலேயே சில சமயங்களில் இதை நீர்க்கிரகம் என வர்ணிக்கிறார்கள். புதன், வெள்ளியைப்போலன்றி இது தனது ஒரே புதல்வனான சந்திர உப கிரகத்தை, தன்னைச் சுற்றி வலம் வர வைத்திருப்பவன் ஒரு நாள் என்று கூறப்படும் 24 மணித்தியாலங்களில் தன்னைத் தானேயும், 1 வருடம் எனும் 365 நாட்களில் சூரியனை சுற்றி வலம் வருகிறது. பூமியில் காணப்படும் எல்லா நிபந்தனைகளையும் அங்குள்ள உயிர்வாழ்க்கைக்கு ஆணி வேர்களாக அமைந்துவிடுவதாலேயோ என்னவோ இங்கு இந்த ஜனனம் ஆரம்பித்துவிட்டது.

பூமியின் உயிர்வாழ்க்கைக்கு நெருங்கிய தொடர்புடையவனான செவ்வாய் எப்போதும் செங்கிரகம் என்று அழைக்கப்படுவதுண்டு. பூமியைப்போன்று 24 மணித்தியாலங்களில் தன்னைச் சுற்றிவரும் இக்கிரகம் ஏறத்தாழ பூமியைப் போன்று இருமடங்கு காலங்களிலேயே சூரியனைச் சுற்றி வருகிறான். இவனில் காணப்படும் தகுந்த கவர்ச்சி விசையினால் தன்னைச் சுற்றி ஒரு அடர்ந்த வளிமண்டலத்தை (அதிகளவில் CO_2) வைத்திருப்பதுடன் ஓரளவு நீரையும் கொண்டிருப்பது ஒரு முக்கிய திருப்பமாகும். இதனால்தான் என்னவோ இங்கு உயிர்வாழ்க்கை இருக்கலாம் அல்லது இனியாவது ஆரம்பிக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதி இங்கு காலடி வைக்க அயராது உழைத்து வருகிறார்கள்.

சூரியத் தொகுதியில் அடுத்து காணப்படும் ஒரு வெளியைத் தொடர்ந்து இராட்சத கிரகங்களான வியாழன், சனியுடன் மேலும் 3 கிரகங்கள் காணப்படுகின்றன.

வியாழன், அவனே இந்தச் சூரிய மண்டலத்திலேயே பருமனில் பெருத்தவன் என்ற பெருமையை தட்டிக் கொண்டவன். இந்த இராட்சத கிரகம் பருமனில் பெருத்திருந்த போதிலும் மிகக் குறைந்த அடர்த்தியை உடையவன் எனக் கூறப்படுகிறது. இவன் சூரியனிலிருந்து மிகவும் தொலைவில் காணப்படுவதால் அதன் மேற்பரப்பு வெப்பநிலை மிகவும் குறைந்ததாக காணப்படும். இதனில் காணப்படும் கவர்ச்சி விசையினால் தன்னைச் சுற்றி ஒரு வளிமண்டலத்தை கொண்டிருந்தபோதிலும் அதில் பிரதான கூறுகளாக உயிர் வாழ்க்கைக்கு ஒவ்வாத நச்சுவாயுக்களான அமோனியா (NH_3), மெதேன் (CH_4) என்பவற்றையே கொண்டுள்ளது. மிகக் குறைந்த வெப்பநிலையும், உயிர்வாழ்க்கைக்கு ஒவ்வாத வாயுக்களும் இங்கு உயிர் வாழ்வதற்குரிய நிலைமையை முற்றாக சாத்தியமற்றதாக்குகின்றது. இதன் பருமனுக்கு ஒவ்வாத முறையில் அதிகூடிய வேகத்தில், அதாவது ஏறத்தாழ 10 மணித்தியாலங்களில் தன்னைச் சுற்றி விடுகின்றான். சூரியனைச் சுற்றி முடிப்பதற்கு அவனுக்கு 12 வருடங்கள் எடுக்கின்றது.

இரண்டாவது இராட்சத கிரகமென வர்ணிக்கப்படும் சனியும் ஏறத்தாழ வியாழனின் அமைப்புகளையே கொண்டிருப்பவன். வளிமண்டலம் ஏறத்தாழ வியாழனை ஒத்திருந்தாலும், மேற்பரப்பு வெப்பநிலையில் ஒத்திருக்காமை குறிப்பிடத்தக்கது. இதன் அதிகளவு தூரம் காரணமாக வெப்பநிலை அதிகளவு குறைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. மற்றைய கிரகங்களைப் போலல்லாது இதைச் சுற்றி காணப்படும் ஒளி வளையங்கள் இந்தக் கிரகத்துக்கு கவர்ச்சியைக் கொடுக்கின்றன.

அடுத்தடுத்தாக காணப்படும் யூரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ ஆகியவை மிகத் தொலைவில் காணப்படுவதால் அவை பற்றிய முழுத் தகவல்களும் எடுக்க முடியாத போதிலும், அந்த முயற்சி இன்றும் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவை எல்லாவற்றையும் ஒருமித்து நோக்குமிடத்து எமது சூரியத் தொகுதியிலேயே, உயிர்கள் வாழ்வதற்குரிய எல்லா நிபந்தனைகளையும் தகுந்த அளவுகளில் கொண்ட ஒரே பிரதேசம் பூமி என்பது கண்கூடு. இந்த விடயத்தில் அவனது நெருங்கிய நண்பனாக திகழும் செவ்வாய் கிரகத்தை அடைவதற்கு மனிதன் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக அயராது உழைத்து வருகிறான். அவனது உழைப்பின் பயனாக அங்கு காலடி வைக்க நேர்ந்து அந்தப் பிரதேசத்தையும் அவன் உயிர் வாழும் பிரதேசமாக மாற்றுவானானால் அது எங்கள் எல்லோரினதும், வரப்பிரசாதம் என்று தான் கூறவேண்டும்.

ஜி. சரவணபவான்
ஆண்டு 10 Q

நாளை நமக்காகவே!

நேற்றைய பொழுதுகள் காற்றுடன் போயின
இன்றைய பொழுதுகள் நமக்கென விடிந்தன

நின்றமை வாட்டிய துயர்களைக்
கொன்றினி மகிழ்ச்சியின் சுடரினை ஏற்றிட
ஒன்றிணைந் தெழுமின்; ஓர்புது உலகினை
படைத்திட இன்றோர் ஆணையை எடுமின்!

நமது கரங்களின் திறமையை நம்பி;
நமது மனங்களின் உறுதியை நம்பி;
நாளைய உலகினை நிர்மாணித்திடும்
வேலையில் எம்மையே அர்ப்பணித்திடுவோம்
கடமையை உயிராய் மதித்திடுவோம்
கொடுமைகள் கண்டே கொதித்தெழுவோம்
நீதிகள் வாழ்வதற் கெனநாம் வாழ்வோம்
சாதிகள், பிளவுகள் தமைநொருக்கிடுவோம்
நாளையை நமது கைகளில் எடுப்போம்!

காலச் சுழியினில் நாம் பலியாகோம்
சிந்தனை யென்னும் ஆயுதம் எடுத்தே
நம்பிக்கையென்னும் ஒளியினில் எழுந்தோம்!
எதிர் காலத்தின் சிற்பிகள் நாங்கள்
புதுவாழ்வொன்று செதுக்கி முடிப்போம்
நாளைய பொழுதுகள் நமக்கென விடியும்

E. G. J. வேதநாயகம்
ஆண்டு 13 (விஞ்ஞானம்)

With Best Compliments

from

SUPER CENTRE

GENERAL MERCHANTS

Dealers in : Fancy Goods, Flowers and Edging Laces.

No. 244, 2nd Cross Street,
Colombo - 11.

Telephone : 449655

19

With Best Compl

PEOPLE'S

Celebrating Three Decade

In 1961 Peoples Bank ventured out in the challanging world of Bankin

Today, just 31 years later

People Resource exeeds 10,000
Customer Listings at a staggering 5.8 Million
Branch Network in exess of 329. The LARGEST
in Sri Lanka.

In
r
g
d
e

PEOPLE'S BANK

நிகழ்ச்சி

★ மங்கள விளக்கேற்றல்
★ தமிழ் வாழ்த்து
★ கோலாட்டம் - பாலர் பிரிவு
★ வரவேற்புரை
★ நாடகம் - கீழ்ப்பிரிவு
★ புல்லாங்குழலிசை
★ அதிபர் உரை
★ விவாத அரங்கு

With Best Compli

ORIENT LANK

Head Office :
27, 3/1, 3rd Floor,
York Arcade Building,
York Arcade Road,
Colombo - 1.

Retail Outlet
Liberty Plaza Shopping Complex,
Colombo - 3.

Best Compliments From

LE'S BANK

Decades of Dynamic Growth

g world of Banking with a staff of only 46... and a few hundred customers.

In just three decades People's Bank has grown to become a highly respected leader in the Sri Lanka Banking scene Their spectacular growth is a reflection of the massive resources at their command dedicated to the service of the common man - a dedication that has earned them the title " Banker to the Millions "

BANK BANKER TO THE MILLIONS

நிகழ்ச்சி நிரல்

★ பிரதம அதிதியின் உரை
★ பரிசளிப்பு
● இடைவேளை
★ நாடகம் – மேற்பிரிவு
★ நன்றியுரை
★ நாடகம் - மேற்பிரிவு
★ இன்னிசை விருந்து
★ கல்லூரி கீதம்

Best Compliments From

ANKA LIMITED

Complex,

Duty Free Shops
Colombo Airport,
Katunayake.

T'Phone : 431581
435276
438012

As ELECTRICITY plays a very important role in the development of a country, the Government of Sri Lanka has given high priority to development work connected with Generation, Transmission and Distribution of Electrical Power in Sri Lanka.

The Ceylon Electricity Board under the direction of the Ministry of Power & Energy, is going ahead with various development projects and Rural Electrification schemes with a view to meeting the target enunciated by His Excellency The President to provide electricity to all villages in Sri Lanka by the year 2000.

Let Electricity bring Peace, Happiness and Prosperity to all sections of the people of Sri Lanka.

With Best Compliments

from

CEYLON ELECTRICITY BOARD

PUBLICITY UNIT,
CEYLON ELECTRICITY BOARD,
COLOMBO - 02.

WITH BEST COMPLIMENTS FROM

Air Link Travels & Tours

TICKETING, VISA, TRAVELLERS CHEQUES, HOTEL RESERVATIONS TOUR OPERATIONS, PHOTO COPYING

237 – 4 6/10 Main Street,
Colombo – 11.

Telephone : 541066, 423832, 430749.
Telex : 22336, 22337, INDIKA CE ATTN: AIRLINK
BRANCH : **I. B. SUPER MARKET**
200 1/2 B Keyzer Street,
Colombo - 11.

Telephone : 430749

With Best Compliments

from

Ceylon Operators Clearing Agents & Transport Contractors

37, Mudalige Mawatha,
Colombo - 1.

With Best Compliments

From

Mr. R. Ganeshan

Athil Textile

Metro Market

2nd Cross Street,

Colombo - 11

IMMEDIATE VACANCIES FOR HOUSEMAIDS IN
SAUDI ARABIA, BAHRAIN, KUWAIT, OMAN, ABUDHABI,
DUBAI, AND SHARJAH

With Best Compliments from

Aysha Recruiting Agency

Approved by the Ministry of Labour Bureau of Sri Lanka
(LICENCE No. 515)

No. 138, Sea Street,
Colombo - 11.

Telephone : 447461, 446033

Telex : 21494 Globle CE
Fax : 448363, 440925 AYSHA

WITH BEST COMPLIMENTS FROM

Shafeek Clearing Agency

122, 1/12, Prince Street,
COLOMBO - 11.

WITH BEST COMPLIMENTS FROM

Gaythana Jewellers

202, SEA STREET,
COLOMBO - 11.

T.P. 437984

Please Patronise Our Advertisers

With Best Compliments

From

The Makers of High Quality:

MD

JAMS
CORDIALS
CHUTNEYS
SAUCES
JUICES
FRUIT IN SYRUPS
AND
CANNED VEGETABLES

LANKA CANNERIES LTD.

MD Canning Factory

Narahenpita, COLOMBO - 5.

With Best Compliments

From

Mercantile Hardware Stores

425, Old Moor Street,

COLOMBO - 12.

Mercantile Engn-Tools (Pvt) Ltd.

332, Sri Sangarajah Mawatha,

COLOMBO - 10.

T'Phone : 433960, 27624, 440304, 448863.

WITH THE BEST COMPLIMENTS

FROM

Modern Homes

මොඩර්න් හෝම්ස්

Constructing New Houses for Sale
Sales & Purchasing Properties

No. 21, Super Market, 1st Floor,
Kolonnawa.

WITH COMPLIMENTS FROM

ROYAL TRAVELS & TOURS (PVT) LTD.

No. 1, Baillie Lane,

Mudalige Mawatha, Colombo - 1.

Sri Lanka.

Tel: 438820, 438290, 449205

Tlx: 22976 ROYAL CE. Attn: UPALI

WITH THE BEST COMPLIMENTS FROM

A. LEKCHUMANAN

Proprietor

SANTHOSA TRADE CENTRE

Dealers in:-

Ever-Silver Enamel, Aluminium, Glassware,
Fancy Goods, Paper & Stationery Items.

Residence :-
No. 18, St. Kildas Lane,
Colombo-3.
T'Phone : 589444

45, Prince Street,
Colombo-11.
T'Phone : 29787

With Best Compliments From

PRATHA JEWEL

ප්‍රදා ජුවල්

பிரதா ஜுவல்

Buyers & Sellers of Gold and Silver Jewellery
orders will be executed in time

39, W. A. Silva Mawatha,
Wellawatte,
Colombo-6.
Telephone : 580375

With Best Compliments From

Biman Bangladesh Airlines

YOUR HOME IN THE AIR

BIMAN OPERATES

IN ASIA TO DHAKA, TOKYO, SINGAPORE, KUALALUMPUR, BANGKOK, RANGOON, KATHMANDU, CALCUTTA, BOMBAY, ABUDHABI, DOHA, MUSCAT, KUWAIT, SHARJAH, DUBAI, JEDDAH AND RIYADH.

In Europe to London, Paris, Frankfurt, Rome, Athens, Amsterdam and Malta.

For further information Contact:

Grandmet Travels & Tours (Pvt) Ltd.

2, York Street,

Colombo - 1.

Tel : 439319 - 21, 20391 - 3 Fax : 575649

WITH BEST COMPLIMENTS FROM

Aztec Industries Ltd.

Manufacturers of P. V. C. Pipes & Fittings, Cast iron, Pipes & Fittings, Ceramics, Taps & Valves etc.

HEAD OFFICE

"Razak Building"
1st floor
343 Old Moor Street
Colombo - 12.
Sri Lanka

Telephone : 435832 - 29474 - 440957
Telex : 22764 Aztec CE
Fax : 94-1-445468

FACTORY

No. 70, Galudupita Road
Mattumagala,
Ragama
Sri Lanka.

Telephone : 531008

பல வருடங்கள் கற்பித்து அனுபவமிக்க ஆசிரியை திருமதி தம்பிராசா
அவர்கள் எழுதிய

செயல் நூல்

ஆண்டு 1 தொடக்கம் - ஆண்டு 5 வரை

தமிழ் கணிதம்

பல தரப்பட்ட மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் பாடத்தில் ஆர்வத்தை உண்டாக்கும் விதத்திலும் பாடங்களில் பயிற்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வெளியிடுவோர்;

Children's Educational Publications
65/278, Vystwyke Road,
Colombo - 15.
Telephone : 523122

With Best Compliments

from

AK. S. KHAN

Engineer & Consultant

Mareena Auto Industries (P) Ltd.

Chairman & Managing Director – Pioneer Shock Absorbers Manufacturers

Middle East Office P. O. Box – 3636, Ruwi Sultanate of Oman

Telex : 3375 NASER – ON   Fax : 00968 – 461400 & 795118

Telephone : 703193, 703060, 461400.

Head office :

822 International Airport Road (Negombo Road) Mabola,
Wattala, (Colombo), Shri Lanka.

Tel : 5309596, 531544.   Fax : 0094-1-531 544

Telex : 21213 & 21193 BOOTH CE

With Best Compliments

From

"CHUBB"

Vimo & Company (Pvt) Ltd.

44, Kynsey Road,

Colombo - 8.

T. P. 697401, 693904

BEST WISHES FROM

V

New Saraswathy Lodge

49, Galle Road,

Dehiwala.

WITH BEST COMPLIMENTS

FROM

"Pack Shoe"

473/2 Galle Road,
Colombo - 3
(Not School Lane)

For
Your Fashion Shoes

Head Office T. P. 696074, 687822

With Best Compliments

from

Eveready Battery Company Lanka Ltd.

மலையக மக்கள் வழிபாடும் அம்மன் திருவிழா சிறப்பும்

நகர் புறங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் தமிழ் நாட்டின் கிராமப்புறங்களில் காணப்படும் பல்வேறு தெய்வங்களின் வழிபாடும் வழிபாட்டுமுறைகளும் இன்னும் மலையகத்தில் பின்பற்றப்படுகின்றன.

ஊரின் மத்தியில் கோயில், கோயிலைச் சூழ வீடுகள், வயல்கள், தோப்புக்கள், ஊர் எல்லையில் காவல் தெய்வங்கள் இதுதான் ஓர் தமிழ் நாட்டு கிராமத்தின் பொதுவான அமைப்பு. இங்கும் இவ்வாறு கோயிற்குடியிருப்புக்கள் காவற் தெய்வங்களின் கோயில்கள் இருக்கின்றன. ஆனால் காவல் தெய்வங்களுக்கு பெரிய சிலைகளோ, கோயில்களோ இல்லை. ஓர் சில இடங்களில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட சிற்பிகளினால் செய்யப்பட்ட சிலைகளும், கோயில்களும் பெரும்பாலும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பெரும்பாலும் கருங்கற்களினாலான சிவலிங்கத்தை ஒத்த வடிவில் அத் தெய்வங்களுக்கு வழிபாடு நடைபெற்றுள்ளன.

ஆனால் பிரதானமாக ஊரில் உள்ள கோயில்களில் பிள்ளையார், முருகன், மாரியம்மன் ஆகிய தெய்வ வழிபாடுகள் இன்றும் பழமைச் சிறப்புடன் விளங்குகின்றன என்று சொல்லலாம்.

மலையகத்தில் வாழும் இந்துக்கள் பெரும்பாலும் அம்மனையே முழு மனதுடன் வழிபடுவதை அவதானிக்கலாம். மாரியம்மன் கோயில் இல்லா ஊர்களைக் காணல் அரிது. மக்களின் உள்ளத்தில் முழுதாய் நிறைந்திருக்கும் அன்னை மக்களை பிடிக்கும் அம்மை முதலிய நோய்களைத் தீர்க்கும் வேப்பிலைக்காரியாக கஷ்டங்களைத் தீர்ப்பவளாக வேண்டியவற்றை தருபவளாக போற்றப்படுகின்றாள்.

அம்மனுக்கு கொண்டாடப்படும் நவராத்திரி விழாவிலிருந்து அம்மனின் சிறப்பை அறிந்து கொள்ளலாம், அம்மனைப்பற்றி அறிய மாரியம்மன் திருவிழா மட்டுமே போதுமானது.

இது பொதுவாக சில இடத்தில் மாசிமாதத்திலும் சில இடத்தில் ஆடி மாதத்திலும் கொண்டாடப்படும். இது ஐந்து நாட்களாக வெகு விமர்சையாக கொண்டாடப்படுகின்றது, இந்த ஐந்து நாட்களுமே பயபக்தியுடன் பெரு மகிழ்ச்சியுடன் மக்கள் தம் கடமைகளைச் செய்வது எல்லோரையும் மகிழ்வில் ஆழ்த்தும்.

இந்த திருவிழா ஆற்றங்கரையில் மூன்று குடம் நீர் எடுத்து தேங்காய் வைத்து தென்னம்பூ, அரளிப்பூ, வேப்பிலை, பூமாலைகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டு அன்னை சக்தியாக, காளியாக, மாரியாக கொலுவிருக்கும் கரகம் பாலித்தலுடன் ஆரம்பமாகின்றது. இதை சுமப்பவர்கள் மிகவும் ஆசாரத்துடன் இருப்பார்கள். ஒருவர் மூன்று வருடம் தொடர்ந்து கரகம் எடுக்க வேண்டும் என்பது ஐதீகம். கரகம் பாலித்து கோயிலுக்கு எடுத்து வரும் அடுத்தநாள் அன்னதான

திருவிழா சிறப்பாகநடைபெறும். மூன்றாம் நாள் மாவிளக்கு திருவிழா சிறப்பாக நடைபெறும். பெண்கள் அரிசி இடித்து மாவிளக்கு செய்து பூஜை பொருட்களுடன் கோயிலுக்கு பயபக்தியுடன் எடுத்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

நான்காம் நாள் பொதுவாக இந்துக்களால் ஒதுக்கப்பட்ட பலி கொடுத்தல் நடைபெறும். காவல் தெய்வங்கள் மருதைவீரன், முனீஸ்வரர், சிண்டாகட்டி போன்ற தெய்வங்கள், தொழில் செய்யும் இடங்களில் இயந்திரங்கள், இயற்கை சீற்றத்தால் ஏற்படும் அனர்த்தங்கள் என்பவற்றில் இருந்து தம்மை பாதுகாக்கும் என்றும் அதற்கு நன்றி கடனாக கோழி, ஆடு என்பவற்றை பலிகொடுப்பார்கள். இது இன்றும் சிறப்பாக நடைபெறுகின்றது.

ஐந்து நாள் அம்மன்தேர், மாரி, கரகங்களின் ஊர்வலம் நடைபெறும். சிறு பிள்ளை முதல் முதியோர்வரை அனைவரும் உற்சாகமாக இவ்விழாவைக் கொண்டாடுவார்கள். கரகாட்டம், ஒயிலாட்டம், காவடி, கோலாட்டம். மஞ்சல் நீராட்டல் என்பன அடுத்து வரும் வருடம் முழுவதும் நினைவில் இருக்க கூடியவாறு சிறப்பாக நடைபெறும்.

அம்மன் தேர் கோயிலை அடைந்ததும் கரகங்கள் ஆற்றில் விடப்படுதல் வழக்கம். இதன்போது அனைவரும் ஆற்றில் நீராடி பின் அங்கு பரிமாறப்படும் கட்டு சோற்றை உண்டு விரதத்தை முடிப்பார்கள். அம்மன் மீது கொண்டுள்ள அளவில்லா பக்தி காரணமாக ஆரவாரத்துடன் கொண்டாடப்படும் இவ்விழாவின் போது அனைத்து தெய்வங்களுக்கும் தனித்தனியே பூசைகள் சமய சடங்குகள் நடத்தப்படுதல் இங்கு குறிப்பிடத்தக்கது. திருவிழா காலத்தில் பிள்ளையார், முருகன், தேர்கள் இழுக்கும் கோயில்களும் உள்ளன. மாத்தளையில் மலையகத்திலே பிரசித்திபெற்ற ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தேர் விழாவில் ஐந்து தேர்கள் இழுக்கப்படுகின்றது. அன்றியும் ஏனைய சகல இந்து பண்டிகைகளும் சமய அனுஸ்டானங்களும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. மலையக மக்கள் வாழ்விலே கோயில்கள் எழுப்பி விழா நடத்துதல் பரம்பரை பரம்பரையாக தொடர்கின்றது.

பழனியப்பன் செல்வகுமார்
92/விஞ்ஞானம்

With Best Compliments From

Wellawatta Nithyakalyani Jewellery

230, Galle Road,

COLOMBO-6.

Tele: 583392, 581566 Fax: 503948

For High Quality Printing, Colour Separation Laser

DOT'N LINE (PVT) LTD.

65, Chatham Street,

COLOMBO-1

Tel: 440529 — 20673 Fax: 448999

With Best Compliments

From

Bambalapitiya Gowri Jewellers

For Exclusive Craftsmanship

No. 163 - A Galle Road,
Colombo - 4.

Dial: 5 8 4 6 2 6

With Best Compliments

from

Design Textile

Dealers in Textile

No. 133, Galle Road,

Bambalapitiya, - Colombo - 4.

கல்வியே கருந்தனம்

கல்வியின் மேன்மையை அறிந்த அறிஞர்கள் பலர். கல்வியின் சிறப்பை பலவாறு எடுத்துரைத்துள்ளனர். அதிலும் தமிழ் இலக்கியங்களில் கல்விக்கு அதி உன்னத ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

"கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்று பொய்யாமொழிப் புலவன் தனது குறளில் கூறுவதுபோல் கல்வியை கசடறக்கற்பது மிக முக்கியம் வாய்ந்ததொன்றாகும். கற்றறிந்தோர் பலர் தாம் கற்ற கல்வியின்படி எழுத தலைப்படுவதில்லை அவ்வாறின்றி நாம் கற்ற கல்விக்கு நிகராய் நிற்றல் வேண்டும்.

திருக்குறளுக்கு அடுத்தபடியாக அறக் கருத்துக்களை எடுத்து கூறும் நாலடியார் கல்வியின் சிறப்பை எடுத்துக்கூறும்போது இத்தரணியிலே வேறெந்தவோர் அழகிலும் கல்வி அழகே அழகானதென்று பின்வருமாறு கூறுகிறது.

"குஞ்சியழகும் கொடுந்தானை கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

கற்றறிந்தோருக்கு இத்தரணியில் சாதி, மதபேதம் இல்லை. கற்றறிந்தோர் தாழ்ந்த சாதியில் பிறந்தவராயினும் அவர்கள் மேலான இடத்தில் வைத்து பாராட்டப்படுவர் மேலும் கல்வியின் பல துறைகள் மனத்தின் கண் சேமித்து வைக்கப்படின் அவை எவராலும் கவரப்படவோ அபகரிக்கப்படவோ மாட்டாது. அரசர்கள் கற்றோரை தம்மிலும் சிறந்தார் என்று கோபித்தாலும் அவர்களாலும் கொள்ளப்படுவனவல்ல. ஆகவே ஒருவன் தன் மக்களுக்கென வைக்கத்தக்க பெருஞ்செல்வம் கல்விச் செல்வமேயாகும். ஒருவன் தான் எல்லாம் கற்ற அறிஞன் என்று கூறுவது தவறாகும். ஒருவன் எவ்வளவு படித்தாலும் எத்தனை நுட்பமான நூல்களை கற்றாலும் அவனிடத்தில் இயல்பாகவே அறிவு இருக்கிறது அது நிலைத்து நிற்கும் அறிவாகும் அதுவே உண்மையான அறிவு என திருவள்ளுவர் தம் குறளில்.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்"

என்று குறிப்பிடுகிறார். கற்பதற்கோ அளவால் மிகுதியான நூல்கள் உள்ளன. அவற்றில் உண்மையறிவை தரும் ஞான நூல்களை கற்றல் வேண்டும். ஆனால், அவ்வாறில்லாது உலக வாழ்விற்குரிய நூல்களை பிறவித்துன்பமாகிய தடுமாற்றத்தினைப் போக்குதல் இயலாது.

"கல்வி கரையில கற்றவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணிபல – தெள்ளிதி
னாராய்த் தடைவுடைய கற்பவே நீரொழியப்
பாலூண் தருகிற் றெரிந்து.

என நாலடியாரில் கூறப்பட்டிருப்பது போல கல்வி முடிவில்லாதது, கற்பவர் வாழும் நாட்களோ சிலவாகும். எனவே நீரினை நீக்கி பால் அருந்தும் அன்னம் போல் நூல்களின் தன்மைகளை தெளிவாக பகுத்தறிந்து கற்றலே சாலச் சிறந்ததாகும். எனவே நூல்களை கற்கும்போது திருவள்ளுவரின் கூற்றுப்படி கற்பவற்றின் மெய்ப்பொருளினை அறிந்து கற்றல் வேண்டும். கற்றது கைமண்ணளவு கல்லாததோ உலகளவு என்பது சான்றோர்

வாக்கு. கற்றறிந்தோருடன் கூடியிருப்பது விண்ணுலகத்து இன்பத்தை பயக்கும், கல்லாதோரும் கற்றறிந்தோருடன் சேர்ந்தால் நல்லறிவை நாடோறும் பெறுவர். கற்கும்போது கற்பிப்பவரின் சாதி, இனம், மதம் பாராது கற்கவேண்டியவற்றை கற்றுக்கொள்ளல் வேண்டும். கற்றோருடன் சேர்ந்து வாழ்வதன் பயன் நாடோறும் வளர்ந்துகொண்டுபோம். நாம் கற்று அறிந்த அறிஞரிடம் சென்று கற்றும் அவர்கள் கூறிடும் அறிவுரைகளைக் கேட்டும் வருதல்வேண்டும். இவ்வாறு கற்றுக் கற்றவற்றை தெளிவாக உணர்ந்தபின் அவற்றை கடமையாக விரும்பி கடைப்பிடித்தல் வேண்டும். ஒருவர் தாம் கற்றவற்றை கல்லாதவர்களுக்கு கற்பித்தல் வேண்டும். இவ்வாறு கற்றவர் ஒருவர் தாம் கற்றவற்றை பிறருக்கு விளக்கமாக கற்பியாமையும், கல்லாதவர் கற்றறிந்தோரிடம் சென்று கல்லாமையும் கற்றவர் தாம் கற்றவற்றை கடைப்பிடிக்காமையும் குற்றங்களாகுமென ஆசாரகோவையில் அப்துல் மஜீதுப் புலவர் இவ்வாறு கூறுகிறார்.

''கற்றறிந்தவர் பாலினிலெகியே
கற்றுக்கேட்டுவி ளங்கிடல் வேண்டும்
கற்றுணர்ந்தபின் கற்றவை போலவே
கடமையாக நயந்திடல் வேண்டுமே
கற்ற யாவையுங் கற்றறியார்க்குக்
கற்பித் துக்கொடுத்தேவிடல் வேண்டும்''

எனவே கல்லாதவன் கற்றறிந்தோரிடம் கல்வியை கற்று கற்றதன்படி ஒழுகி மற்றவர்களுக்கு தான் கற்ற கல்வியை கற்பித்தல் வேண்டும்.

''விலங்கொடு மக்களனைவர்
இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்''

என்பது திருவள்ளுவனின் திருவாய்மொழி. ''கல்வி கற்றவரே மனிதன் எனத்தக்கவன் கல்லாதவர் மனித உருவில் இருந்தாலும் விலங்குகளே'' என்கிறார் அஃது உண்மையே. கல்வி அறிவிலாதவர், தக்கது தகாதது என்று பகுத்துணர மாட்டாமையால் அவர்கள் விலங்குகளே. இதனாலே கல்வியின் மேன்மை உணர்ந்த திருவள்ளுவர் தனது திருக்குறளில் கல்விக்கு ஒரு அதிகாரமே அமைத்தார். அதுபோல் நாலடியாரிலும் கல்விக்கு ஓர் அதிகாரமுண்டு. அதுபோல் கல்வியின் சிறப்பை பாரினில் பறைசாற்றல் வேண்டும்.

''கற்றல் கேட்டல் உடையார் பெரியார்''
—திருஞானசம்பந்தர்

ஆக்கியோன்
றொட்னி பாலசிங்கம்
வருடம் 12 Sc K.

With Best Compliments

From

Lanka Products Trades

DEALERS IN GROCERIES, DRY FISH & COMMISSION AGENTS

Phone : 26740 **L.P.T.** 21, St. John's Road,

Colombo – 11

WITH BEST COMPLIMENTS

FROM

Selvaratnam Stores

DEALERS IN GROCERIES, BEST TEA, RICE, FOOD - STUFFS
&
COMMISSION AGENTS.

Phone : 27548, 26740

13, Old Butcher Street,
Colombo – 11.

BRANCH : 24 A OLD BUTCHER STREET,
COLOMBO - 11.

21, ST. JOHN ROAD,
COLOMBO - 11.

WITH THE BEST COMPLIMENTS

FROM

VS

விநாயகர் ஸ்டோர்ஸ்

TEA Merchants

Vinayagar Stores

195, 4th Cross Street,

Colombo - 11.

General Merchants and Commission Agent:- Dealers in
Best Quality Tea & Local Products & Lorry Transporters

Phone: 26878

COLOMBO/JAFFNA/COLOMBO

WITH BEST COMPLIMENTS FROM

GANESHA STORES

Importers & Exporters, Wholesale & Retail Dealers in Made Tea & Oilman Stores

Proprietors:

Selliah Sivapragasam, Managing Partner
Sivanathan Sivapragasam, Partner
Mrs. P. Sivapragasam, ,,
Suhanthy Sivapragasam, ,,
Rajani Sivapragasam ,,
Malini Sivapragasam, ,,

Stores:

No. 155, Sea Street,
Colombo - 11.

No. 283, Bankshall Street,
Colombo - 11.

Telex - 22336 or 22337 - INDIKA CE

Tea Dealer's Licence No. DA 83

Telephone: 29380

தயவு செய்து

எமது

விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்

With Best Wishes From

Kotahena Chicken Stall

No-19, Kotahena Market,

Colombo-13.

With Best Compliments From

Cosmo Trade Centre

5, 1/23, Kotahena Super Market,

Colombo-13.

The Language and Civilisation of The Tamils

Tamil is one of the oldest living language of the world. It's daughter (or sister) languages are Telugu, Kannada, and Malayalam. Tamil is as old as the classical languages like Greek and Latin, if not older. Researchers have found a marked similarity between the language spoken during the Mesopotamian Civilisation and the Tamil language of the same era. Even their way of life had been found to be similar. Professor Pakeman in his book "Ceylon and World History" has said "The Sumerians (the inhabitants of the River Basins of the Euphrates and Tigris viz: Mesopotamia) were akin in every respect to the Dravidian people and it is believed by some that they were the ancestors of the Modern Tamils"

Recently the Japanese have found similarities between their language and culture and that of the Tamils. It is therefore possible that the Lingua Franca of the Asian region which was the more civilised part of the world cf a bygone age, had similarties to the Tamil Language. The World Tamil Conferences which take place in many parts of the globe periodically attract many Researchers and Professors of varied disciplines from different countries who congregate to discuss their respective research works into many aspects of the Tamil language, it's literature and the Dravidian civilisation.

It is a well-known fact that Researchers have found similarities between the Mohenjadaro-Harappa civilisation that existed long before the Christian era around the Indus valley in the present Pakistan region of the Indian sub-continent and the Dravidian civilisation that flourished in South India.

Sir John Marshall in his book "Mohenjadaro and the Indus Civilisation" has said "The Indus Civilisation was pre-Aryan and the Indus language or languages must have been pre-Aryan also. Possibly one or other of them was Dravidic. This for three reasons seems a more likely conjecture. First, because Dravidia speaking people were the precursors of the Aryans over most of Northern India and were the only people likely to have been in possession of a culture as advanced as the Indus culture Secondly because on the other side of the Krithar Range and at no great distance from the Indus valley, the Brahuis of Baluchistan have preserved among themselves an Island of Dravidic speech which may well be a relic of pre-Aryan times when Dravidic was perhaps the common language of these parts. Thirdly because the Dravidic languages being agglutinative it is not unreasonable to look for a possible connection between them and the agglutinative language of sumer in the Indus valley, which as we know, had many other close ties with Sumer"

It is interesting to note that the inscriptions at Mohenjadaro as deciphered by Father Heras S.J. (vide "The origin of Sumerian Writing" by Father Heras S.J. in the Journal of the University of Bombay - July 1938) show that the language used in the inscription was Dravidian or rather Tamil and also that the Tamil language of today has changed very little from it's ancient counterpart of the Indus valley.

In the West the societies which were formed to advance the Arts and the Sciences were called Academies. Similarly there is evidence to believe that the ancient Tamil poets too banded themselves into assemblies in order to achieve similar ends. The period in which these poets lived is called the Sangam Age. This period is said to have lasted from very ancient times to the 2nd century A.D. There had been three Sangam periods - the first intermediate and the last. Very few literary works from the first and intermediate Sangam periods are now available. They must be presumed to be lost forever. The few poetical works now extant diffuse into, all those who read and understand them, the cultural background of Ancient Tamils. It is this source of knowledge which enlightens the present day Tamils about their cultural heritage lasting for more than 2000 years.

Of the literary works available from the first two sangams Tolkappiam stands foremost. Mudaliyar S. Rasanayakam in his book "Ancient Jaffna" states "Tolkapiam, one of the earliest and extant grammar which is considered by learned authorities to be anterior to Panini's Sanskrit grammar, is said to have been composed about the end of the first Sangam or at the beginning of Second, and was the authority specially followed, by the Second and the Third Sangams. The first Sangam was at Southern Mathura, the earliest capital of the Pandyas which was destroyed by the sea about 2400 years before Christ."

The engulfment by the sea in about 2400 B.C. of a very large portion of the land lying to the south of Cape Camorin and Sri Lanka is borne out even by the Rajjavali which speaks of the destruction of a great portion of Ravanas kingdom at about the same time. This was also one of the main causes of the disappearance of the large number of literary works of the 1st and Second Sangams referred to above. The submerged land mass was part of the continent of Lemuria submerged in the Indian ocean, fragments of which are seen in Sri Lanka, the Deccan Plateau, Sumatra, Madagaskar, parts of Australia and East Africa. Professor Hacckel has said that the Lemurian Continent was "the probable cradle of the human race."

Despite such ancient traditions and the possession of a language delved in antiquity the Tamils are not chauvinistic. On the other hand they emphasise the oneness of humanity. One remarkable poem of the ancient Sangam literature runs thus:

from Purananooru (192nd Stanza)

All the world is my native place;
And all it's inhabitants my relatives;
Good and evil are selfmade and self inflicted;
Praise not for the one, nor blame for the other any external agency;
Thou art the sole maker of and can mar your destiny;
Knowing that death comes to all and is inevitable and irreparable;
Overrate we not the material and the transitory;
But life is precious and so recommend we not an escapist renunciation either;
Tosses on the ocean of samsara this frail boat till it reaches I know not what or where it's destination;
Till them we do carry on caring not for wealth nor despising penury;
And when all is said and done what matters in life is the feeling heart and understanding vision;
This alone sustains and nourishes the world.

Nirmalaguhan Wigneswaran.
Year 12 Sc. L

With Best Compliments

From

Pettah Essence Suppliers

Suppliers to Confectioners & Bakers – Importers of All Kinds of Food Colours, Essences, Chemicals, Groceries Etc.

18/1, DAM STREET,
COLOMBO - 12.
SRI LANKA.

PHONE: 26235, 449269, 434859
TELEX; 22948 ESSEN CE

With Best Compliments
from

PUSHPA TRADES

"ESSENCE HOUSE"

General Merchants Wholesale & Retail Dealers in all Varieties of Essences Colouring Matters, Bakery Products, Cake Ingredients and Groceries.

131, Dam Street,
Colombo - 12.

Dial: 436293

With Best Compliments

from

KOTAHENA PHARMACY

Dispensing, Chemists, Druggists, Grocers, & Daily Needs.

Dealers in :-

ALL KINDS OF FILM ROLLS AND DEVELOPING FILMS.

No. 79, BONJEAN Road,

COLOMBO - 13.

T'Phone : 432022

தலை நிமிர்வோம்

''வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல் உலகு'' என்று தமிழ் வழங்கிய நாட்டினை வரையறுத்துச் சென்றார் ஒரு புலவர். வடக்கே வேங்கட மலை வரையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலே எல்லையாகவும் தெற்கே குமரியை எல்லையாகவும் கொண்ட நிலத்தே தமிழர்கள் வாழ்ந்தனர் என்பது இப் புலவர் கூற்று. இஃது மட்டுமன்றிச் செந் தமிழ் மரபினர் ஈழத்திலும் வேறும் பல பிரதேசங்களிலும் பரந்து வாழ்ந்தனர் எனச் சரிதம் கூறும்.

திராவிடர்களாற் தோற்றுவிக்கப் பட்டதெனக் கருதப்படும் 'சிந்துவெளி' நாகரிகமானது வெண்கல யுகத்தைச் சேர்ந்ததே என ஆராய்ச்சியாளர் துணிவர். இத் திராவிடத் தமிழர்கள் எழுத்தறிவிலும், உலக வழக்குகள், அனுப வத்திலும் மிகுந்து விளங்கியமைக்கு மொஹெஞ்ச தாரோ, ஹரப்பா நகரங் கள் சான்று பகரும். மேலும் இதற்கான சான்றுகளை, கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டுகளும் கண்டெடுக்கப்படுகின்ற புதைபொருட்களும் அளிக்கின்றன. தமிழரின் உயரிய வாழ்வை எதிர்காலத்திற் கண்டெடுக்கப்படப் போகும் புதை பொருட்களும் நிருபிப்பது திண்ணம்!

இன்று வரை கிடைத்துள்ள சான்று களின்படி, கி. மு. மூன்றாம் நூற்றாண் டிலேயே எழுதுவதற்குத் தென் தமிழைப் பயன்படுத்தினர் என ஆராய்ச்சியாளர் துணிவர். இதற்கு மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள கல் வெட்டுகள் சான்று பகரும். இவை தவிர வும், பண்டைத் தமிழ் இலக்கியங்களும் தமிழரின் தலை நிமிர்ந்த வாழ்வைக் கூறும். இந்தியாவில் மட்டுமன்றி ஈழத் திலும் தமிழர் தலை சிறந்து வாழ்ந்தனர். அது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

இவ்வாறாகத் தமக்கெனச் சிறந்த தோர் நாகரிகத்தையும் வாழ்க்கை முறை யையும் அமைத்து வாழ்ந்து வந்த திரா விடர் வழியில், ஆரியர் எனப்படுஞ் சமூகத் தோர் வந்து கலக்கத் தொடங்கினர். 'ஆடு மேய்ப்பவர்களாக அடியெடுத்து வைத்த' அவ் ஆரியர்கள் நாளடைவிற் சிறுகச் சிறுகத் திராவிடர் பிரதேசங் களைக் கைப்பற்றித் தமது இராஜ்யத்தை நிறுவி அதற்கு 'ஆரியாவர்த்தம்' எனப் பெயருஞ் சூட்டினர். சிறப்புடன் வாழ்ந்த திராவிட மாந்தரைத் 'தாஸர்' என்றும் 'தஸ்யுக்கள்' என்றும் இழிவுபடுத்தினர்.

ஆரியர் வருகையுடன் ஆதிமுதற் சிறப்புற்றிருந்த தமிழ் இனம் தலை குனிந் தது. தமது பெருமையை நிலைநாட்டுவ தற்காக, ஆரியர்கள் ஆதி திராவிடர் மீது அவர்களது சிறப்பைக் குறைக்கும் வண் ணம் வீண் பழிகள் சுமத்தி, இலக்கிய ஆக்கங்களை அமைத்தனர். இதன் வழி தோன்றியதுதான் ஆரியர் புகழ் சாற்றும் ''வான்மீஹி ராமாயணம்'' ஆம்! ஆதி முதல் சிறப்புற்ற திராவிடரை அரக்கரென ஒதுக்கி, ஆரியரால், ஆரியருக்காக இயற் றப்பட்ட காவியமானது இன்று தமிழிலுங் கலந்து, எம்மை நாமே தாழ்த்தும் நிலைக்கு ஆளாக்கியது ஆச்சரியத்துக் குரியது.

இவ் இராமாயணம் எனும் ஆரிய காவியம் எவ்வாறு தமிழரை இகழ்ந்து தலை குனியச் செய்கிறது எனக் காண் போம். இராமாயணமானது இரு இனங்க ளான ஆரியர், திராவிடர் எனும் வம்சங் களிடையே யார் மேலானவர் எனும் கருத்தை நிலைநிறுத்த எழுந்த காவிய மாகும். ஆரியர் சார்பாக இங்கு இராம னும் அவனது படையினரும் தெய்வத்திற் குச் சமமாக மதித்துக் குறிப்பிடப்பட, திராவிடர் சார்பாய் இராவணனும் ஈழ மாந்தரும் அரக்கராய் இழித்துச் சித்த ரிக்கப் படுகின்றனர்.

சமண ஆசிரியர்களும் இராம கதையைப் பிராகிருத மொழியிலும் சமஸ்கிருதத்திலும் பௌமசரிதம், பத்மபுராணம் என்னும் இரு நூல்களாகப் படைத்துள்ளனர். அதிலே ஈழவேந்தன் இராவணனானவன், ''குமரியின் தெற்கே, வித்தியார்தரர்களின் தலைவனாகச் சிறப்புடன் ஈழ நன் நாட்டைப் பரிபாலித்தான்'' எனக் குறிப்பிடப் படுகிறான். வித்தியாதரர் எனப்படுவோர் விஞ்ஞானக் கலை நுட்பங்களிற் கைதேர்ந்த மக்களாவர். இவர்கள் எப்போதும் விமான மூலமாகவே பயணஞ் செய்தனர். விமானங்கள் போன்ற அரிய சாதனங்களை ஆக்கும் திறன் வித்தியாதரர்களுக்கே இருந்தது.

இவ் வித்தியாதரர் இனத்தைச் சேர்ந்த மேலுமொரு பிரிவினர் தக்கணத்தில் கிஷ்கிந்தை யருகில் வாழ்ந்தனர் எனவும் குறிப்புகள் உண்டு. ஆனால் வான்மீஹியின் ஆரிய காவியத்தில் இவ் வறிவாற்றல் படைத்த இரு இனங்களான தமிழரும், வாலி—சுக்கிரீவன் முதலானோரும் முறையே ஈழத்திற் ''கொடுந்தோற்றங் கொண்ட அரக்கராயும்'' கிஷ்கிந்தாவில் ''குரங்குகளாயும்'' இழித்துக் கூறப்படுகின்றனர். இவ்வாறு அறிவிலும் வீரத்திலும் சிறந்து விளங்கிய தமிழினம் பலவாறும் இழித்துச் சொல்லப்பட்டது. இன்றும் சொல்லப் படுகிறது.

மற்றோர் ஆரிய காவியமாகிய மகாபாரதத்தில், சந்தனுவின் மகன் தேவவிரதன் அம்பை, அம்பாலிகை, அம்பிகை எனும் மூன்று பெண்களைத் தன் உடன் பிறவாச் சகோதரர்கட்கு மணமுடித்துக் கொடுக்கும் முகமாகப் பிடித்து வருகிறான். இதில் அம்பிகையானவள் தன் மனத்தில் வேறொருவனை வரித்திருந்தாள். ஆயின் தேவவிரதன் ஆகிய பீஷ்மனோ அதைப் பொருட்படுத்தாது அவளைக் கடத்தி வருகிறான். இதனால் அம்பிகை தீயில் விழுந்து உயிர் விடுகிறாள். ஆயினும் இச்செயலினை 'பீஷ்மனின்வீரம்' எனப் போற்றும் மகாபாரதம்.

இங்கும் அதே நிலைதான். இராமன் மனைவியை இராவணன் சிறைப் பிடிக்கிறான். ஆயின் உயர்திராவிடப் பண்புடை இராவணன் அப்பெண்ணாளை ஏறெடுத்தும் நோக்காது கண்களாற் கூடத் தீண்டாது, குனிந்து நோக்கியவாறு சீதை இருந்த குடிலுடனேயே அவளைத் தூக்கி வருகிறான். வான்மீஹியோ அஃது சீதையின் கற்பின் சிறப்பெனவும் இராவணன் ஏறெடுத்துப் பார்த்தானாகில், கற்பரசி சீதையின் கண்களினின்றும் தோன்றும் தீ அவனைப் பொசுக்கும் என்கிறார். கற்பினிற் சிறந்த அம்பிகையைத் தேவவிரதன் தன் கைகளாற் பற்றி இரதத்திற் கடத்தி வருகையிற் கற்பரசி அம்பிகையின் கண்களிலிருந்து தீ கிளம்பாதது ஏன்?

ஆகவே அஃது அம்பிகையினதோ, சீதையினதோ கற்பாற்றல் அன்று ஆரிய–திராவிட பண்பையே அது காட்டும். பிறனொருவனை வரித்திருந்த பெண்ணொருவளைக் கைகளாற் தீண்டிக் கடத்தி வரும் கயவரே ஆரியர், பிறன் மனைவியை ஏறெடுத்தும் பார்க்காது, தீண்டாது சிறைப் பிடிக்கும் உயர் பண்பினரே திராவிடர். கற்பின் நல்லாள் அம்பிகை அங்கு தீயில் வீழ்ந்து உயிர் துறக்கிறாள். அவளைப் பற்றிப் பெரிதாகப் பாடவில்லை மகாபாரதம். அஃதும் அம்பிகை மனத்தளவிலேயே கணவனை வரித்திருந்தாள். ஆனால் இங்கோ, கணவன் இட்ட கோட்டைத் தாண்டி, ஓர் ஆடவனுடன் செல்கிறாளே! உயிர் துறந்தாளா சீதை? இது தானே ஆரியர் கண்ட கற்பு? இதுவோ கற்பரசிக்கிலக்கணம்?

எனவே ஆரியர்களானவர் சந்தர்ப்பத்திற்கேற்ப, திராவிடர் சிறப்பை மழுங்கடிப்பதே நோக்காகக் கொண்டு,கொள்கை தேர்ந்தனர். திராவிடர் என்ற ஒரே காரணத்தினாலன்றோ அழகிய இலங்காபுரியைப் படைத்த வித்தியாதரச் சக்கரவர்த்தி இராவணன் கோரமாகக் காட்டப்படுகின்றான். இணையற்ற வீரனான இராவணனையும் வென்ற மாவீரன் வாலி 'குரங்காகச்' சித்திரிக்கப் படுகின்றான். பலி, வேள்வி, கொலை முதலியவற்றில்

ஈடுபட்டோரே ஆரியர் ஆயின் திராவிட மெய்ச்சமயத் தமிழரோ அஹிம்சை எனும் கொல்லா நெறி நின்றோரே!

இவ்வாறாக, உயரிய தமிழரை இழிந்து கூறும் இத்தகைக் காப்பியங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டுமா? அதுவும் ஒப்பற்ற கவிச் சக்கரவர்த்திகளால் இவ்வேலை புரியப்பட்டது சரியா? இனிய செந்தமிழில், சிலம்பு மேகலை குண்டலத்தோடு சிந்தாமணிவளைஇலங்க, வேற்றுமொழித் தழுவி, எம் சிறப்பைக் குலைக்கும் காவியங்களை நாம் வளர்க்க வேண்டுமா? இன்றும் பெருந்தமிழ்ப் புலவர்களும் பேராசிரியர்களும் பண்டித மாமணிகளும் கம்பனையும் வில்லியையும் கற்றுவிட்டேன் என்று கூறிச் சிறப்படைகிறார்கள்.

ஆயின் தமிழ்த் தாயை அலங்கரிக்கும் சிலம்பும் மேகலையும் குண்டலமும் வளையும் சிந்தாமணியும் சிறுகச் சிறுகத் தஞ் சிறப்பிழந்து போகின்றன. பாடசாலைப் புத்தகங்களிலும் எமது தமிழ்க் காப்பியங்கட்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப் படவில்லை. தழுவிச் செய்யப்பட்ட இலக்கியமாக இலக்கியங்களே இன்று கற்பிக்கப்படுகின்றன. கற்பதற்கே நேரமற்ற இந் நாளில் இலக்கியங்களை வாசிக்கும் மாணவர் தொகையோ மிக அரிது. இந் நிலையில் மாணவர்கட்கு இலக்கியங்களை அளிக்கச் சிறந்த வழி பாடப் புத்தகங்களே.

ஆனால் அப் பாடப் புத்தகங்களிலும் இலக்கியமாகா இலக்கியங்களான தழுவல் இலக்கியங்களும், திட்டமிட்ட முறையில் எமது, இன, குலப் பெருமையையே குலைக்கும் வேற்றார் இலக்கியங்கட்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது. எமது இளஞ் சிறார்கள், தங்கள் இனம், முற் காலத்தில் எத்துணைச் சிறப்புடன் வாழ்ந்தது என்பதை அறியாமல் பாடத்திட்டம் அமைக்கப் பட்டுள்ளது. எம் முன்னோர் கொடுந்தன்மை கொண்ட அரக்கரென்றும் இயக்கரென்றும் சித்திரிக்கும் முகமாகப் பாடத்திட்டம் அமைப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இனியாவது அத் தவறு உணரப்பட்டு, ஆசான்களால் மாணவர்கட்கு அருந்தமிழ்க் காப்பியங்கள் கற்பிக்கப்பட வழி சமைக்கப் படட்டும்.

எல்லையில்லா நிலப் பரப்பில் அரசு புரிந்து வந்த தமிழினம், தொன்று தொட்டு ஆரியரால், அந்நியரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அரசுரிமையிழந்து, தங்குலச் சிறப்பிழந்து இன்று எல்லையில்லா நிலப் பரப்பில் அகதிகளாய் வாழ்வதற்கு வேறு யாரும் காரணமாகார்! அடைக்கலம் தேடி வந்தோரை ஆதரித்துக் காத்த எம் இனம் இன்று படைக்கலங்களாற் பாரெங்கும் துன்புற்று அடைக்கலந் தேடும் நிலைக்கு வேறு யாரும் காரணமாகார்! எமது வீழ்விற்கு நாமே காரணமானோம். அடுத்தவரின் சிறப்பினையே போற்றி வாழ்ந்தோம். எங் குலத்தின் பெருமைதனைச் சிந்தித்திலம். அதனாற்தான் இந்நிலைக்கு ஆட்பட்டோம். இனியாவது சற்றுச் சிந்திப்போம்.

வருங்காலத்திலாவது, எமது குலப் பெருமையை நிலை நாட்டிப் பண்டைத் திராவிட தமிழன் வாழ்ந்த நிலையை எட்டிப் பிடிப்போம். மாற்றான் சிறப்பினை மாத்திரம் போற்றாது அதனிலும் மேலாய் எங்கள் சிறப்பினை உலகறியப் பறைசாற்றி வாழ்வோம். ''தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!'' என்ற புதுமைப் புரட்சிக் கவி பாரதி வாக்கிற்கமைய இன்றே

'' தலை நிமிர்வோம் ''

நிலக்ஷன் சுவர்ணராஜா
ஆண்டு 11Q

With Best Compliments

from

Amic Brothers

Importers & Dealers in House Holdware,
Electrical Appliances and Queen's Icing Set Etc.

37 & 41 Keyzer Street,
Colombo - 11.

Tel: 421395

With Best Compliments from

S. T. R. Salay Mohamed & Co.

245, Main Street,
Colombo - 11

T.P. 20536

தமிழுக்கு இஸ்லாமியர் ஆற்றிய தொண்டு

தமிழுக்கு இனிமை என்ற பொருள் உண்டு. ஒரு வளர்ச்சியடைந்த மொழியை அரபிகள் 'அரப்' என்றே அழைப்பர். இந்தியாவின் தென்பகுதிக்கு வந்த அரபிகள் தமிழ்மொழியை 'அரப்' என்றே அழைத்தனர். அதன்மூலம் தமிழ் இனிமையும் வளர்ந்து மொழி என்ற அமைப்பினையும் கொண்டதாகும்.

ஒரு மொழியில் ஒரு பொருளுக்கு பல சொற்களை கொண்டிருப்பின் அது ஒரு வளர்ச்சியடைந்த மொழியாகும். இதே வரிசையில் தமிழும் ஒரு சிறப்பு மிகு மொழியாகும்.

தமிழ் மொழிக்கு சமணமதத்தினர், பௌத்த மதத்தினர், கிறிஸ்தவ மதத்தினர், இஸ்லாமியர்கள் காலத்துக்கு காலம் அதன் வளர்ச்சிக்கு சிறப்பான தொண்டாற்றினர். தமிழில் காப்பியக்காலம் எனப் போற்றப்படும் ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன சமண பௌத்த தத்துவங்களின் அடிப்படையில் உருவான பெருங்காப்பியங்களாகும்.

இஸ்லாமியர்கள் தமிழக பகுதியில் குடியேறி தமிழ்மக்களுடன் திருமணத் தொடர்பு கொண்டு மொழியில் தமிழனாகவும் மதத்தில் இஸ்லாமியனாகவும் வாழுகின்றபோது தமிழ்மொழிக்கு பெருமைதரத்தக்க காப்பியங்களை இயற்றி பெருமைபடைத்தார்கள். தமிழோடு இணைந்து, தமிழில் ஆழ்ந்து தமிழ் தேனிசையில் நனைந்து தமிழுக்கு தொண்டாற்றியவர்கள் முஸ்லிம்களாவர்.

தமிழ் இலக்கியத்திலுள்ள புராணம், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், திருப்புகழ், அம்மாணை, மாலை, சிந்து, தாலாட்டு, கோவை, திரட்டு, நாடகம் என்ற அமைப்புகளில் இஸ்லாமியரும் தம்மாலான வகையில் தொண்டாற்றினர். தமிழ்மொழிக்கு அணிகலனாக காலத்துக்கு காலம் இஸ்லாமியர்கள் பல்வகை இலக்கியங்களை படைத்து தம் பணியினை செய்துள்ளனர். அன்றுமுதல் இன்றுவரை பல காவியங்களையும் இலக்கிய வடிவங்களையும் யாத்து வழங்கியுள்ளனர்.

உமறுப்புலவரும், முஹம்மது நூர்தீன் புலவரும் இயற்றிய முறையே சீறாப்புராணமும் மூஸா நபிப்புராணமும் புராண இலக்கிய வடிவங்களாகும். இதில் சீறாப் புராணத்தின் காவியநாயகனாக அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களை சித்தரிக்கின்றது. இதில் கம்பனது கம்பராமாயணத்தின் அடிச்சுவடை பின்பற்றியுள்ளதை காணலாம். கம்பனது வாழ்வுக்கு உறுதுணையாயிருந்த சடையப்ப வள்ளலை புகழ்ந்து பாடியுள்ளதை ஒத்ததாக சீறாப்புராணத்திலும் உமறுப்புலவர் சீதக்காதி மரைக்காரை புகழ்ந்து பாடியுள்ளதை நோக்கலாம்.

முஹம்மது நூர்தீர் புலவர் இயற்றிய மூஸாருபி புராணத்தில் காப்பிய நாயகனாக மூஸா (அலை) அவர்களை கொண்டுள்ளது. இதில்மூஸா(அலை) நைல் நதியில் தனது தாயினால் பேழையில் வைத்து அனுப்பி வைத்த அம்சம் மகா பாரதத்தில் கர்ணனை குந்திதேவி பேழையில் வைத்து அனுப்பிய சம்பவத்தை ஒத்து காணப்படுகின்றது. மனித வரலாற்றில் எங்கோ நடை

பெற்ற ஒரு சம்பவம் அது. ஒவ்வொரு நாட்டினதும் அதன் பாரம்பரியத்துக்கும் ஏற்ப அது வித்தியாசமான கதையாக புராணமாக மாறுவதை காணக்கூடிய தாக உள்ளது.

திருப்புகழ் வரிசையிலே காசிம்புலவர் இயற்றிய திருப்புகழும் அசனார் லெப்பை புலவர் இயற்றிய நவரத்தின திருப்புகழும் சிறந்ததாகும். கலம்பக வரிசையில் செய்யது அப்துல் காதிர் நைனாலெப்பை இயற்றிய மக்கா கலம்பகமும் பிச்சை இப்றாஹிம் புலவர் எழுதிய திருமதினா கலம்பகமும் முக்கியமானவை ஆகும். அந்தாதி வரிசையில் ஜவ்வாது புலவரின் மதினத்து அந்தாதியும் குலாம் காதிர் நாவலரின் திருமக்க அந்தாதியும் வைணவ ஆழ்வார்களின் அந்தாதி அமைப்புகளை கொண்டதாகும்.

மீரானசாஹிப் புலவரின் றசூல்நாயக பிள்ளைத்தமிழ் முஹம்மது (ஸல்) அவர்களின் குழந்தைக்கால புகழ் பாடுவதாகவும், ஆரிப் நாவலரின் நாஹகுர் பிள்ளைத்தமிழ், நாஹகுர் ஆண்டகையின் புகழ்பாடும் பிள்ளைத்தமிழ் நூல்களாகும்.

ஆழிப்புலவரின் மிஹ்றாஜ்மாலையும் குஞ்சுமூசா புலவரின் அஜபு மாலை என்பன மாலை வகையாகும். அம்மானை வகையில் கவிக்களஞ்சிய புலவரின் நபி அவதார அம்மானையும் மீராப்புலவரின் பப்பரத்தி அம்மானையும் சிறப்பான அம்மானைவகை யாகும். சிந்து வகையில் அசன்அலிபுலவரின் பூவடிச்சிந்தும் அம்சா லெப்பையின் கப்பல் சிந்தும் சிறப்பானதாகும்.

கும்மி, தாலாட்டு, கோவை போன்ற அமைப்புகளில் முறையே மதாருப்புலவரின் திருக்காரண சிங்காரகும்மி, முஹைதீன் நாவலரின் மெய்ஞான கும்மி சிறப்பானதாகும். தாலாட்டுப் பாடல்களில் அசனலிப்புலவரின் பஞ்சரத்தின தாலாட்டுப்பாடல் சிறப்பானதாகும். கோவைக்கு சேகுதம்பி பாவலரின் நாகைக்கோவையும், குலாம் காதிர் நாவலரின் மும்மணிக்கோவையும் சிறந்த இலக்கியங்களாகும்.

நாடக இலக்கியத்தை பொறுத்த மட்டில் மற்ற இலக்கியங்களைப் போன்று அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை எனலாம் ஏனெனில், முஸ்லிம்கள் மாறு வேடம் பூணுதல் ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் பெண்கள் மேடைகளில் நடிப்பதும் இஸ்லாமிய கொள்கைகளுக்கு மாறுபட்டவையாகும். ஆதலால் நாடக நூல்கள் எழுதுவது மட்டுப்பட்டு இருந்த போதிலும் முஹம்மது இப்றாஹிம் எழுதிய தையார் சுல்தான் நாடகமும் வண்ணக்களஞ்சிய புலவர் இயற்றிய அலி பாதுஷா நாடகமும் நாடக இலக்கியத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன.

தமிழ் நாவல் இலக்கிய வடிவத்தில் கிஸ்ஸா என்ற அமைப்பை உருவாக்கியவர்கள் முஸ்லிம்களாகும். இதில் குலே பஹாவலி கிஸ்ஸா ஹாத்திம் தாதா கிஸ்ஸா நான்கு பக்கீர் கிஸ்ஸா ஆது மகன் சத்தாதின் கிஸ்ஸா போன்றவைகள் தமிழில் புதிய இலக்கிய வடிவங்களாகும். இதனை அமைத்துக் கொடுத்தவர்கள் முஸ்லிம்களாகும். இவ்விலக்கியங்களில் அரபிச்சொற்கள் பரவிக் காணப்படுவதை காணலாம்.

இந்துமத தத்துவங்களுடன் இஸ்லாமிய தத்துவங்களும் இரண்டற கலந்த நிலையில் தத்துவப்பாடல்களை காணக்கூடியதாக உள்ளது. இதில் சிறந்த உதாரணம், குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களின் முஹைதீன் சதகத்தில் உள்ள பாடல்கள், பட்டினத்தாரின் இந்துமத தத்துவங்களை மூலக்கருவாக கொண்ட பாடல்களை ஒத்ததாக உள்ளது.

தமிழ் தாழ்ந்து, வீழ்ந்துபட்டிருந்த காலப்பகுதியான கி.பி. 17ம் நூற்றாண்டில் தமிழில் பெருங்காப்பியங்கள் தோன்றாதபோது இஸ்லாமியர்கள் காப்பியங்களை படைத்தார்கள். எடுத்துக்காட்டாக உமறுப்புலவரின் சீறாப்புராணம், அன்னியர் ஆட்சியில் தமிழகம் வீழ்ந்த வேளையில் தான் உருவானது. அதே போல் சிற்றிலக்கியங்களையும் உருவாக்கி தமிழின் நறுமணம் பரவ இஸ்லாமியர்கள் சிறந்த தொண்டாற்றினார்கள்.

— இஸ்மாயில் பயாஸ் இதுறு மொஹைதீன்
ஆண்டு 11 R

With Best Compliments

From

Phoenix Industries (Pvt) Limited.

Manufacturers of Plastic and Aluminium Ware

35, Ragama Road.

Welisara.

Best Wishes from

Buddhe Book Shop

5, 1/7, Kotahena Super Market,

Colombo - 13.

With Best Compliments

from

VMAS PRINTER

Letter Press & Offset Printers

282, Wolfendhal Street,

Colombo - 13.

T. Phone: 431588

முதல் காதல் முற்றும் காதல்

அரும்பு முளைப் பருவத்தில்
ஆரா காதல் கொண்டேன்
அவள் ள்ழகியெனக் கண்டேன்
அவள் இன்றி நானில்லை என்றேன்
பெற்றோர் துணை பெற்றேன்

பள்ளிக் கூடம் சென்றாலும்
பிரத்தியேக வகுப்புகள் சென்றாலும்
பாதை வழியே போனாலும்
பஸ் தரிப்பில் நின்றாலும் - என் மனம்
பாவையவள் பூவழகில் பூத்தே நின்றது

பண்புக்கு இலக்கணமாய்
அன்புக்கு அடித்தளமாய்
ஆற்றலுக்கு உற்றவலுவாய்
அறிவுக்கு மூலநாடியாய்
முழங்கும் அவளை
முழுதாக பெற்றேனன்றி
என் பசி தீராது என்றேன்

வெள்ளை பணி பூண்டு வெண்மனம் காட்டி
என் மனம் மயக்கிய கல்வி மகள் அவளிடம்
நாம் மணந்திருப்போமா அன்பே என்றிட்டேன்
இள நகை பூத்து மறைந்திட்டாள் மங்கை

கற்பது கைமண் அளவு
கல்லாதிருப்பது உலகளவு

என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகியது அப்போது

சிவலிங்கம் ரமேஸ்
13 Sc, L

With Best Compliments

From

NEW PUSHPA STORES

Dealers in Rice, Curry Stuffs & Oilman Goods Etc.

127, Galle Road, Bambalapitiya.

Dial: 588866

Colombo – 4.

With Best Compliments
from

V

LANKEM CEYLON LTD.

P. O. Box 919,

BASELINE ROAD,

COLOMBO - 9.

Tele : 698292 - 6

Telex : 21359 LANKEM CE

Fax : 6963350

With Best Compliments

from

The Bombay Harmonium Co.

"MUSIC PEOPLE"

Manufacturers of **"Master Mohan Flute"**
Musical Instruments
Importers & Dealers of all Varieties of
Musical Instruments & Parts

122, Sea Street, Colombo - 11. (Sri Lanka)

Estd: 1932 Phone: 25817

WITH BEST COMPLIMENTS FROM

Kala Mandir

The Exclusive Saree Salon

A Fascinating Variety of High Quality
Exclusive Sarees From India

KALA MANDIR SAREES ARE AVAILABLE IN

**Kanchipuram-Pure Silk Benares-Silk Cotton-Mysoor Silk
Silk Polyester-Art Silk-Cotton-Handwoven.**

KALA MANDIR
2-28, Majestic City,
10, Station Road, Bambalapitiya.
Colombo - 4.

T. P. 587240

தமிழுக்கும் அமுதென்று பெயர்

''தமிழுக்கும் அமுதென்று பெயர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்''

என குரலெழுப்பினான் பாவேந்தன் பாரதிதாசன். அமுதென்று பாடப்பட்ட நம் தமிழ்மொழி என்றும் புதியது, என்றும் இனியது, இளமை நலம் பூத்துக் குலுங்கும் சிறப்புடையது. அது காலங் கடந்தது. முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் புதுப் பொலிவு பெற்று விளங்குவது.

பொதிய மலை, குறுமுனியாம் அகத்தியனால் இயல், இசை, நாடகம் என முத்தமிழாக வகுக்கப்பட்ட நம் தமிழ் மொழி கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றியது. எனவே நம் தாய்மொழியாம் தமிழை அமுதென்று சொன்னால் அது மிகையாகாது.

அமுதென்றால் அது உயிர் காக்கும் அமுத சஞ்சீவி, அதனை உண்டோர்க்கு இறப்பென்பதே கிடையாது என்பார்கள். அதைப்போன்று அமுதாகிய நம் தமிழ் மொழியும் என்றும் இறவாத தன்மை யுடையது. காலங்கள் தோறும் யுகங்கள் தோறும் நீடித்து வாழக் கூடிய சிறப்பினைத் தருவது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ் ''என வாழ்த்தப் பெற்ற'' நம் தாய் மொழியாம் தமிழ் அமுதம் போன்று இனிமையானது. அது கேட்கக் கேட்க தெவிட்டாதது செவிக்கு இன்பந் தருவது தீஞ்சுவை மிக்க கானங்களால் கேட்போர் உள்ளத்தைக் கனிய வைப்பது.

இத் தமிழ் மொழியினை ஓர் அணங்காக உருவகித்து மகிழ்ந்தனர் நம் மூதறிஞர்.

''கா தொளிரும் குண்டலத்தால்
கனிமொழியாள் வாழக்''
கைக்குவளையாபதி தொன்
கன்னிகையாள் வாழ்க;
மேதகு மின்மார்பிடை
சிந்தாமணியாள் வாழ்க;
மின்னும் மணிமேகலை சூழ்
சிலம்புடையாள் வாழ்க;

என ஐம்பெருங்காப்பியத்தையே அவ் வன்னைக்கு அணியாகப்பூட்டி அகமகிழ்ந்தனர் நம் தமிழ் மூதறிஞர்.

வான்புகழ் வள்ளுவனை உலகினுக்குத் தந்து உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்களித்த பெருமையுடையது தமிழ்மொழி. திக்கெட்டும் பெரு முழக்கம் செய்யும் செம்மை சான்ற இக்குறளின் பெருமையினை பி. பி. சி.யில் இருந்து முழங்கும் தமிழோசையில்கூட நாம் நாள் தோறும் செவிமடுக்கலாம். இப் பெருமைக்கெல்லாம் காரணம் எது? அமிழ்தினு மினிய நம் தமிழ்மொழியன்றோ.

உயிராற்றல் மிக்க இத்தமிழ்மொழி நெகிழ்ச்சியுடைய ஆற்றலும் மிக்கது.

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினாலே'' என தொல்காப்பியர் கூறிய வாக்கிற்கிணங்க காலமாற்றத்திற்கேற்ப வரம்பிற்குட்பட்ட எத்தனையோ பல மாற்றங்களை ஏற்றுக் கொண்டு தேவையற்றவற்றை விலக்கி, தேவையானவற்றை ஏற்று, என்றும் தலை நிமிர்ந்து தளிர் நடைபோடும் சிறப்புடையது நம் தமிழ்மொழி.

இத்தகைய செம்மை சான்ற நம் தமிழ்மொழி வேண்டுவார் வேண்டுவதை வழங்கக் கூடிய ஆற்றல் உடையது. ''கலைநயம் மிக்க கனிவான பாடல்கள்

வேண்டுமா? அறிவை வளர்க்கக் கூடிய அறிவியல் நூல்கள் வேண்டுமா? தர்க்க வாதத்தை வளர்க்கக் கூடிய தர்க்கவியல் நூல் வேண்டுமா? மெய்யுணர்வை மிளிரச் செய்யும் மெய்யியல் நூல் வேண்டுமா?''.

என கிருஷ்ண பரமாத்மா கீதையில் கூறியவாறு வேண்டுவார் வேண்டும் சகல அறிவியல் அம்சங்களும் நம் தாய்மொழி யாம் தமிழின் கண் பரவியுள்ளதனால், அதனை அமுதென்று சொல்லாது வேறு என்னவென்று சொல்வது'' நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

அமுதம், சிரஞ்சீவி, என்றும் நிலைத் திருப்பது என்றும் உயிர்காப்பது, அது தேவாமிர்தம், அத்தகைய நம் மொழி உயிர்காக்கும் ஜீவனுள்ள உயிர்த்துடிப் பானது. இம்மொழியின் ஆற்றல் கைவ ரப்பெறின் நம் நாடாளும் மன்னரைவிட நற்சிறப்புப் பெறலாம். இதனாலன்றோ நம் ஒளவை மூதாட்டி, ''மன்னனுக்குத் தன் தேயமல்லால் சிறப்பில்லை கற்றோ னுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'' என்றார். அதுமட்டுமா மனிதப் பண் பாட்டு வளர்ச்சிக்கும், எண்ணப் பரிமாற் றங்கட்கும், நம் தமிழ்மொழிபோல் இனி மையான வேறு எந்த மொழியும் இல்லை. உணர்ச்சி பூர்வமான மெய்ப் பாட்டு வெளிப்பாட்டிற்கும் நம் தமிழ் மொழிபோல உதவக்கூடியது வேறு ஒன்றும் இல்லை. மனிதனது ஓய்வுகால வேளையில் உற்ற நண்பன்போல உட னிருந்து உதவக்கூடிய ஆற்றலும் நம் தமிழ் மொழிக்குண்டு. விரக்தியன் விளிம் பிலே வாழ்வின் இறுதிக்கட்டத்தினை எதிர்நோக்கி அங்கலாய்ப்புடன் இருக்கும் மனித உள்ளத்தைக் கூட சாந்தப்படுத் தக்கூடிய ஆற்றல் நம்மொழிக்குண்டு. இவ்வாற்றல் மிக்க நம் மொழியை அமு தென்று கூறலாம் அல்லவா?

அமிழ்தினுமினிய நம் மொழி என் றென்றும் வாழ்க!

எம். ஐ. மொஹமட் இஷ்ரத்
ஆண்டு 12 Sc L.

* * *

Well Wishes From

OPATHA & CO.

No. 15, ST. JOHN'S ROAD,
COLOMBO - 11

Phone : 25685

BEST WISHES FROM

GOWRI
JEWELLERS

(AIR CONDITIONED)

38, Sea Street,
Colombo - 11

Phone : 20810

With Best Compliments

from

CITY CIGAR STORES

No. 230, Bankshall Street,
Colombo - 11

Tel : 24182

With Best Compliments From

Fainaz Music Corner

For Quality Recording in English, Tamil, Sinhalese & Hindi

53 - 2/2 SECOND FLOOR, KEYZER STREET,
LUCKY PARADISE SUPER MARKET,
COLOMBO - 11

TEL: 423519

40 - 1/5 GALLE ROAD, WELLAWATTE, COLOMBO - 06

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

கண்கண்ட தெய்வங்கள் என்றும், பேசும் தெய்வங்கள் என்றும் போற்றப் படும் அன்னையும் பிதாவும் ஒப்பற்ற வர்கள் ''தாயிற் சிறந்த கோவிலும் இல்லை. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என பெரியோர் போற்றி நின்ற னர். இத்தகைய அன்னையும் பிதாவும் தெய்வங்களாக போற்றப்படவும் பேணப் படவும் வேண்டியவர்களே.

தாயினது பொறுமையைக் கண்ட பெரியோர் தாய்மொழி, தாய்நாடு என்றும் பேசும்மொழி, நம்மை தாங்கி நிற்கும் மண் யாவற்றையும் தாய் வடிவில் கண்டனர். தந்தையாரின் வீரவுணர்வை யும் திடமான உள்ளத்தையும் கண்ட பாரதி ''தந்தையார் நாடென்ற பேச் சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்று மார்பு தட்டி நிற்கின்றார்.

எம் துன்பம் கண்டு, தான் துன்புற்று, நாமுண்ணாது, தானுமுண்ணாது நம் இன் பத்தில் தம் இன்பம் காணும் அன்னை பாலோடு எம் பண்பாட்டையும் சேர்த்து தந்தவள். அவள் அல்லற்பட்டு ஆற்றாது அழுதால் நம் செல்வம் எல்லாம் கரையும் என்பது பண்டைய பெரியோர் கண்ட உண்மை. நம் உயர்வினைக் கண்டு''ஈன்ற பொழுதில் பெரிதுவப்பாள்'' என்ற குறள் மூலம் வெளி கொணர்ந்தார் வள்ளு வர். ஆகவே அன்னையை தெய்வமாக வணங்குவதில் தப்பேதும் இருக்க முடி யுமா?

''ஈன்று புறந்தருதல் தாயின் கடன், சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடன்'' என்ற வள்ளுவர் ''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்'' எனுஞ் சொல்' மூலம் பிள்ளை கள் பெற்றோருக்கு இப்பிள்ளைகளை பெற்றெடுக்க 'இந்த தாய் தந்தையர் என்ன மாதவம் செய்தனர் என்று ஊர் பேசவைக்க வேண்டும். அப்பொழுது தான் நம் முதல் இரு குரவர்களான அன் னையும் பிதாவும் அக மிக மகிழ்வர்.

போற்றப்படவும், பேணப்படவும் வேண்டிய அன்னையும் பிதாவும் இன்று பெற்றெடுத்த பிள்ளைகளினால் கவனிக் கப்படாமல் வயோதிபர் இல்லங்களிலும் இனத்தவர் இல்லங்களிலும் தங்கள் பிற் காலத்தை கழிப்பதை காணும்போது உள்ளம் குமுறுகிறது. பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்த பெற்றோ ருக்கு நாம் செய்யும் கடன் இது தானா? பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்ற வாக்கை மாற்றி அமைக்க வேண்டும்.

மணிவாசகப் பெருமான் தான் இயற் றிய திருவாசகம் ஒன்றில் பாடும்போது இறைவனை ''அம்மையே அப்பா ஒப் பிலா மணியே'' என்று தொடங்கிப் பாடுவதிலிருந்து அன்னையையும் அப்பா வையும் இறைவனுக்கு ஒப்பிட்டு இருப்ப தைக் காணலாம். பட்டினத்தடியார் தாயின் இறுதிக் கிரியையின்போது:

''ஐயிரண்டு திங்களாய் அங்க மெல்லாம்
நொந்து பெற்று என்று தொடங்கி
எப்பிறப்பில்காண்பேன் இனி''

என்று கூறியுள்ளார். இதிலிருந்து அக் காலப் பெரியோர் பெற்றோரை எப்படி போற்றியுள்ளனர் என்பதை அறியலாம்.

எம்மை இவ்வுலகில் வாழவைத்து இவ் வுலகில், வாழ்வாங்கு முறைப்பகன்று தெய்வத்துட் சேரும் சிறப் பெழுக்கல் எடுத்துச் சொல்லிய எம் பெற்றோரை தெய்வம் எனப் போற்றினோம். இதனாற் தான் அன்றைய பெரியோர் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' ''மாதா பிதா குரு தெய்வம்'' என்றெல்லாம் சொல்லி வைத்தார்கள்.

நமக்கு இவ்வளவு செய்த எம் பெற் றோரை கண் என்று காப்பது நம்கடன் அன்றோ! செய்நன்றி மறந்தோர் மானி டரில் கடையர். எமக்கு சொல்லால் சொல்ல முடியாத செயற்கரிய செயல் களை செய்த பெற்றோர் தெய்வங்களாக போற்றப்பட வேண்டியவர்களே.

அனந்தன் இரத்தினசபாபதி
ஆண்டு 7S

With Best Compliments

from

Wijaya Trading Agency

Distributors of Nestle's Products

General Merchants & Commission Agents

Distributors & Dealers For

Nestle's Lanka Ltd.
H. Don Carolis & Sons Ltd.
Glaxo Ceylon Ltd.
Reckitt & Colman of Ceylon Ltd.
Swadeshi Industrial Works.
Lanka Milk Foods
Uni-Lever Ceylon Ltd.
Eveready Battery Company Lanka Ltd.

229, 5th Cross Street,
Colombo - 11.

103, Old Moor Street,
Colombo - 12.

Tel: 433864, 435168 436171 Cable: NAGAMMAL

The Eye Sees
The Mind Perceives
The Product That Stands Out Moves First

Specialists in Multi-Colour Printing

Arasan Printers

(LETTERPRESS & OFFSET PRINTERS)
30, Hyde Park Corner,
Colombo - 02.

TEL : 26482, 422393.

With Best Compliments From

Unique Communication Service

&

Agency Post Office

No. 54, YorK Street,
Colombo - 01.

கட்டுரை போட்டியில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

உலகின் வறுமை பிணிக்கு விஞ்ஞானிகள் பரிகாரம் காண தவறிவிட்டனர்.

இருபத்தியாறாம் நூற்றாண்டை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் இவ் விஞ்ஞான உலகம், இல்லாதவற்றையெல் லாம் கண்டுபிடித்துவிட்டு இன்னும் எதை கண்டுபிடிக்கலாம் என வாய்திறந்து எதிர் பார்த்துக்கொண்டிருந்தாலும் கூட தம் வயிற்றுப் பசியை போக்க எதனை கண்டு பிடிக்க வேண்டும் என்பதை மறந்துவிட் டார்கள் என்பதை கூறுவதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆக்கத்திற்கும் அழி விற்கும் காரண கருத்தாவாக விளங்கும் இவ்விஞ்ஞானிகள் ஆக்கியதை அழிக்க முடியாமலும், அழித்ததை ஆக்கமுடியா மலும் தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர். இவ்விருபதாம் நூற்றாண்டின் ஈற்றுப் பகுதியில் வீறுநடை போடும் விஞ்ஞானி களைப் பற்றிக் கூறுவதானால் அவர் களின் இச்சைப்படியே இவ்வுலகும், எண் ணுலகும், அவற்றிலுள்ள வஸ்துக்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றனவெனக் கூற லாம்.

ஆம் உலகில் வறுமை எனும் அறக் கொடி தலைவிரித்தாடிக்கொண்டிருக்கை யில் ஒரு சாரார் தமது வயிறுநிறைய உண்டுவிட்டு, காணாததற்கு வீட்டிலிருக் கும் எறும்புக்கும் கூட வயிறுநிறைய சாப் பாடு போட்டுக்கொண்டிருக்கையில் இன் னொரு சாரார் எலும்பும் தோலுமாய் ஒட்டிப்போய் கிடக்கின்றனர். உதாரணத் திற்கு ஆபிரிக்கா கண்டத்திலுள்ள நாடு களின் மீது ஒரு கண்ணோட்டம் இட்டுப் பார்த்தால் மேற்கூறிய கூற்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எவ்வளவு தெட்டத் தெளிவாக விளங்குகிறது. தென்னா பிரிக்கா மண்ணிலே நம்மைப்போல் இரத் தினம் சுரக்கவில்லை; குவைட்டைப்போல் எண்ணெய் சுரக்கவில்லை; இரசியாவைப் போல் இரும்பு சுரக்கவில்லை, இவை எல்லாவற்றையும் விட பெறுமதி வாய்ந்த பொற்குடம் போன்ற தங்கம் சுரக்கின் றது. தென்னாபிரிக்க மண்ணில் தங்கம் சுரக்கின்றது. ஆனால் நைஜீரியா தாய் ஒன்றின் மார்பில் பால் சுரப்பதில்லை. ஏன் நாம் ஆபிரிக்காவை பார்க்க வேண் டும். ஆசியாவில் எம் நாட்டின் மீது கவ னத்தை செலுத்திப் பாருங்களேன். எத் துணை அகதிகள் உணவின்றி உடையின்றி உறைவிடம்இன்றி மிருகங்களிலும் கேவல மாக நடந்துகொண்டிருக்கின்றார்கள்.

நிச்சயமாக விஞ்ஞானிகள் தமக்குரிய முக்கிய கடமையை புரியவில்லை, செய்ய வில்லை. எத்தனைக்கோடி ரூபாயை அழிவுக்காக பயன்படுத்துகின்றனர். எத் தனைக்கோடி ரூபாய் செலவழித்து வித விதமான ஆயுதங்கள் உற்பத்தி செய் கிறார்கள்; விதவிதமான ஆயுதங்கள் கண்டுபிடிக்கிறார்கள். அவர்களது ஆய் வுக்காக பயன்படுத்தும் பணம் அவ்வள வும் வேண்டாம்; அதில் பத்தில் ஒன்றும் வேண்டாம்; அதில் நூறில் ஒன்றும் வேண் டாம்; அதில் ஆயிரத்தில் ஒன்றையாவது உணவுற்பத்திக்கு பயன்படுத்தினார்களா னால் குறுகிய காலத்தில் வறுமை என்ற சொல்லை கேட்பது அத்திபூத்தாற் போலிருக்கும். பட்டினியால் மக்கள் மடி யவே மாட்டார்கள். உலகமே பச்சைப் பசேல் என காணப்படும். பல்லாயிரம் மக்கள் பலநாள் வாழ்வார்கள்; பலரால் வாழ்த்தப்படுவார்கள். இன்று அனேக மான நாடுகள் தமது வறுமை காரண மாகவே தமது உணவுற்பத்தித்துறை அபி விருத்தி செய்யமுடியாமல் தவழ்கிறார் கள். மற்றநாடுகளிடம் கைநீட்டுகிறார் கள். விஞ்ஞானிகளின் ஆய்வுக்கும் அழி வுக்கும் பயன்படுத்தும் அச்சொத்தில் ஒரு பங்கை இதற்காக பயன்படுத்தினால் எத்

துணைபேரின் வயிறுகள் உணவால் நிரம்பும் அதேவேளையில் அவர்களின் உள்ளங்கள் இன்பத்தாலும் இனிக்கும். உணவு உறைப்பாக இருந்தாலும் அது உள்ளத்திற்கு இனிப்பாக கனியும். அப்பணத்தை விவசாயிகளுக்கு தர்மமாக உதவுவதன் மூலம் அவர்களின் தொழிலில் எவ்வளவு முன்னேற்றம். உணவு விலையை உயர்த்தினாலோ வீதிவழியே அட்டகாசம் தலையோங்கும். ஆனால் விவசாயிகள் வீடு வழியே அட்டகாசம் விதிக்கின்றனர்.

விஞ்ஞானிகள் தங்கள் அறிவை பயன்படுத்தும் துறைகளை கண்ணோட்டமிட்டுப் பார்த்தால் எப்போதும் அவர்களது மனதில் ''அந்தக்கோளிற்கு எப்படிச் செல்லலாம், சென்றாலும் அதில் என்னென்ன இருக்கலாம், அடுத்த நாட்டை எப்படி தரைமட்டமாக்கலாம், அதற்கு எவ்விதமான ஒரு புதிய ஆயுதத்தை கண்டுபிடிக்கலாம்'' போன்ற எண்ணம் வருமே தவிர இரவு சாப்பாட்டைப்பற்றி சிந்திக்க மாட்டார்கள். ஏனெனில் ஏழைகளின் பணத்தை அந்த வரி, இந்தவரி என்றெல்லாம் அறவிட்டு அதனை அவ்வரசாங்கம் இவ்விஞ்ஞானிகளின் வயிற்றுப் பசிக்கு பயன்படுத்துகிறார்கள். ஆகவே அவ்விஞ்ஞானிகளுக்கு தாம் உணவு சாப்பிட்டா வாழ்கிறோம் என்பதுகூட சில வேளை தெரியாமல் இருக்கலாம். ஏனெனில் வாய்க்குவரும் உணவை உண்பதும் கழிப்பதும்தானே அவர்களது தொழில். இனி அவர்கள் தமக்கு போசணையூட்டும் அவ்வரசாங்கத்தை சந்தோசப்படுத்த அவ்வரசாங்கத்திற்கு எதிராக வரும் சக்திகளை அழிப்பதும் தடுப்பதுமே அவர்களது பணி. அன்றில் அவ்வரசாங்கத்தைவிட இன்னொரு அரசாங்கம் விண்வெளியில் உலாவருவது தமக்கு ஒரு கீழ் தன்மை போன்று விளங்கினால் அவர்களும் விண்வெளியில் உலாவருவார்கள். கண்ட பிரயோசனம் எதுகூட இல்லை. ஆனால் பாமர எளிய மக்களின் கையிலிருந்த பணம்தான் இவ்வத்தனை செயல்களுக்கும் பயன்படுத்தப்பட்டு பசி பட்டினியால் வாடி மடிகின்றனர். விஞ்ஞானிகள் அறிவில்லாமல் இல்லை. நிச்சயமாக அவர்களுக்கு அறிவுண்டு. ஆனால் பிரயோசனமான விடயங்களில் அல்லது துறைகளில் தமது அறிவை பயன்படுத்த மறந்துவிட்டார்கள். இன்றுவரை அவர்களை தட்டிக் கூறவும் யாரும் இருக்கவில்லை. ஆனால் தற்பொழுதுதான் ஏழை மக்கள் குரல் கொடுக்கின்றார்கள். இதுவரை காலமும் ஏழை மக்களின் கண்ணோட்டத்தில் அஞ்ஞானிகளாக திகழ்ந்த விஞ்ஞானிகள் கண்திறக்கிறார்கள்.

விஞ்ஞானிகளின் அறிவை உணவுற்பத்தித்துறையில் பயன்படுத்தியிருந்தால் அவர்கள் இன்று தலைவிரித்தாடும் உணவுப் பிரச்சினையை தீர்க்க வழியொன்றை கண்டுபிடிக்க முடியாமல் இருந்திருக்காது. எவ்வாறு உணவை உற்பத்தி செய்யலாம் என்பதை கண்டுபிடித்திருப்பார்கள். இன்று உணவுப்பிரச்சினைக்கு காரணம் இடப்பிரச்சினையாம். ஆனால் வடமுனையிலும் தென்முனையிலும் எவ்வளவு பரந்து விரிந்த தரைமட்டம் காணப்படுகிறது. அது பனியால் உறைந்திருக்கலாம். ஆனால் இன்று விஞ்ஞானிகள் உறைந்தபனியையே உருகச்செய்யும் ஆற்றல் பெற்றிருக்கையில் அவர்களுக்கு இப்பனி உறைவதெல்லாம் பெரிய பிரச்சினையல்ல. ஏன் பனியுறைந்த அல்லது உறையா தரைதான் உணவுற்பத்திக்கு அவசியமா? யப்பான் போன்ற நாடுகளில் கடலிலேயே கடல் தண்ணீரையே விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி உணவுற்பத்தி செய்கிறார்கள். உலகின் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கே நீரால் நிரம்பியிருக்கையில் அப்பரப்பு வெறுமனே வெட்டவெளியாக இருக்கையில் அதை ஏன் உணவுற்பத்திக்கு பயன்படுத்த முடியாது. நீரின் மேல் உணவுற்பத்தி செய்ய முடியாது? இக்கேள்விக்கு விடையளிக்கிறார்கள் யப்பான் போன்ற நாட்டு மக்கள். தாவரங்களின் வளர்ச்சிக்கோ, ஒளித்தொகுப்புக்கு மண் அல்லது நிலம் அவசியமில்லை, நீர்தான் அவசியம்.

விஞ்ஞான அறிவைகொண்டு எத்தனை புதுப்புதுவிதமான தாவரவகைகளை கண்டுபிடித்திருக்கலாம். அவ்வாறு கண்டுபிடிப்பதன் மூலம் விரைவாக

விளைச்சலை தரக்கூடிய தாவரங்களை கண்டுபிடிக்கலாம். நோய் எதிர்ப்பு சக்தி யுள்ள தாவர இனங்களை கண்டுபிடிக்க லாம். தற்போதைய உணவுப்பிரச்சினை காலகட்டத்திற்கு இவ்வாறான கண்டு பிடிப்புகள் மிக முக்கியமானவை. இல்லை யெனில் ஒருவருடம் பலவருடம் விளைச்சலுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டிய நிலவரம் ஏற்படும்; ஏற்பட்டது. ஒருவர் நடும் தாவரத்தைக் கொண்டு சிலவேளை அவருக்கே அதிலிருந்து பிரயோசனம் பெற முடியாத நிற்பந்தம் ஏற்படும். இன்று உணவுப்பிரச்சினை பலவிதத்தில் பல துறையில் தனது கிளைகளை பரப்பி விட்டு தலைவிரித்தாடுகிறது. இன்று உலக சனத்தொகையில் ஐந்து வீதமானோர் போதிய உணவையும், சத்துள்ள உணவை யும் உண்டு சுகபோக வாழ்க்கையை நடாத்துகின்றனர். இன்னும் இருபதுவீத மான மக்கள் போதிய உணவை மாத் திரம் உண்டு அரைகுறையாக தமது உண வுத் தேவையை நிவர்த்தி செய்து வாழ்க்கை நடத்துகிறார்கள். சத்துள்ள உணவை உண்ணாததால் அவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள் என்று கூறுவது ஐயம். ஏனைய மீதி எழுபத்தைந்து வீத மான மக்கள் போதிய உணவின்றி அரை குறையாக வயிற்றுப்பசியை கடமைக்காக உண்டு போக்கிக்கொள்கிறார்கள். இவ் வாறு ஒவ்வொரு துறையிலும் உள்ள உண வுப் பிரச்சினையை விஞ்ஞானிகள் ஒவ் வொரு துறையிலும் சிந்தித்து செயல் பட்டு பணிபுரிய வேண்டும்.

விஞ்ஞானிகள் தமது ஆய்வுகளை மேற் கொள்வதற்காக பாலைவனங்களையும், அண்டவெளியையும் பயன்படுத்துகிறார் கள். அதனால் சூழல் மாசடைகிறது. உதாரணமாக சொல்லப்போனால் உல கிற்கு பாதுகாப்பு போர்வையாகவே அமையும் ஓசோன்படை அழிக்கப்படுகின் றது. இதனால் சூரியனில் இருந்து வரும் நச்சுக்கதிர்கள் வளிமண்டலத்தை ஊடுருவி விலங்கு, தாவர உடலில் காணப்படும் உயிர்கலங்களை இறக்கச் செய்கிறது. இத னால் தாவரங்கள் மட்டுமல்ல பல உயி ரினங்களும் அழிய வழிவகுக்கிறது. விஞ் ஞானிகள் தமது ஒய்வை செயல்ரீதியில் பயன்படுத்தும்போது எத்துணை நகரங் கள் அழிகின்றன– எத்துணை தோட் டங்கள் அழிகின்றன. உதாரணமாக இன்று யப்பானில் ஹிரோசிமா நாகசாகி நகரங்களில் இன்றுகூட பயிரிடமுடியாத நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டனர். ஆகவே விஞ்ஞானிகள் கவன மாகவே செயல்பட வேண்டும்.

உலகை ஆக்குவதும் விஞ்ஞானிகளே
அழிப்பதும் விஞ்ஞானிகளே
விஞ்ஞானிகளை கடவுள் என்றுகூட
சொல்வதில் தவறில்லை.

A. F. A. பௌசான்
ஆண்டு *12* Sc L

With Best Compliments

from

Stafford Motor Company Limited

718/7, Maradana Road,

Colombo 10.

Tel. 598150, 595414

கட்டுரை போட்டியில் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

எனது மனதைக் கவர்ந்த காவிய நாயகன்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றியது மூத்த தமிழ் மொழி, அந்தத் தமிழினை வளஞ் செய்து நிற்கும் காப்பியங்கள் பலப்பல. காதுகளிற் குண்டலமும் மணியும் கைகளில் வளையும் கால்களிற் சிலம்பும் இடைதனில் மேகலையும் தாங்கிச் சிறந்து விளங்கும் தமிழ் அன்னையினை மெருகூட்டுவது போலப் பிறமொழிக் காப்பியங்களும் மொழி பெயர்க்கப்பட்டுத் திகழ்கின்றன. இவ்வாறாக முற்றிலும் காப்பிய மாலைகளைச் சூடியுள்ள தமிழன்னையின் கழுத்திலிருந்து, ஒரு காப்பியத்தை எடுத்து அதில் விளங்கும் ஒரு காவிய நாயகன் - நான் படித்த இலக்கியங்களுள் என் மனதைக் கவர்ந்தவன் - பற்றிக் கூறலாம் என நினைக்கின்றேன்.

தொன்று தொட்டு விளங்கிவரும் காப்பியம் - இதிகாச புராண காவியம் மகாபாரதம் ஆகும். அதில் வரும் முக்கியமான ஒரு நாயகன் கர்ணன் ஆவான். அவனே என் அடிமனது வரை சென்று நீங்காது என்றும் நிலைத்து நிற்கின்றான். அவன் என் மனதில் இடம் பிடித்ததற்கான காரணங்களோ பலப்பல. முதலில் அவனது 'நட்பு' என் மனதை உருக்கிற்று. பெற்ற தாயால் பிறந்தவுடனேயே நட்டாற்றில் விடப்பட்டவன் கர்ணன். அதிரதன் மகனாக வளர்ந்த அவனை அங்கதேச அரசனாக்கி உயர்விக்கிறான் துரியோதனன். பெற்றதாயான குந்தி, கண்ணனின் சூழ்ச்சிப்படி கர்ணனை அடைந்து தானே அவன் தாய் என்று தெரிவித்து, கர்ணனைப் பாண்டவர் பக்கம் வருமாறு இழுக்கிறாள்.

ஆயின், நட்புக்கு இலக்கணமாய்த் திகழும் கர்ணனோ, ''தாயே தாங்கள் எது கேட்பினும் தருகின்றேன். ஆயின் இப்போ கேட்ட வரத்தை மட்டும் மறந்து விடுங்கள்! துரியோதனன், என்னை இன்று, நான் இருக்கும் நிலையில் இருத்தியவன். தேரோட்டி மகனாயிருந்தவனைத் தேர்வேந்தனாக்கியவன். அவனை நட்டாற்றில் விட்டு விட்டு இப்போ நான் வருவேனாயின் அது என் நட்புடைமைக்கே இழுக்கு'' என்று கூறிப் பல்லாண்டு காலம் பாராதிருந்த தன்றாய் முதலில் கேட்ட வரத்தையே நட்பிற்காக மறுதலித்தவன் மாவீரன் கர்ணன். நட்பு போற்றும் அவனது இப்பண்பினால் அவன் என் மனதிலும் ஏனை, தமிழ்பேசும் எல்லோர் மனதிலும் நிறைந்து நிற்கின்றான்.

அடுத்து, கர்ணனின் ''கொடை'' என் மனதைக் கவர்ந்து அவனை ஒரு யர்ந்த இடத்தில் வைத்திருக்கிறது. எல்லா இலக்கியங்களையும் எடுத்துப் பார்ப்போமாகிலும் 'கொடை' என்றவுடன் நினைவில் வருபவன் கர்ணனே. அவன் தன் கொடையால் எல்லோர் மனதிலும் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டான். பாரதத்திலே அவனதுஈகையை வெளிக்கொணரும் சிறந்த பல, தியாகச் செயல்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

கர்ணனின் கவச குண்டலங்களைக் கடனாய் பெற வருகின்றான் தேவேந்திரன். வருபவன் இந்திரனே என்பதை அறிந்தும் கர்ணன் தன் உயிருக்கே ஏற்படப்போகும் ஆபத்திற்கஞ்சாமல் உடனேயே உடலுடன் கூடிப்பிறந்த தன் கவச குண்டலங்களைக் கழற்றித் தானமாக வழங்குகின்றான். தன் உயிரையும் பொருட்படுத்தாது அவன் செய்த தியாகம் தான் என்னே!

அடுத்து, பெற்றதாய் குந்தி, கர்ணனிடம் கேட்கிறாள் ''மகனே எம் பக்கம் வராவிடில் உன்னிடம் இரு வரங்கள் கேட்கிறேன். அதையாவது தருவாயா?'' என்று. மறுப்பானா கர்ணன்? ''ஆம்'' எனும் பதிலைத் தவிர வேறெதுவும் அவன் வாயால் வராதே! ''கேளுங்கள் தாயே'' என்கிறான். வஞ்சகக் கண்ணனின் வலைப்படி குந்தியும் இருவரங்களைக் கேட்கிறாள். ஒன்று நாகாஸ்திரத்தை ஒரு தடவைக்கு மேல் அர்ஜுனன் மேல் பிரயோகிக்கக்கூடாது. மற்றையது அர்ஜுனனைத் தவிர வேறெவரையும் கொல்லக் கூடாது.

அர்ஜுனனின் ஆணவமடக்கவென்றே அவதரித்தவனன்றோ கர்ண்ன். எனினும் அவனுக்காகவே வைத்திருக்கும் நாக பாணத்தை ஒரு தடவைக்கு மேல் ஏவ மாட்டேன் என்று எடுத்த மாத்திரத்தே வாக்களிக்கிறான். மேலும் ஏனைய தம்பியாரையும் தான் சாய்க்க மாட்டேன் என்று வாக்களிக்கிறான். அர்ஜுனனாலன்றி வேறெவராலும் கர்ணனைச் சாய்க்க முடியாது என்பதை அனைவருமறிவர். கர்ணனும் அறிவான். ஆயினும் அதே அர்ஜுனனுக்காக அவன் தாய் வரம் கேட்கத் தன் உயிரையும் பணயம் வைத்து அந்த வரங்களை உடனே கொடுத்த கர்ணனின் ஈகை, தியாகம் உலகுள்ளளவும் நிலைக்கும்.

போர்க்களம், கௌரவ சேனை அழிவுகளின் மத்தியில் திக்கித் திணறும் வேளை, இடிபோலத் திடீரெனக் கர்ணனின் சக்கரம் புதைகிறது. நிராயுதபாணியாக நிற்கும் கர்ணன் மேல் அம்பு மாரி பொழிகின்றான் அர்ஜுனன். அவ்வேளையும் கர்ணன் செய்த தருமம் அவனது உயிரைக் காத்து நிற்கிறது. அவ்வேளை கண்ணனே மாறுவேடத்தில் அந்தணனாகச் சென்று கர்ணனிடம் இரந்து நிற்கிறான். இறுதிவேளையிலும் இல்லையெனாது குருதியையே தருமமாக்கித் தானமாய்த் தன் தருமமனைத்தையும் வழங்குகின்றான் கர்ணன். இறுதிவேளை! உயிர்பற்றி நிற்கும் ஒரே கொழுகொம்பு! எனினும் அஞ்சாது உயிரைத் துச்சமென மதித்து வந்தவர்க்கு இல்லையெனாது வழங்குந் தன் பண்பிலிருந்து இறங்காது தானமாய்த் தருமமனைத்தையும் வழங்கிய கர்ணன் கொடைத் தன்மை தான் என்னே! தியாகம் தான் என்னே''

இவ்வாறாக, தன் நட்பு போற்றும் இயல்பாலும் கொடையாலும் என்னை இக் கர்ணன் என்னும் காவிய நாயகன் கவர்ந்துள்ளான். என்னை மாத்திரமல்ல! உலகெங்கும் பரந்து வாழும் இலக்கிய நெஞ்சங்கள் – அதிலும் குறிப்பாகத் தமிழ் நெஞ்சங்கள் – அனைத்திலும் கர்மவீரன் கர்ணன் என்றும் நிறைந்திருப்பான்.

எஸ். நிலக்ஷன்,
ஆண்டு - 11 Q

With Best Compliments

from

DELMON HOSPITAL

AYSHA HOSPITAL CARRIERS & TOURS (Pvt) Ltd.

258, GALLE ROAD,

COLOMBO - 06.

Tel : 580343, 503763, 586726, 591308, 503762, 501438.

With Best Compliments

From

MILK INDUSTRIES OF LANKA CO., LTD.

45, Nawala Road, Narahenpita,

Colombo - 5.

Sri Lanka.

P. O. Box 1109, Colombo, Sri Lanka.

Cable:- MILCO

Tel:- 582331 & 2, 586174, 583341, 586667

கட்டுரை போட்டியில் கீழ்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

நான் விரும்பும் ஈழத்துத் தமிழ் புலவர்

நான் விரும்பும் பெரியார் ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆவார். இவர் இந்தியா தந்த மகாகவிஞர் இவரை நினைக்காத மனமே இல்லை. இவரால் இப்பொழுது எந்நாடுகளிலும் ஸ்ரீஇராமகிருஷ்ண மடங்கள் உண்டு. இது அநாதை பிள்ளைகளுக்காகவும், சைவத்து பிள்ளைகளின் நலத்துக்காகவும், அவர்களது எதிர்காலத்திற்காகவும் உண்டாக்கப்பட்டது.

ஸ்ரீ இராம கிருஷ்ணனின் பிறப்பிடம் வட இந்தியாவிலுள்ள காமர்புகூர்· இவரது தந்தை ஒரு பிராமணர். பெயர் ஹ்திராம் சட்டர்ஜி ஆவார். இவரது மனைவியின் பெயர் சந்திரமணி அம்மையார் ஆவார்.

ஒரு நாள் இவரது தந்தை வெளியூருக்கு சென்றிருந்தார். அப்போது அவருடைய மனைவி காமர்புகூரில் உள்ள கதாயர் என்ற கோயிலுக்கு சென்றிருந்தார் அப்போது இறைவனின் அருளால் தனது உடம்புக்குள் ஏதோ ஒளிபோவதை சந்திரமணி அம்மையார் உணர்ந்தார். இதன் பிறகு பிறந்தவரே ஸ்ரீ இராம கிருஷ்ணர். இவர் 1836 ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் தெய்வக் குழந்தையல்லவா, ஆதலால் இவருக்கு காமர்புகூரிலுள்ள இறைவனின் திருநாமத்தையே சூட்டினர்.

இவர் பிறந்தவுடன் தாதி அவருடைய அம்மாவை கவனித்து விட்டு குழந்தையை எடுக்கச் சென்றார். அப்போது குழந்தையின் மேல் முழுவதும் திருநீறு பூச்சு காணப்பட்டது.

பின் இவர் ஏழாம் வயது பூநூல் போடும் சடங்குக்கு ஆயத்தமானார். அப்போது பெரியார்களும் எல்லா பூசாரிகளும் வீற்றிருந்தனர். அப்போது பிள்ளை உங்களுக்கு தெரிந்தவருமான இவர் தமது தாயுடன் நெருங்கிப் பழகியவரும் தமக்கு இரண்டாவது அன்னையாக அன்பு காட்டியவருமான கொல்லர் குலமாதினிடம் ''பிச்சைக்கு போவேன்'' என்றார். பெரியார்களுக்கும் பூசாரியார்களுக்கும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்கினர்.

இவர் எந்நாளும் அவ்வூரிலுள்ள மடம் ஒன்றிற்கு செல்லுவார். அங்கு வரும் அடியார்களுடன் இறையுணர்வு பற்றி பேசுவார். அப்போது கோவண அடியாரைக் கண்டார். என்ன ஆனதோ தெரியவில்லை உடனே தன் புத்தம் புதிய வேட்டியை இரண்டாக கிழித்து கோவண அடியார்கள் மாதிரி உடுத்தார். உடனே தன் அம்மாவிடம் சென்று தான் சந்நியாசியாகி விட்டேன் என்றார்· அம்மாவின் கண் கலங்கியது இவர் தெய்வ பிறவியல்லவா.

ஒரு நாள் இவர் அவ்வூரிலுள்ள விசாலாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தார் அங்கு பெண்கள் பஜனை பாடல்களை பாடினர். அவ் இன்னிசைபாட்டிலே இவர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார். அவருடைய அம்மா பதறிப் போனாள். அங்கு வந்த ஒரு மூதாட்டி இவர் காதில் அம்பாளின், திருநாமத்தை உச்சரித்தார். உடனே இவர் எழுந்து கொண்டார்.

இவருக்கு நல்ல கலைத்திறன் உண்டு· ஒவ்வொரு நாளும் இவர் மண்ணினால் சிலைகளை செய்து விற்று வந்தார். அவற்றை தன் ஏழை நண்பர்களுக்கு தின்பண்டங்களை வாங்கி கொடுப்பார்.

17 ஆம் வயது வந்தவுடன் இவருடைய பெற்றோர் இவருக்கு கல்யாணம் செய்து வைக்க எண்ணினார்கள். என்ன ஆச்சரியம் இவர் தமக்கு ஒரு துணைவியை தேடிக்கொண்டார். இவரது பெயர் சாரதா அம்மையார். இவருக்கு வயது

ஐந்தாகும். இவர் தன் மனைவியை வீட்டில் விட்டு விட்டு கோயிலுக்குச் சென்று கோயில் திருப்பணிகளை செய்தார். மத்தியானம் ஆகியவுடன் விசிறியால் கடவுளுக்கு வீசுவார். தாம்பூலம் கொடுப்பார். தின்பண்டங்களைக் கொடுப்பார். அவ்வேளையில் பைரவி அம்மையாரும், கோதாபுரி என்ற சாதுவும் இவருக்கு குருவாக நின்றுகல்வியை கற்றுக் கொடுத்தனர்.

இவர் படித்தவுடன் இவருடைய மனைவியே முதல் சீடனாக இருந்தாள். இவருடைய சீடர்களுள் சுவாமி விபுலானந்தர் முதலிடம் பெறுவார். இவர் எங்கு சென்றாலும் தெய்வபாட்டும், பக்திபாட்டும், இவருக்கு மனப்பாடம் ஆகிவிடும்.

இவர் பல மடங்களை நியமித்து பொது தொண்டில் ஈடுபட்டுள்ளார். இவர் ஏழைகளுக்கு ஆதரவும் அன்பும் காட்டி வந்தார். இவருக்கு ஜாதி, மத, பேதமில்லை. எல்லாருடனும் பழகுவார்

இவர் தெய்வ பணிகளை செய்து வந்தமையால் இவரை ஸ்ரீ இராம கிருஷ்ணர் என்று அழைத்தனர். இவர் நாடகங்களை தன் நண்பர்களோடு நடித்து வந்தார். ஒரு நாள் இவருக்கு சிவனின் வேடம் கொடுக்கப்பட்டது. இவர் புலித் தோலை அணிந்து சூலாயுதத்துடன் வந்து மேடையில் நின்றார். எல்லோரும் பிரமித்து போனார்கள். அப்பொழுது இவர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார். இவர் எழுந்திருக்க ஒரு கிழமையானது. இவர் பல பொது நிகழ்ச்சிகளை செய்துள்ளார்.

இவர் 1886 ஆம் ஆண்டு இப்பூவுலகை விட்டு நீத்தார். இது எமக்கு ஒரு தூண் விழுந்த மாதிரி. இப்பொழுது பல மடங்கள் இவரது பெயரைக் கொண்டு பொது சேவைகளில் ஈடுபடுகின்றன.

சிறி. தினேஷ்
ஆண்டு 8F

With Best Compliments From

නිව් යුනික් ග්‍රොසරිස්

New Unic Groceries

General Merchants & Commission agents Wholesale & Retail Dealers in Groceries

27, Olcott Mawatha, Galle.

Telephone: 09-22935

WITH BEST COMPLIMENTS FROM

Vino's Video Vision

5, 1/7 Kotahena Super Market,

Colombo - 13.

WITH BEST COMPLIMENTS FROM

Gold Stars Tailors

51/14, KOTAHENA MARKET,

COLOMBO - 13.

T. P. 438965

With Best Compliments from

ELEPHANT HOUSE SUPERMARKET

QUALITY AT AFFORDABLE PRICE

Ceylon Cold Stores Limited

No. 1, Justice Akbar Mawatha,

COLOMBO – 02.

அவன் காதலுக்கு யார்தான் சாட்சி

கற்கச் சென்ற இடத்து
காளையவன் கட்டழகு கண்டு
களியாட்டம் காணச் சென்ற அவனிடத்து
அழகு ரோஜா நீட்டி
"என் மென்மனம் உனக்கே'' என்றாய்
அதை காதல் என கண்டது அவன் குற்றமா?
இல்லை காண வைத்தது உன் குற்றமா?

பிறந்தநாள் கொண்டாடினாய்
பித்தன் அவனை வாவென்றழைத்தாய்
மாடிக்கு இட்டுச் சென்றாய்
மடந்தையர் கூட்டம் கலைத்தாய்
நாம் இருப்பது தனிமை என்றாய்
உன் இதழ் அவன் வதனம் பதித்தாய்
உள்ளத்து உணர்ச்சிகளை ஊற்றெடுக்க செய்தாய்

பரிசுத்த பலி பூஜை அன்று
புதுப்பாடம் படிப்போம் என்றாய்
கோயில் சுவரெல்லாம் கண் என்று
மறைவிடம் கூட்டி சென்றாய்
மன்மத லீலையின் மர்மம் என்னவென்று
அவன் பச்சையுள்ளம் புரியவைத்தாய்

"கன்னி என் பெயருக்கு குறை வைத்தான்'' என்றாய்·ஆனால்
காளையவன் உன் காதலர் பட்டியலில்
காணுமிடம் கூறவில்லையே!
புது புளியங்கொம்பு கிடைத்ததா!
அவனை பிரிந்து மட்டும் சென்றிருக்கலாம்
ஏனம்மா பிழிந்து விட்டும் செல்கிறாய்?

காதலிற்கு களங்கம் கற்பித்தாய்
போதாக்குறைக்கு புதுக்கவிதையும் பாடினாய்
உன் பெண்மைக்கு புதுமை விளக்கமும் கூறினாய்
பித்தன் அவனைப் பொய்யின் பிறப்பிடம் என்கிறாய்

"அண்ணன் தம்பி அற்றிருப்பதாலோ என்னவோ
என் மனம் உனக்கு சுத்த சூனியம்''
களங்கமில்லா உறவுக்கு கறை சேர்த்த உனக்கு
பெண்ணிடத்து பிறந்த அவன் தரும் விளக்கம்

வேலிக்கு ஓணான் சாட்சி!
அவன் அருமைக் காதலுக்கு உன் அக்காள் சாட்சி!

எஸ். ரமேஸ்

ஈ ஜி. ஜே. வேதநாயகம்

போட்டி முடிவுகள்

(1) பாடசாலையினுள் நடாத்தப்பட்ட போட்டிகள்

கீழ் பிரிவு

கட்டுரை

சிறிதினேஷ்	8F
தா. மு. ஷாபீக்	7Q
S. S. கஜ்தனன்	8F

நாவன்மை

M. A. இன்திகாப்அலி	8Q
K. பிரபானந்தன்	7R
A. I. பாயிஸ்	7R

மத்திய பிரிவு

கட்டுரை

சு. நிலக்ஷன்	11Q
பொ. இளங்கோ	11Q
கு. கணேந்திரன்	10Q

நாவன்மை

கு. கணேந்திரன்	10Q
து. அசோகன்	10Q

மேற்பிரிவு

கட்டுரை

A. F. A. பௌசான்	12L
M. A. சர்வேந்திரா	13G
றொட்னி L.R. பாலசிங்கம்	12K

நாவன்மை

பா. சந்திரபிரகாஷ்	13L
சாகிர் நவாஸ்	12C
R. ஜெயந்தன்	13D

(2) கல்லூரி விவாதப்போட்டி முடிவுகள்

1ம் இடம்: Boake *இல்லம்*

பா. சந்திரபிரகாஷ் – *தலைவர்*
சா. நவீனன் அன்ரனிப்பிள்ளை
M. A. ஆஷிக்
R. பிரபுராம்
A. நரேந்திரன்

2ம் இடம்: Harward *இல்லம்*

E. G. J. வேதநாயகம் – *தலைவர்*
யோ. முகுந்தன்
A. C. M. சம்யூன்
து. அசோகன்
ந. விக்டர் அன்ரனிப்பிள்ளை
K கங்காதரன்

கல்லூரி விவாதக்குழு

1. பா. சந்திரபிரகாஷ்
2. E. G. J. வேதநாயகம்
3. M. A. ஆஷிக்
4. M. சர்வேந்திரா
5. சி. ரமேஷ்
6. A. நரேந்திரன்
7. ந. விக்டர் அன்ரனிப்பிள்ளை

(3) பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகள்

மத்திய பிரிவு

கட்டுரை

பெயர்:	பாடசாலை:
பரியா ஜலீல்	முஸ்லிம் மகளிர் கல்லூரி
N. H. C. சன்ஜே	இசிபத்தன மகா வித்தியாலயம்
A. J. சுபானந்தன்	புனித பெனடிக் கல்லூரி

நாவன்மை

பௌமியா நிலாம்	முஸ்லிம் மகளிர் கல்லூரி
லவாஞ்சலி நல்லையா	மெதடிஸ் கல்லூரி
S. பிரகாஷ்	இந்துக்கல்லூரி

மேற்பிரிவு

கட்டுரை

S. தேவநந்தினி	இந்து மகளிர் கல்லூரி
நோபட் அனஸ்ட்டன்	புனித பேதுரு கல்லூரி
T. பார்த்திபன்	இசிபத்தன மகா வித்தியாலயம்

நாவன்மை

ஆனந்தி கனகரட்னம்	திருக்குடும்ப கன்னியர்மடம்
மூஃப்தியா ஹமீட்	முஸ்லிம் மகளிர் கல்லூரி

தமிழ்த் தின போட்டி

கோட்டா மட்டம் (தெற்கு)

(29-02-92)

1 ம் பிரிவு (4, 5)

வாசிப்பு	செ. கார்த்திக்	5H	3 ம் இடம்

2 ம் பிரிவு (6, 7, 8)

ஆக்கம்	தா. மு. ஷாபிக்	7Q	1 ம் இடம்
உறுப்பெழுத்து	தா. மு. ஷாபிக்	7Q	1 ம் இடம்

83

3 ம் பிரிவு (ஆண்டு 9, 10, 11)

கட்டுரை	து. அசோகன்	10Q	1 ம் இடம்
பேச்சு	து. அசோகன்	10Q	3 ம் இடம்
கவிதை	சு. நிலக்ஷன்	11Q	1 ம் இடம்

4 ம் பிரிவு (ஆண்டு 12, 13)

பேச்சு	பா. சந்திரபிரகாஷ்	13L	1 ம் இடம்

விவாதம் - திறந்த பிரிவு

றோயல்கல்லூரி 1 ம் இடத்தைப் பெற்றது

விவாதக்குழு

பா. சந்திரபிரகாஷ் – தலைவர்

M. சர்வேந்திரா

E. G. J. வேதநாயகம்

மாகாண மட்டம் (மேல் மாகாணம்)

(16-06-92)

3 ம் பிரிவு

கட்டுரை	து. அசோகன்	10Q	1 ம் இடம்

4 ம் பிரிவு

பேச்சு	பா. சந்திரபிரகாஷ்	13L	2 ம் இடம்

★ து. அசோகன் அகில இலங்கை போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

விபுலானந்தர் நூற்றாண்டு விழா போட்டிகள்

கவிதை - (கீழ்ப்பிரிவு)

து. அசோகன்	10Q	2 ம் இடம்
சு. நிலக்ஷன்	11Q	3 ம் இடம்

" தமிழன்னை தாள்பணிந்தே நன்றி சொன்னோம் மனம் கனிந்தே!"

★ சிறார்களாகிய எமது அன்பு அழைப்பினை ஏற்று வந்து பேரார்வத்துடன் இவ் விழாவை தலைமைதாங்கி, சிறப்பாக நடாத்தி வைத்த மாண்புமிகு அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி அவர்களுக்கும்,

★ எம் தமிழ்ப்பணி வளர ஊக்கமும் ஆதரவும் தந்தது மட்டுமல்லாமல் எம் இனிய அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அதிபர் திரு. பு. சூரியாராச்சி அவர்களுக்கும்,

★ எம்மை வழிநடத்தி இப்பணியை செய்ய உறுதுணையாக நின்ற ஆசிரியர் குழாத்திற்கும்,

★ விழாவை நடாத்துவதற்கு தாமாகவே முன்வந்து சகல வழிகளிலும் தோள் கொடுத்த பழைய மாணவர்களுக்கும்,

★ தன்னலம் பாராது பல வழிகளிலும் உதவியளித்த முன்னைய மாணவத் தலைவர் செல்வன் ருஷ்டி அமீருக்கும்,

★ வேத்தியர் கல்லூரி மாணவராம் எம் அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்து கொண்ட வேற்றுப்பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவருக்கும்,

★ தமிழ் நயமாம் இப்மலருக்கு விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர் களுக்கும்,

★ இவ்வினிய இதழ்தனை குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு வழங்கிய குமரன் அச்சகத்தாருக்கும், யூனியார்ட்ஸ் அச்சகத்தாருக்கும்,

★ இவ்விழாவினை ஒலி ஒளி கொண்டு அலங்கரித்த பராக்கிரம குழுவின ருக்கும்,

★ இவ்விழாவின் இன்னிசை நிகழ்ச்சிக்கு இசைக்கருவிகளை வழங்கிய சவுன்ட் என்டபிறைசஸ் ஸ்தாபனத்தாருக்கும்,

★ இவ்வினிய மாலைப்பொழுதினிலே இவ்விழா காண இன்முகத்துடன் வருகை தந்த இரசிகப் பெருமக்கள் அனைவருக்கும்,

பணிவுடன் நன்றி பகர்கின்றோம்!

றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்.

With Best Compliments

from

ROSEC TRADING CO.

Dept. & Corporation Suppliers, Electrical & Hardware Merchants

44, Quarry Road,
Colombo - 12.

Telephone : 29963
Fax : 432346
Telex : 23040 / 23041
GEETHA CE

Bankers : HATTON NATIONAL BANK LTD.

Aluth Kade Branch

Unie-Arts